

புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஜூலை 03, 2008 புரட்சி 7 முழக்கம் 27 விலை : ரூ.2.50


### ‘மனம் புண்படும்’ பார்ப்பனர் பார்வைக்கு...

## கடவுள் ‘சக்தி’ கப்பல் ஏறுகிறது

‘பக்தர்களைப் புண்படுத்துவதா?’ என்று கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறது. ராமகோபாலன், துக்ளக் சோ, இல.கணேசன் போன்ற பார்ப்பன கூட்டம், தமிழ்நாட்டில் ‘சமஸ்கிருத மந்திரம்’ ஓதி - ‘கடவுளுக்கு சக்தியை’ ஏற்றி பார்ப்பனர்களால் ‘பிரதிஷ்டை’ செய்யப்பட்ட பகவான்கள் திருட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்களே. தாங்கள் திருடப்படுவதை தங்களின் ‘சக்தி’யைக் கொண்டு தடுக்கும் சக்தியை - கடவுள்களே இழந்து நிற்கிறார்களே. இதற்கு இந்தப் பார்ப்பனர்கள் என்ன பதில் கூறப் போகிறார்கள்? ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (ஜூன் 26) இது பற்றி ஒரு பக்க அளவில் விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த சிலைகளைத் திருடுவது யார்? நாத்திகர்களா? பெரியார் இயக்கத்தினரா? அல்ல. மாறாக ‘இந்து’வாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் கூட்டம் தான், இந்தத் திருட்டுகளை நடத்திக் கொண்டிருக்கிறது. 12 ஆம் நூற்றாண்டு காலத்தின் ‘கடவுள்களுக்குத்தான்’ வெளிநாட்டு சந்தையில் அதிக விலைக்கு விற்பனையாவதால் அந்தக் கடவுள்களே குறி வைத்து கடத்தப்படுகின்றன. எல்லா மாவட்டத்திலும் கடவுளை கடத்தும் கும்பல் தீவிரமாக செயல்படுகிறது. இதில் பெரும் சந்தை - காரைக்குடிதான். இதற்கு அடுத்ததாக சென்னை, மதுரை, புவையிலும் கடவுள் வியாபாரம் நடக்கிறது.

2008 ஆம் ஆண்டில் அரியலூர் மாவட்டத்தில் 18 கடவுள்களும், 2007 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டத்தில் 3 கடவுளர்களும், திருவாரூர் மாவட்டத்தில் 7 கடவுளர்களும், தஞ்சை மாவட்டத்தில் 3 கடவுளர்களும் திருட்டுப் போய்விட்டனர்.

முதலில் திருடப்பட்ட கடவுளர்கள் மும்பை அல்லது டெல்லி நகருக்கு கடத்தப்படுகிறார்கள். அங்கு சில காலம் வைக்கப்பட்டு பாங்காக் நகருக்கு கொண்டு போகப்படுகிறார்கள். பாங்காக்கிலிருந்து கப்பலில் ஏற்றி அய்ரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட உலகநாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கு பெரும் வசதி படைத்தவர்கள் வீட்டில் அலங்காரப் பொருள்களாக தமிழக பக்தர்களின் வழிபாட்டுக்குரிய கடவுள்கள் மாறிப் போய்விடுகின்றனர். திருடர்கள் திருடும் போதும், கடத்தும்போதும் - சமஸ்கிருத மந்திரத்தால் ‘பிரதிஷ்டை’ செய்யப்பட்டு, ‘உயிரூட்டப்பட்ட’ கடவுள்கள், சக்தியற்றவைகளாகி, விற்பனைப் பண்டங்களாகவே உள்ளன.

முதலில் கோயிலில் ‘பகவான்’களை திருடும் திருடர்கள் அந்த கடவுள்களை இடைத் தரகர்களிடம் ஒப்படைக்கிறார்கள். இடைத்தரகர்கள் காரைக் குடியில்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இடைத் தரகர் இந்த சிலையைப் படம் பிடித்து, அதன் வரலாற்றுக் குறிப்புகளை எழுதி தனக்கு அடுத்த நிலையில் உள்ள தரகருக்கு அனுப்புகிறார். அவர் பகவானுக்கான விலையை மதிப்பீடு செய்து நிர்ணயிக்கிறார். மூன்றவாது நிலையில் உள்ள தரகர் பணம் கொடுத்து வாங்கி, பம்பாய் அல்லது டெல்லிக்கு கடத்துகிறார். திருடனிடமிருந்து முதலில் 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரத்துக்கு கைமாறும் கடவுள் முதல் தரகரிடம் ரூ.1 லட்சமாக விலை உயர்ந்து, இரண்டாவது தரகரிடம் 10 அல்லது 15 லட்சமாகி, மூன்றாவது தரகர் வழியாக 50 லட்சம், ஒரு கோடிக்கு வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகிறது. சிலை செய்யப்பட்ட காலம், எடை, அளவு ஆகியவற்றின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 12 ஆம் நூற்றாண்டு கடவுள்களுக்குத் தான் சர்வதேச சந்தையில் விலை அதிகம் என்பதால் திருடர்கள் தஞ்சை, திருவாரூர், மதுரை, காஞ்சிபுரம் பகுதிகளிலேயே அதிகம் குறிவைக்கிறார்கள்.

100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ‘கடவுளர்களுக்கு’ சரக்கு லாரிகளில் ஏற்ற வேண்டுமானால், மாநில அரசின் அனுமதி தேவை. ஆனாலும் சரக்குகளை ஏற்றிச் செல்வோர் இது பற்றி கவலைப்படுவதில்லை. அரசு அனுமதியின்றியே குறுக்கு வழியில் கடத்தல் நடக்கிறது.

இந்தத் தகவல்களையெல்லாம் தமிழக காவல் துறையில் சிலை திருட்டுக் கண்டுபிடிப்புக்காக உள்ள தனிப் பிரிவு அதிகாரிகளிடமிருந்து பெற்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு வெளியிட்டுள்ளது.

இந்தப் பிரிவில் 25 காவல் துறை அதிகாரிகள் பணிபுரிகிறார்கள். தமிழ்நாடு முழுதும் 33000 கோயில்கள் உள்ளன. இந்தக் கடவுள் திருட்டுகள் பற்றி தகவல் தெரிவிப்பதற்காக காவல்துறை, சில நபர்களை வைத்திருக்கிறது. பொதுவாக பணக்கார மார்வாடிகள் போல் காவல்துறையினர் வேடம் போட்டு, தரகர்களிடம் பேரம் பேசி, பணம் தரும் போது, குற்றவாளிகளை பிடிக்கிறார்கள்.

### முஸ்லீம் அதிகாரி

இந்த சிலை திருட்டு தடுப்புப் பிரிவில் பணியாற்றும் காதர்பாட்சா என்ற முஸ்லீம் ஆய்வாளர் தான், மிக அதிக அளவில், இந்து கடவுளர்களின் திருட்டுக்களைக் கண்டுபிடித்துள்ளார். அதிக எண்ணிக்கையில் ‘கடவுள்’ திருட்டுகளைக் கண்டு பிடித்து, குற்றவாளிகளை கைது செய்த பெருமை இவரையே சாரும். கோயில் பாதுகாப்புப் படையில் பணியாற்றும் ஓய்வுப் பெற்ற ராணுவத்தினரும், போலீசாரும் 50 வயதைக் கடந்தவர்கள், இவர்களால் ‘கடவுள்’களைக் காப்பாற்ற முடியவில்லை. கடவுள்கள் தப்ப விடாமல் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

*(ஓடிப் போகும் இந்துக் கடவுள்களை முஸ்லீம் அதிகாரி எப்படி பிடிக்கலாம் என்று, இந்து முன்னணியினர் கேள்வி கேட்க மாட்டார்கள் என்று நம்புவோமாக!)*

## நம்பு; நடக்கும் என்பது ஆத்திகம்; நடக்கட்டும், நம்புகிறேன் என்பது நாத்திகம்



கோவையில் மே 14 ஆம் தேதி நடைபெற்ற நடிகவேள் எம்.ஆர். ராதா நூற்றாண்டு விழாவில் இயக்குனர் சுந்தரராஜன் பங்கேற்று ‘நான் எப்போதும் கடவுள் மறுப்பாளன். அதை செல்லுமிடமெல்லாம் பரப்பி வருகிறேன்’ என்று பெருமையுடன் குறிப்பிட்டார். அவரது உரை:

கடவுள் இல்லை; கடவுள் இல்லைன்னு என் வாழ்க்கையில் நான் இதுவரைக்கும் சொன்னதே கிடையாது. கடவுள் மறுப்புக் கொள்கை உடையவன் தான். கடவுள் இல்லவே இல்லை என்கிறதுதான் எனது கொள்கை. அதிலே எனக்கு இரண்டாவது கருத்து வந்ததே கிடையாது. ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் என்ன வித்தியாசம். முதலில் அதை தெளிவாக சொல்லனும். “நம்புங்கள் நாராயணனை, நம்புங்கள் கடவுளை, நம்புங்கள் நடக்கும்” என்கிறான் ஆத்திகன். நடக்கட்டும் நம்புகிறேன் என்கிறான் நாத்திகன். நம்பியவனுக்கு நடக்கவே இல்லையே. இந்தக் கொள்கைகளை எம்.ஆர்.ராதா சிறப்பாக சினிமாவில் சொல்லி இருக்கிறார். நிறைய பேர் நிறைய விதமாக சொல்லி இருக்கிறார்கள்.

எம்.ஆர்.ராதா அவர்கள் என் படத்தில் நடிக்கவில்லை என்பது வருத்தமான செய்தி. அவர் பிறந்து 50, 60 வருஷம் கழித்து நான் பொறந்திட்டேன். அதனால் வேற வழியில்லை. ஆனா அவர் பையன் ராதாரவியை நடிக்க வைச்சதிலே எனக்கு மகிழ்ச்சி. கடவுள் மறுப்புக் கொள்கை எனக்கு வந்ததற்கு காரணமே, என்னுடைய 10வது வயசுலே எங்க தாத்தா கையைப் பிடிச்சுட்டு அவினாசி தேர்த் திருவிழாவுக்கு அழைத்துப் போனார். அப்பவெல்லாம் பதினெட்டுப் பட்டி கிராமமும் அந்தத் திருவிழாவிலே திரண்டு இருக்கும். அவினாசி தேரை 18 கிராமமும் சேர்ந்து இழுத்ததாத்தான் வந்து சேரும்னு அந்தத் தேரை இழுத்துக் கோயில்லே கொண்டு வந்து சேர்த்தாங்க. தாழ்த்தப்பட்டவங்க உயர்ந்த சாதிக்காரங்க எல்லாம் இழுத்து வந்து சேர்த்தாங்க. கோயில்கிட்ட தேர் வந்தவுடன், சில பேரை தள்ளி வைத்து கோயிலுக்குள்ளே எல்லோரும் வரக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க. முக்கியமா, நாயக்கரு, கவுண்டரு, செட்டியாரு, பிள்ளைமாரு, அய்யரு, இந்த மாதிரி கோஷ்டி உள்ளேப் போகுது. உள்ள போனதுக்கு அப்புறம் கர்ப்பகக் கிரகத்துக்குள்ள போகும்போது அய்யரு மட்டும் உள்ளே போறாரு. மீதி ஆளுங்களை யெல்லாம் வெளியிலேயே நிறுத்திட்டான். அந்த சம்பவம் 10 வயசுலே பார்த்த உடனே என்னை பாதிச்சிடுச்சு. ஏன் தாத்தா இவங்களையெல்லாம் கேட்கறதுக்கு ஆளே இல்லையா? என்று கேட்டேன். இல்லை இல்லை இவங்களையெல்லாம் கேட்கறதுக்கு ஓர் ஆள் இருக்கிறார். அவர்தாண்டா ‘பெரியார்’ அப்படீன்னு தாத்தா சொன்னார். இன்னிக்கு

4 ஆம் பக்கம்

### எதுக்கு லைசென்சு ?

எம்.ஆர்.ராதா எவ்வளவு துணிவான ஆளுங்கிறதுக்கு ஒரு உதாரணம். எம்.ஜி.ஆரை சுட்டுட்டாரு. எம்.ஆர்.ராதா கோர்ட்டிலே நிக்குறாரு. கோர்ட்டிலே நீதிபதி கேட்கிறாரு. அவரை சுட்ட துப்பாக்கிக்கு லைசென்ஸ் வாங்கலே. ஏன் அந்த துப்பாக்கிக்கு லைசென்ஸ் வாங்கலேன்னு கேட்கிறாரு. எம்.ஜி.ஆரை சுட்டேன். அவரும் சாகலை. எனக்கு நானே சுட்டேன். நானும் சாகலை. அதுக்கப்புறம் அந்தத் துப்பாக்கிக்கு எதுக்கு லைசென்ஸ் எடுக்கணும் என்றார் எம்.ஆர்.ராதா.

**– இயக்குனர் சுந்தர்ராசன் உரையிலிருந்து**

## தலையங்கம்

### தமிழகம் அமெரிக்கக் குப்பைத் தொட்டியா?

'உலகமயம்' என்ற கொள்கையை வரவேற்று நாட்டை கூறு போட்டு விற்று வருகிறது, இந்தியப் பார்ப்பன ஆளும் வர்க்கம். தமிழ்நாடும், இதில் தப்ப முடியாத நிலை! தமிழ் நாட்டில் அமெரிக்காவின் குப்பைகள் கொட்டப்படுவதற்கு உலகமயக் கொள்கை வழி வகுத்திருக்கிறது என்பது பலருக்கும் வியப்பாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை!

இந்தியன் டொபாக்கோ கம்பெனி (அய்.டி.சி.) எனும் பெரும் தொழில் நிறுவனம், சிகரெட் உட்பட பல்வேறு தயாரிப்புகளை செய்து வருகிறது. இந்த நிறுவனம் வெளி நாட்டிலிருந்து குப்பைக் கழிவுகளை இறக்குமதி செய்து வருகிறது. காகிதக் குவளை தயாரிப்புக்காக, இவை இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறப்பட்டாலும், பல வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தக் குப்பைகளை தங்கள் நாடுகளில் கொட்டாமல் இருப்பதற்கே டன் டன்னாக ஏற்றுமதி செய்கின்றன.

இதன் படி, சுற்றுச் சூழலை பாதிக்கக் கூடிய அமெரிக்காவின் எச்சில் இலைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், மருத்துவக் கழிவுகள், கக்கூஸ் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் போன்ற குப்பைகள் கப்பல்களில் தமிழ்நாட்டுக்கு அனுப்பப்படுகின்றன. அய்.டி.சி. நிறுவனம் அந்தக் குப்பைகளை கோவையைச் சுற்றியுள்ள மலையடிவாரக் காட்டுப் பகுதிக்குள் இரவோடு இரவாக கண்டெய்னரில் ஏற்றிப் போய் குழி தோண்டி கொட்டி புதைத்து வருகிறது. இப்போது இது தொடர்பான வழக்கு ஒன்று உயர்நீதிமன்றத்தின் விசாரணையில் இருந்து வருகிறது. 2005 ஆம் ஆண்டில் லண்டன் நிறுவனம் ஒன்று, இதே போல் குப்பைகளை 6 கண்டெய்னரில் அனுப்பிய போது, சென்னை துறைமுகத்தில் சோதனையில், ஆபத்தை விளைவுக்கும் கழிவுகள் இருப்பது கண்டறியப்பட்டு, இறக்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அமெரிக்காவில் நியுஜெர்சி நகரசபை திரட்டிய குப்பைக் கழிவுகளும் இதில் உள்ளன. குட்டு உடைந்ததால் திணறிப் போன அய்.டி.சி. நிறுவனம், அதை அய்க்கிய அரபு எமிரெட்டிலுள்ள ஒரு நிறுவனத்துக்கு அனுப்ப முயன்றது. அந்த நாடும் இறக்குமதிக்கு அனுமதி மறுத்தது. மீண்டும் தூத்துக்குடி துறை முகத்துக்கே 'குப்பைக் கழிவு' திரும்பியது. 3 ஆண்டுகளாக கண்டெய்னரிலிருந்து இறக்கப்படாமல் 'தவித்து வரும்' அந்தக் கழிவுகளை, தமிழகத்தில் இறக்க அனுமதி கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு செய்துள்ளது அய்.டி.சி. தமிழ் நாட்டை அமெரிக்க குப்பைக் கழிவுகளின் புகலிடமாக்கும் அவலம் அரங்கேறி கொண்டிருக்கிறது.

இது வெளிவந்திருக்கும் உண்மை; இன்னும் வெளிவராத உண்மைகள் எவ்வளவோ?

## வரப்பெற்றோம்

'ஏமாற்றும் சாமியார்கள்' எனும் தலைப்பில் 'சுவடு' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையை நூலாக வெளியிட்டுள்ளது 'அறிவுச் சுடர்' ஆசிரியர் இளநம்பி. 16 பக்கங்கள். விலை ரூ.5.

### 1) 'ஏமாற்றும் சாமியார்கள்'

"ஏற்றத்தாழ்வான, அநீதியான இச்சமூக அமைப்பே மனிதர்களின் துன்ப துயரங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது. இந்த அமைப்பை மாற்றாத வரை துயரங்களுக்கும் விடிவில்லை. ஆன்மீகவாதிகளோ இதற்கு நேர் எதிராக நிலவும் சமூக அமைப்பைத் தக்க வைப்பதில்தான் கருத்தாய் இருக்கிறார்கள். அதனாலேயே தனிமனிதனின் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வக்கற்றும் இருக்கிறார்கள்.

தங்களுக்கு வரும் கோடிக்கணக்கான நன்கொடைப் பணம் எத்தகைய வழிகளில் சம்பாதிக்கப்பட்டது என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை. ஒரு வேளை, "நேர்மையற்ற முறையில் வரும் பணத்தையும், கருப்புப் பணத்தையும் ஏற்க மாட்டோம்" என்று அவர்கள் அறிவித்தால் அடுத்த கனமே தெருவுக்கு வந்துவிடுவார்கள். ஆன்மீக நிறுவனங்கள் உயிர் வாழ்வதன் அச்சாணியே இதுதானென்றால் தனிமனிதனின் நன்னடத்தைக்கும், நிம்மதிக்கும் எப்படி வழிகாட்ட முடியும்?

பங்குச் சந்தையில் சில சமயம் இலாபமடையும் நடுத்தர வர்க்கம், பல நேரங்களில் இந்தச் சூதாட்டத்தில் சில இலட்சங்களையும், கூடவே நிம்மதியையும் இழக்கிறது. இவர்களுக்குச் சாமியார்கள் என்ன தீர்வு தர முடியும்? "பங்குச் சந்தை என்பது சூதாட்டம்; அதில் முதலீடு செய்யாதீர்கள் என்று சாமியார்கள் கூறுவதில்லையே!" "பேராசைப்படாதீர்கள், சிறிய அளவு இலாபத்துடன் திருப்தி அடையுங்கள்; முதலீடு செய்யும் போது சற்று எச்சரிக்கையாக இருங்கள்" என்று தானே உபதேசிக்கிறார்கள்?

### 2) சுயமரியாதைத் திருமணம் ஏன்?

விலை ரூ.5.

பல ஆண்டுகளுக்கு முன்னால் திருச்சியில் இருந்து ஒரு தோழர் பெரியாருக்கு கடிதம் எழுதினார்.

"நான் சென்ற வாரம் திருமணம் செய்து கொண்டேன், மிகவும் எளிய முறையிலே செய்தேன். உங்களுக்கும் அழைப்பு அனுப்பவில்லை. உங்களுக்கு அழைப்பு அனுப்பி சிரமப்படுத்தவும் விரும்பவில்லை. எனினும் அங்கிருந்தே என்னை வாழ்த்துங்கள். நான் திருமணம் செய்து கொண்டேன் என்பதையும் இதன் மூலம் தோழர்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்" எனச் சென்னையில் இருந்து பெரியாருக்குக் கடிதம் வந்தது. அக்கடிதம் பார்த்த பெரியாரும் மகிழ்ந்து போனார்.

ஆக, உலகம் எவ்வளவோ மாறிக் கொண்டிருக்கிறது. மாற்றம் என்பது இயற்கை. காலத்திற்கேற்ப, மனிதர்களின் வளர்ச்சியையொட்டி மாற வேண்டும். காலம் காலமாகச் செய்தது, பெரியவர்கள் செய்தார்கள் என்கிற பிடிவாதத்தை, பழமைப் போக்கை அழித்தொழிக்க வேண்டும். ஒரு சூடானப் பாத்திரத்தைக் கையில் வைத்திருக்கிறோம். அது சுடுகிறது எனத் தெரிந்தவுடன் கீழே போட்டுவிட வேண்டும். அப்படி இலலாமல், நான் பாத்திரத்தைக் கீழே போட மாட்டேன், பலரும் தவறாக எண்ணுவார்கள், என்னை கேவலமாக நினைப்பார்கள் என அந்தப் பாத்திரத்தைக் கையிலே வைத்திருந்தால் கை பொசுங்கிவிடும். வேதனையும் வலியும் நமக்குத் தான்.

### 3) தமிழா, உன் பெயர் தமிழா?

விலை ரூ.5.

பெண் - ஆண் குழந்தைகளுக்கு சூட்டக்கூடிய தமிழ்ப் பெயர்களின் தொகுப்பு. தொகுப்பு : அரசெழியன்

**மேற்காணும் மூன்று புத்தகங்களும் கிடைக்குமிடம் :** 'பி.இரா.அரசெழியன்' 7 ஆ, எறும்பீசுவரர் நகர், மலைக்கோயில், திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி - 620 013.

### 4) சுஜாதாவின் கோணல் பார்வை

எழுத்தாளர் சுஜாதாவின் 'ஒரு விஞ்ஞானப் பார்வையிலிருந்து' நூலுக்கு பேராசிரியர் ந. வெற்றியழகன் எழுதிய மறுப்பு. பக்கங்கள்: 36; விலை : ரூ.12

ஓர் எல்லை கடந்தபின் விஞ்ஞானமும் வேதாந்தமும் ஒரே இலக்கை நோக்கிச் செல்கின்றனவாமே? அது என்ன இலக்கு? ஒரே இலக்கு? வெளிப்படையாகச் சொல்லக் கூடாதா? சொல்ல முடியாதா? விஞ்ஞானம் புறமுகப் பொருள் ஆய்வு பற்றியது. வேதாந்தம் என்பது அகமுக நோக்குடைய கருத்து பற்றியது. இவை இரண்டும் எவ்வாறு ஒரே இலக்கை நோக்கிச் செல்லும்? 'விஞ்ஞானம்' எதையும் தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில், சொற்களில் திட்டவட்டமாகக் கூறுவது. ஆள் ஆளுக்கு வேறுபட்ட - மாறுபட்ட விளக்கங்கள் கூறுவதற்கு உட்படுத்திக் கொள்ளாதது?

நீரியவளி இரு கூறுகளும், உயரியவளி ஒரு கூறும் இணைந்து உருவாவதே நீர், என்பது அறிவியல். இதனை $H_2O$ என்னும் குறியீட்டால் குறிப்பர். எவரும், எங்கும், என்றும் இது 'நீர்' என்றுதான் பொருள் கொள்ள முடியும். இதற்குப் படிப்பறிவு போதும்! மனப்பக்குவம் தேவையில்லை.

வேதாந்தமோ - ஆள் ஆளுக்கு விளக்கவுரை (வியாக்யானம்) கூறப்படும் தன்மையுடையது. ஆட்களின் மனப்பக்குவத்திற்கேற்ப விளங்கிக் கொள்ளக் கூடியது. 'அஹம் பிரஹ்மாஸ்மி', 'தத்வம் அஸி' - போன்ற வேதாந்த சூத்திரங்களுக்கு சங்கரர் 'அத்வைதம்' எனப்படும் ஒரு வகையிலும், இராமானுஜர் 'விசிஷ்டாத்வைதம்' எனப்படும் வேறொரு வகையிலும், மத்வர், 'த்வைதம்' எனப்படும் மற்றொரு வகையிலும் வெவ்வேறான, மாறுபாடான, முரண்பாடான விளக்கங்கள் கூறப்படும் நிலையை உடையது. அறிவியல் போல, தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் விளங்கிக் கொள்ளக்கூடிய சொற்களில் கூற முடியாதது வேதாந்தம்.

**கிடைக்குமிடம்:** ந. வெற்றியழகன், 58/1 வி.பி.எஸ். தங்குமனை, மேல இரண்டாம் தெரு, மன்னார்குடி - 614001.

## ஒற்றுமை எப்படி ஏற்படும்?

*வகுப்பு வாதங்களும், வகுப்பு மாநாடுகளும் மேல்சாதியாராலும் அவர்களுடைய கொடுமைகளாலும் தான் ஏற்பட்டவை. துவேஷத்தை உண்டாக்க நாம் மாநாடுகள் கூட்டுவது இல்லை. எல்லோரும் சமம் என்று சொல்லவே மாநாடு கூட்டுகிறோம். நம்நாட்டில் அடிக்கடி சொல்லப்பட்டு வரும் ஒற்றுமை என்ற வார்த்தையும், பிரச்சினைகளும் வெளி வேஷமே. தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட பின்னரே உண்மை ஒற்றுமை ஏற்படும். ஒருவருக்கொருவர் ஒற்றுமையும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டியது அவசியம். அதற்கான வேலைகளைச் செய்யச் சுதந்திரம் ஒவ்வொரு சமூகத்திற்கும் இருக்க வேண்டும்.*

*ஒவ்வொரு வகுப்புக்கும் சுயமரியாதை சமத்துவம், சுயமதிப்பு ஏற்பட வேண்டும். அதன் மூலம் தான் தேசம் முன்னேற்றமடைய முடியும். உண்மையான தேசியம் என்பது சுயமரியாதை ஒன்றே. சுயமரியாதைப் பொறுத்தே தான் சுயராஜ்யம் இருக்கிறது.*

**– பெரியார் 9.10.1927 'குடிஅரசு'**

## அசைவத்துக்கு தடைபோட்ட குஜராத்

நாத்திக பிரச்சாரத்தையே அனுமதிக்கக் கூடாது என்று பார்ப்பனர்களும், பார்ப்பன வேத மதக் கும்பலும் தமிழ்நாட்டில் கூக்குரல் போட்டுவரும் நிலையில், குஜராத்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. பார்ப்பன இந்து மத வெறி ஆட்சி நடக்கும் குஜராத்தில், முதல்வர் மோடி, ஒரு ஆணையைப் பிறப்பித்துள்ளார்.

சமணர்கள் விழாவையொட்டி குஜராத்தில் ஒரு வார காலம் இறைச்சி விற்பனை செய்யக் கூடாது என்பதே அந்த உத்தரவு. சமணர்கள் சைவம் என்பதால் குஜராத்தில் வாழும் அனைத்துப் பிரிவினரும் ஒரு வாரம் முழுவதும் அசைவமே சாப்பிடக் கூடாது என்கிறது குஜராத் அரசு. எல்லை மீறும், இந்த மத வெறி நடவடிக்கையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் கடந்த 14 ஆம் தேதி அளித்த தீர்ப்பில், குஜராத் அரசின் ஆணை சரியானதே என்று தீர்ப்பளித்து விட்டது. ஒரு மதம் உணவுப் பழக்கத்தைத் தீர்மானிப்பதும், அந்த பழக்கத்தை ஒரு வார காலம் எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்பதும் தான் சகிப்புத் தன்மையா?

முஸ்லீம்கள் நோன்பு இருக்கும் போது முஸ்லீம் அல்லாதவர்களும் நோன்பு இருக்க வேண்டும் என்றோ, கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்தின் போது கிறிஸ்தவர் அல்லாதோர் சர்ச்சுக்குப் போக வேண்டும் என்றோ, ஒரு மாநில அரசு உத்தரவிடுமானால், அதை பார்ப்பனர் களோ, நீதிமன்றமோ ஏற்றுக் கொள்ளுமா? அதற்கும் குஜராத் அரசு பிறப்பித்த உத்தரவுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

சமண மதத்தினர், உணர்வுகளை மதிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பில் கூறியுள்ளது. காரணம் கணிசமான எண்ணிக்கையில் அவர்கள் இருக்கிறார்களாம். இதன் மூலம் பெரும்பான்மை எண்ணிக்கையில் உள்ளோரின் மத உணர்வை எல்லோருக்கும் பொதுவாக்கி நாட்டின் மதச்சார்பற்ற சட்டத்துக்கே மதச்சாயம் பூச முயலுகிறது, உச்சநீதிமன்றம்! ✦

# நடிகவேள் நூற்றாண்டில் ராதாரவி

# பெரியார் திராவிடர் கழகத்துக்கு நான் உறுதுணையாக நிற்பேன்

*கோவையில் மே 17 ஆம் தேதி கழக சார்பில் நடைபெற்ற நடிகவேள் எம்.ஆர்.இராதா நூற்றாண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக நடிகவேள் மகனும், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பொதுச்செயலாளரு மான எம்.ஆர்.ராதாரவி பங்கேற்று உரையாற்றினார். பெரியார் மறைந்த போது 'தமிழரின் சகாப்தம் முடிந்துவிட்டது' என்று தனது தந்தை கூறியதை நினைவு கூர்ந்தார்.*

*கட்டாயப்படுத்தி தனது தந்தையை கோயிலுக்கு அழைத்துச் சென்ற நிலையிலும், அங்கும் பகுத்தறிவுப் பிரச்சாரத்தையே அவர் செய்தார் என்று கூறிய ராதாரவி, தனது தந்தையாருடன் தனக்குக் கிடைத்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். சுமார் ஒரு மணி நேரம் அவரது உரை நீடித்தது. உரையிலிருந்து சில பகுதிகள்:*

நான், என்னுடைய மைத்துனர் எல்லாம் சேர்ந்து எனது தந்தையாரிடம், சிறைச்சாலையிலிருந்து அவர் வந்த முதல் நாளே ஏன் சூட்டிங் போறீங்க? அந்த கோயில் (சாமூண்டீஸ்வரி) வரைக்கும் போயிட்டு வரலாம் என்றோம். அப்படியாடா சரி போயிட்டு வரலாம் என்றார் என் தந்தை. அவர் மறுக்கவில்லை. எங்களுக்கு வியப்பு. காரிலே கருநாடகத்திலுள்ள சாமூண்டீஸ்வரி கோயிலிலே போய் இறங்கினோம். கோயில் பூட்டி இருந்தது. நாங்கள் போய் தட்டினோம். தட்டினா உள்ளே இருந்து ஒரு சத்தம் வந்தது. கன்னடத்திலே கேட்கிறார்கள், 'யாரய்யா?' என்று. நான் சொன்னேன். 'தமிழ் ஆர்ட்டிஸ்ட் எம்.ஆர்.ராதான்னு'. 'சார், எம்.ஆர்.ராதாவா? கோயிலுக்கு எதிரே குருக்கள் இருக்காரு, அவருகிட்ட சாவி வாங்கிட்டு வாங்க சார், கதவை திறப்பாங்க' என்றார்.

குருக்கள் வீட்டுக்குப் போய் நான் கதவைத் தட்டினேன். அவர் என்னான்னு கேட்டார். தமிழ் ஆர்ட்டிஸ்ட் எம்.ஆர்.ராதா வந்திருக்காருன்னு சொன்னேன். அவர் உடனே 'தொட் ஆர்ட்டிஸ்ட்டு'ன்னு கன்னடத்திலே சொன்னார். தொட்டுன்னா கன்னடத்திலே பெரிய ஆர்ட்டிஸ்டுன்னு அர்த்தம். 'யாகே! யாகே!' ன்னாரு. 'எங்கே? எங்கே?' என்று அர்த்தம். இதோ வண்டியிலே இருக்காருன்னு சொன்னேன். வந்தார், பார்த்தார். நமஸ்காரம் சார் என்றார். எங்க அப்பா இறங்கிட்டாரு. எனக்கு எல்லாம் ஒரே மகிழ்ச்சி. அப்பாடா, கோயிலுக்கு அப்பாவை கூட்டிட்டு போயிட்டேண்டா சாமி என்று நிம்மதி. உள்ளே வந்த உடனே, கோயில் கதவை திறந்தால் போலீஸ்காரர்கள் இரண்டு பேர் உள்ளே இருந்தனர். அப்பா, அவர்களிடம் முதலில் கேட்ட கேள்வி இதுதான். "ஏய்யா! இரண்டு பேரும் உள்ளேயே இருக்கீங்களே, ஏதாவது அர்ஜெண்ட்டா வந்தா என்ன செய்வே?". எனக்கு ஏண்டா இந்த ஆளை கூப்பிட்டு வந்தோம்னு ஆயிடுச்சு. ஏன்னா அவங்க தகராறு பண்ணிட்டாங்கன்னா என்ன செய்யறது? அது கர்நாடக மாநிலம் அது ஏற்கனவே தமிழ் ஆளுங்கள் மேலே 'அன்பான' ஊரு. இது வேறே தொல்லையாச்சேன்னு நெனைச்சேன்.

'என்னய்யா செய்வே?' என்று அவர் மீண்டும் கேட்டார். உடனே அவங்க சிரிச்சாங்க. 'இதைத் தான் நாடகத்திலே சொல்றேன். கடவுள் சாப்பிட மடப் பள்ளியறை. மக்களைப் பார்க்க மூலஸ்தானம். தூங்கு வதற்கு பள்ளியறை. காலைக்கடனை போக்குவதற்கு கழிப்பறை கட்டியிருக்கிறானா? அப்படின்னு கேட்பேன்... இதையெல்லாம் தப்பா எடுத்துக்கிறான்' என்று அந்த போலீஸ்காரர்களுக்கு விளக்கம் சொன்னார். அவங்களும் சரி தான் சார் என்றார்கள். சொல்லிட்டு, நாங்கள் ஏதாதுன்னா கதவைத் தட்டுவோம். குருக்கள் வந்து தொறப்பாருன்னு சொன்னாங்க. 'ஏய்யா, நான் வீட்டுக்கு நேரே போய் எழுப்பறத்துக்கே அரைமணி நேரமாச்சு. நீ கோயில் கதவைத் தட்டினா, வீட்டுல இருக்கும் அவருக்கு கேட்கவாப் போகுதுன்னு?' கேட்டார்.

அப்புறம் கோயிலை சுத்தி வந்தாரு. குருக்கள் கிட்ட இந்தக் கோயிலை எப்பக் கட்டினாங்க என்று கேட்டார். அவர் எனக்குத் தெரியல சார்.



ராஜா கட்டுனாரு என்றார். 'உங்களுக்கு அதைப் பத்தி என்ன, தட்டுலெ காசப் போட்டா, உங்க கதை முடிஞ்சு போச்சு' என்றார். இவரை வெளியே கூப்பிட்டு வர்றதுக்குள்ளே எனக்கு மார்கழி மாசத்திலேயே வேர்க்க ஆரம்பிச்சிடுத்து!

தந்தை பெரியார் என்று ஒருவர் இல்லையென்றால் நமக்கு கோயமுத்தூர் கிடையாது. இது கேரளாவோட சேர்ந்திருக்கும். தந்தை பெரியார் ஒருவர் இல்லை யென்றால் நமக்கு சென்னையே இருந்திருக்காது. எல்லோரும் ம.பொ.சி.யைச் சொல்லுவார்கள். ம.பொ.சி. சண்டை போட்டாருன்னா, யாருடைய தைரியத்திலே? முதுகெலும்பு தந்தை பெரியார் தான்.

பெரியார் திராவிடர் கழகத்தை நீங்கள் நல்லபடியாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல கருத்துகளை சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல வழிகாட்டிகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனது தந்தையாருக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறார்கள் என்கிற பொழுது, எனக்கெல்லாம் மகிழ்ச்சி. என் குடும்பத்திலிருந்து நான் கலந்து கொள்கிறேன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். எங்கப்பா மாதிரி ஒரு தீர்க்கதரிசியான நடிகரை பார்க்க முடியாது. அவருக்கு எல்லாமே கேள்வி ஞானம் தான். எழுதத் தெரியாது. படிக்கத் தெரியாது. ஆனால் அவர் பேசிய கருத்தை எவரும் பேசியது கிடையாது. அதுதான் பெரிய விஷயம்.

'மணியோசை' படத்திலே ஒருவன் பணம் கொடுத்தவனிடம், திருப்பிக் கேட்டு சண்டை போடுவான். எங்கப்பா கேட்பார், 'ஏண்டா அவனுக்கு பணம் கொடுத்தே' என்று. 'பணம் இல்லையென்று சொன்னான் கொடுத்தேன்' என்பான். 'அடிப்படையே உதைக்குதேடா' என்பார். 'பணம் இல்லையேன்னு சொன்னவனுக்கு கொடுத்தா, எப்படிடா திருப்பிக் கொடுப்பான்' என்று கேட்டார்.

அதேபோல், 'பாகப் பிரிவினை'யில் கேட்பார். செக் போட்டிருக்கேன் பேங்க்லே போய் பணம் எடுத்துக்கடா என்பார். பேங்கிலே பணம் இல்லேன்னு சொல்லிட்டாங்கன்னு பதில் வரும். பேங்கிலேயே பணம் இல்லேன்னு சொல்லிட்டானா? பேங்கிலேயே பணம் இல்லையா? என்று திரும்பி விடுவார். அது இல்லீங்க, உங்க கணக்கிலே பணம் இல்லை. கையிலே 'கேஷா' கொடுத்திடுங்க என்று கேட்பார். உடனே கேஷ் இருந்தா நாங்க ஏண்டா செக்க கொடுக்கிறோம்? *(சிரிப்பு, கைதட்டல்)*

அதே மாதிரி 'பலே பாண்டியா' படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தான் கதாநாயகன். அவரை தொரத்திட்டுப் போவாரு எங்கப்பா காரில். எங்கப்பா வில்லன். காரு நின்னுடும். டிரைவர் கிட்ட கேட்பாரு. ஏ மேன் கார் நின்னுச்சு. அவர் உடனே கார் பஞ்சர் அப்படீம்பாரு. இடியட் டயர் பஞ்சருன்னு சொல்லு என்பார். *(சிரிப்பு, கைதட்டல்)*

'பெரிய இடத்துப் பெண்' படத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரை பார்க்கிறபோது, சாமி கும்பிட்டு வெளியே வருவாரு. இவரு வசதியானவரு. எம்.ஜி.ஆர். ஏழைகளை அழைச்சிட்டு வருவார். ஏந்தம்பி, ஏழைகளை எல்லாம் சாமி கும்பிட கூட்டிட்டு வர்றே. சாமியே எங்களுக்கு டயம் ஒதுக்கியிருக்கிறான். பணக்காரன், வசதியானவன் நிதானமா கும்பிடனும்னு. நீ ஏய்யா ஏழைகளை கூப்பிட்டு வந்து தொந்தரவு பண்றேன்னு? கேட்பார். அதெல்லாம் முடியாது. எல்லோருக்கும் ஒரே நேரம்தான்னு எம்.ஜி.ஆர். அவருடன் சண்டை போட்டு உள்ளே கூட்டிக் கொண்டு போவார். இவரு உடனே, என்னங்க தம்பி நீங்க பேசப் பேச எதுத்து எதுத்துப் பேசிட்டே இருக்கிறே... என்று கூறி, கடவுள் பக்கம் திரும்பிப் பார்த்து, 'பாரு பரமசிவா' என்பார். அப்ப நாங்க கேட்டோம். எதுக்கு பாரு பரமசிவா என்கிறீங்க என்று. 'கடவுள் தான் எல்லோர் சொல்றதும் கேப்பாருன்னு சொல்லுவாங்க. அது தான். பாரு பரமசிவா' என்றேன் என்பார். *(சிரிப்பு)*

நாங்கள் எல்லாம் வருடாவருடம் சபரிமலைக்குப் போவோம். எங்க அப்பாவுக் நம்பிக்கை இல்லை என்றாலும் தடுக்க மாட்டார். ஒரு முறை, அய்யப்ப பக்தர் வீரமணி என்பவர் அய்யப்பன் கோயிலுக்கு வரவில்லை. எங்கள் வீட்டுக்கு வந்த அவரிடம் அப்பா கேட்டார், "ஏன் நீ போகலையா?" என்று. "அய்யப்பன் அழைக்கவில்லை; போகவில்லை" என்று பக்தியோடு பதில் சொன்னார். அப்பா கேட்டார், "உங்களையெல்லாம் லெட்டர் போட்டு அய்யப்பன் கூப்பிடுவானா? அப்படியானால் எனக்கும் ஒரு லெட்டர் போடச் சொல் நானும் வரேன்" என்றார் ராதாரவி.

தொடர்ந்து பேசுகையில், தனது தந்தை நன்கொடை வழங்கி, பெரியார் திடலில் தந்தை பெரியாரால் கட்டப்பட்ட கட்டடத்துக்கு பெரியார் 'நடிகவேள் ராதா மன்றம்' என்று பெயர் சூட்டியதை பெருமையுடன் நினைவு கூர்ந்த நடிகர் ராதாரவி, அம்மன்றத்தில் தனது தந்தையார் படத்தையோ, பெயரையோ பொறிக்காமல் கி. வீரமணி, அவமதித்ததை வேதனையுடன் சுட்டிக் காட்டினார். தனது தந்தையார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க கி.வீரமணி வந்தபோது, "ஏன் எங்கள் அப்பா படத்தை மாட்டவில்லை?" என்று அழுது கொண்டே கேட்டதாகக் குறிப்பிட்டார்.

பெரியார் திரைப்படத்தில் நடிகவேள் பற்றிய பாத்திரத்துக்கு உரிய முக்கியத்துவம் தரப்படாததை சுட்டிக்காட்டிய ராதாரவி, நடிகர் சத்யராஜ் பெரியாராகவே மாறி நடித்ததைப் பாராட்டினார். ஆனால், அதற்காக பெரியார் அணிந்திருந்த பச்சைக் கல் மோதிரத்தை அன்பளிப்பாக கி.விரமணி சத்யராஜூக்கு வழங்கியதை தன்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. பெரியார் பயன்படுத்திய பொருள்களையெல்லாம் எடுத்து கொடுத்துவிடப் போகிறார்களா என்றும் அவர் கேட்டார். "பெரியார் திராவிடர் கழகத்தின் வளர்ச்சிக்கு நான் உதவிடத் தயாராக இருக்கிறேன். என்னை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறி விடைபெற்றார்.

**– செய்தி: கரு. மலையப்பன்**

**வந்த கடிதம்**

*14.6.08 அன்று எம்.ஜி.ஆர். நகரில் பெரும் பொருட்செலவில் மிகச் சிறப்பாக 'நாத்திகர் விழா'வையும், பெரியவர் திருவாரூர் தங்கராசு அவர்களுக்குப் பாராட்டு விழாவையும் நடத்திய பெரியார் திராவிடர் கழகத்திற்கும், அதன் தலைமை திரு.தா.செ.மணி அவர்களுக்கும் பொதுச்செய லாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.*

*அன்னாரை அறிந்த ஆயிரக்கணக்கான தமிழர் களும், அவரது சொற்பெருக்கை நுகர்ந்த பல்லாயிரக் கணக்கான திராவிடர்களும் அவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது அறிந்து களி பேருவகை கொண்டிருப்பார்கள்.*

*அவர் 1950களின் மத்தியில் 'திராவிட ஏடு' என்னும் வார இதழையும், அதன் பின் 'பகுத்தறிவு' என்னும் வார ஏட்டையும், ஆசிரியராக இருந்து நடத்தியவர். அவ்வேடுகளில் ஒன்றிரண்டு பக்கங் களைத் தவிர, ஏனைய பக்கங்கள் அனைத்தையும் அவரது எழுத்தோவியங்களே அணி செய்யும். அவ்வேடுகளில் வெளி வந்த காலத்தால் அழியாத கட்டுரைகள் முதலியவைகளைத் தொகுத்து நூலாக வெளியிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.*

**புதுகை இராசேந்திரன்,**
திருவான்மியூர்.

## கழகத் தலைவர் பாராட்டு நிறைவுரை

# ‘பெரியாரியல் பேரொளி’ திருவாரூர் தங்கராசு

*14.6.2008 சென்னை எம்.ஜி.ஆர். நகரில் கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு அவர்களுக்குநடந்த பாராட்டுவிழா, நாத்திகர் விழா பொதுக்கூட்டத்தில் தலைவர் உரை:*

நாத்திகர் விழாவாகவும், நடிகவேள் எம்.ஆர்.இராதா நூற்றாண்டு விழாவாகவும் தொடர்ந்து மிக நீண்டகாலம் பெரியாரியல் பணிகளில் தொய்வில்லா பணியாற்ற வந்த நம்முடைய மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு அவர்களின் பாராட்டு விழாவாகவும் இந்த மூன்று நிகழ்ச்சிகளும் எழுச்சியோடு நடந்து கொண்டிருக்கின்றன. மூட நம்பிக்கை ஒழிப்புப் பேரணிக்கு அரசு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது.

நடிகவேள் எம்.ஆர். இராதாவின் நூற்றாண்டு நினைவாக, அவர் பெரியாரியலில் ஆற்றிய பெரும் பணியை நினைவு கூர்ந்து அவர் பெயரால் பேருந்து நிறுத்தத்தில் ஒரு நினைவு நிழற்குடையை கழக சார்பில் அமைத்திருக்கிறோம்.

நடிகவேள் எம்.ஆர்.இராதா புகழ் பெறுவதற்கு காரணமாக இருந்த ‘இரத்தக் கண்ணீர்’ நாடகமாகி பிறகு திரைப்படமாக வெளிவந்தது. அது வெளிவந்த நாளிலிருந்து தமிழகத்தில் ஏதாவது ஒரு கிராமத்தில் தொடர்ந்து திரையிடப்பட்டு வரும் ஒரே திரைப் படமாக இருந்து வருகிறது. நாடக உலகில் ஒரு புரட்சியாக வந்த நாடகம் இது. அதேபோல இந்து மதவாதிகளுக்கு ஒரு அதிர்ச்சியைத் தந்த நாடகம்; அதே அதிர்ச்சியை பார்ப்பனர்களுக்கு தந்த ‘இராமாயணம்’ நாடகத்தை எழுதியவரும் அய்யா தங்கராசு என்பதுதான் மிகவும் பெருமைக்குரிய ஒன்று. ஒரு ஆய்வாளரைப் போல் அடிக்குறிப்புகளிட்டு அந்த நாடகத்தை ஏராளமான வரலாற்று ஆதாரங்களோடு அவர் எழுதியுள்ளார். அதே போல் அய்யா திருவாரூர் தங்கராசு எழுதியுள்ள மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல் ‘திருஞான சம்பந்தர்’ நாடகம். அதில் அவர் அரிய கருத்துகளை தனது ஆய்வின் வழியாக எடுத்துரைத்துள்ளார். இப்படி ஏராளமானவற்றை அவர் பணியாற்றலுக்கு சொல்லிக் கொண்டிருக்கலாம்.

1971 ஆம் ஆண்டில்தான் அய்யா திருவாரூர் தங்கராசு அவர்களை கொளத்தூருக்கு அழைத்துச் சென்று கூட்டம் நடத்தினேன். தொடர்ந்து மூன்று மாதத்துக்கு ஒரு முறை அழைத்தோம், அவர் எடுத்து வைக்கிற பெரியாரியல் கருத்துக்கள் சென்று சேர வேண்டுமென்ற அக்கறையோடு! தோழர் நல்லக்கண்ணு அவர்கள் சொன்னதைப் போல அவர் எல்லாத் துறையிலும் பன்முக ஆற்றலைக் காட்டியவர். தன்னுடைய ஆற்றலை சொந்த நலனுக்கோ, மேன்மைக்கோ பயன்படுத்தாமல் பெரியாரியலை பரப்பப் பயன்படுத்தியவர். அந்த உயரியப் பண்பை பாராட்ட வேண்டும். அந்த முறையிலே தான் அவருக்கு பாராட்டு விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### பெரியார் பேசிய நாத்திகம்

இது நாத்திகர் விழா என்பதால், பெரியார் பேசிய நாத்திகம் பற்றி சில கருத்துகளை கூற விரும்புகிறேன். பெரியார் பேசியது வெறுப்பினால் பேசிய நாத்திகம் அல்ல; அல்லது அறிவியல் ஆய்வு முடிவும் அல்ல. பெரியார் பேசிய நாத்திகம் சமுதாய உணர்வோடு பேசப்பட்ட நாத்திகம். பெரியார் பேசிய இரண்டு சொற்பொழிவுகளை மட்டும் உங்கள் முன் வைக்கிறேன்.

1928 இல் சமுதாய சீர்திருத்த மாநாட்டில், “மனிதனுக்கு மனிதன் தொடக் கூடாது, தெருவில் நடக்கக் கூடாது, கோயிலுக்குள் போகக் கூடாது, குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது போன்ற கொள்கைகள் தாண்டவம் ஆடும். ஒரு நாட்டில் பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் அழிக்காமலோ, சமுத்திரம் பொங்கி மூழ்கச் செய்யாமலோ, சண்ட மாருதத்தால் துகள் துகள்களாக வெடிக்காததைப் பார்த்த பிறகும்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும், சர்வ தயாபரன் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்னவென்று சொல்வது என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்” என்று கூறுகிறார். அதே போல் 1946 இல் பி.அன்.சி. மில் தொழிலாளர்கள் மத்தியிலே பேசுகிறார்:

எந்த ஒரு மதம் ஒரு மனிதனை சூத்திரனாகவும், அதாவது தொழிலாளியாகவும், பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டு பண்ணிற்றோ அந்த மதம் ஒழிய வேண்டுமென்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்று பெரியார் கேட்கிறார்.

எந்த கடவுள் ஒருவனுக்கு நிறைய பொருள் கொடுக்கும், ஒருவனுக்கு பாடு படாமல் வாழ உரிமை கொடுக்கும், மற்றொருவனை உழைத்து உழைத்து ஊரானுக்கு போட்டுவிட்டு சோற்றுக்கு திண்டாடும்படியும், இரத்தத்தை வியர்வையாக சிந்தி ஓயாது உழைத்த வண்ணம் கீழ்மகனாய் வாழும்படி செய்கிறதோ அந்தக் கடவுள் ஒழிய வேண்டுமென்று சொல்லுகிறேன். ‘ஒழிய வேண்டுமா? வேண்டாமா?’ என்று மக்களைப் பார்த்து கேட்கிறார். ‘வேண்டும், வேண்டும்’ என்று மக்கள் குரல் கொடுக்கிறார்கள். பெரியார் தொடர்ந்து சொல்லுகிறார்: “ஆகவே தோழர்களே இதைச் சொன்னால் நான் நாத்திகனும், மத துவேசியுமா? ஆம் ஒழிய வேண்டும் என்று சொன்ன நீங்கள் மத துவேசியா? நாத்திகர்களா?” என்று கேட்கிறார்.

அப்படிப்பட்ட நாத்திகத்தை மக்கள் சமுதாயக் கருத்தோடு எடுத்து வைத்த நாத்திகத்தை தான் நாம் பரப்ப நினைத்தோம். தடுத்து விட்டார்கள். இருக்கட்டும். இன்று பெரியாரியலை எடுத்துச் சொல்கிறபோது அறிவியல் பூர்வமாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் ‘தினமணி’யில் வந்த செய்தியை கழகத் தோழர்கள் துண்டறிக்கைகளாகக் கூட போட்டிருக்கிறார்கள்.

லண்டன் அல்ஸ்டெர் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து அளித்த அறிக்கையில் சொல்லுகிறார்கள். அறிவாளிகளுக்கு இறை நம்பிக்கை குறைவு என்று. மேலும் சொல்கிறார்கள் - பிரிட்டனில் ஆரம்ப கல்வி பயில்பவர்களுக்கு மத்தியில் இறை நம்பிக்கை அதிகம் உள்ளது. அவர்கள் வளர்ந்து அறிவு முதிர்ச்சி பெறப் பெற அவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை மெதுவாக குறைய ஆரம்பித்து விடுகிறது. பிரிட்டனில் 3.3 சதவீதம் பேர் தான் இறை நம்பிக்கை உள்ளதாக தெரிவித்தனர். 68.5 சதவீதம் பேர் தங்கள் மீதான நம்பிக்கையைத் தவிர்த்து வேறு எந்த நம்பிக்கையும் இல்லை என்று சொன்னதாக தெரிவித்திருக்கிறார்கள். அதோடு இன்னொரு செய்தியும் வந்திருக்கிறது. ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளேட்டில், ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டு கட்டுரைகூட வந்திருக்கிறது.

இதில் அவர்கள் சொல்கிறார்கள் - நாத்திகர்கள்தான் அதிக நாள் வாழ்கிறார்கள் என்று. அதற்கு எடுத்துக்காட்டாக இங்கே அமர்ந்திருக்கும் அய்யா திருவாரூர் தங்கராசு அவர்களுக்குத்தான் நாம் விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நாத்திகர்களுக்கு தன்னம்பிக்கை இருக்கிறது. எதையும் அறிவுபூர்வமாக சிந்திக்கிறார்கள் என்று இன்னொரு ஆய்வுக் கட்டுரையும் செய்தியாக வந்திருக்கிறது.

பெரியாரியல் கருத்துகளை எப்படியாவது முன்னெடுத்து செல்ல வேண்டுமென்ற துடிப்பும், அக்கறையும் கொண்ட எளிய தொண்டர்களை கொண்ட இந்த அமைப்பு, முன்னோடியாக வழிகாட்டி இந்த மண்ணில் பெரியாருக்கு அடுத்து இந்த கருத்துகளை தமிழ் நாடெங்கும் எடுத்துச் சென்று கூறிய அய்யா திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு பெரியாருடைய லட்சியங்களை சுடராக அல்ல. பேரொளியாக மக்கள் முன்னாள் விளக்கி காட்டிய அவருக்கு பெரியார் திராவிடர் கழகத்தினுடைய எளிய தொண்டர்களாகிய நாங்கள் எங்களுடைய எளிமையான, நல்லெண்ணங்களை வெளிப்படுத்தும் வகையிலும் அவருக்கு ஆடை அணிவிப்பதும் ஒரு சிறிய நினைவுப் பரிசை கொடுப்பதுவுமாக இந்த பாராட்டை செய்கிறோம்.

அரசியல் சட்டத்தின் அடிப்படை கடமையாக மக்கள் மத்தியில் அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்த வேண்டும் என்று எழுதி வைத்துள்ளனர். ஆய்வு மனப்பான்மையை, முற்போக்கு சிந்தனைகளை, சமுதாய சீர்திருத்தத்தை பெருக்க வேண்டுமென்றும் அரசியல் சட்டம் சொல்லுகிறது. ஆனால் அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அறிவியலைப் பரப்பும்போது, நமக்கு தடை வருகிறது. இருந்தாலும் நம்மால் இயன்ற அளவு எடுத்துச் சொல்வோம். மீண்டும், மீண்டும் பெரியாரியலை முழங்கி நாடு முழுதும் எடுத்துச் சென்ற அய்யா தங்கராசு அவர்களுக்கு “பெரியாரியல் பேரொளி” என்ற எங்களுடைய விருப்பத்தை எழுத்துக்களாக வடித்து அவர்களிடம் கொடுத்து எங்களுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொளகிறோம் - என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி. ✦

**அடுத்த இதழில்:**

**பெரியாரை இழிவுபடுத்தி பார்ப்பன பா.ஜ.க. தலைவன் எச்.ராஜாவின் நரகல் நடை பேச்சை காவல்துறை பார்வைக்கு வெளியிடுகிறோம்.**

முதல் பக்கத் தொடர்ச்சி


வரைக்கும் நான் பெரியாரை பின்பற்றி வருகிறேன். நான் எங்கம்மாவுக்காக கோவிலுக்கு போயிருக்கிறேன். எங்கம்மா திருவண்ணாமலை கோவிலை பார்த்ததில்லை. என்னை ஒரு தடவையாவது கூட்டிட்டு போடான்னு சொன்னாங்க. நான் கூப்பிட்டு போனேன். கடவுள் மறுப்புக் கொள்கை உள்ளவன் தான். ஆனாலும் கூப்பிட்டுப் போனேன். கோயிலுக்குப் போயிட்டு திரும்பி வந்த உடனே நான் எழுதின வாசகமே , நான் எங்கம்மாவுக்காக கோவிலுக்குப் போனேன். எங்கம்மா எனக்காக சாமி கும்பிட்டாங்க. ஏன் இதை சொல்றேன்னா, நான் என் வீட்டிலே வச்சிருக்கிற வாசகமே - “அம்மா என்றால் அன்பு மழை - அவரை ஆண்டவன் என்றால் என்ன பிழை?”

அந்தக் கடவுள் என்பது அம்மா மட்டும் தான். பெரியார் இந்த சமுதாயத்தைப் புரட்டிப் போட்டவரு. பதவிங்கிற ஒரு ஆயுதமே இல்லாம புரட்டிப் போட்டவரு. என்னால் முடிஞ்ச வரைக்கும் சினிமாவிலேயும், நான் சந்திக்கிற மேடையிலேயும் கடவுள் இல்லைங்கிறதை சொல்லிட்டு இருக்கிறேன். எனது மகன் வெள்ளிக்கிழமையன்று முட்டை ஆம்லெட் கேட்கிறான்னு என் மனைவி என்னிடம் கூறுவார். முட்டையை எடு உடை, உடைஞ்சா போட்டுக் கொடு. உடையிலேன்னா போடாதே என்பேன். ஆம்லெட்டு வெள்ளிக்கிழமை சாப்பிடக் கூடாதுன்னா முட்டை உடையக் கூடாதில்லையா? தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பாருன்னா, கோயம்புத்தூரிலே பாம் வைக்கும் போது, அவர் எங்கே போயிருந்தார்? (கைதட்டல்) கடவுள் இருப்பது என்பதே ஒரு ஏமாற்று வேலை. சாமியின்னு கூப்பிட வைத்த ஒரு வர்க்கம் இருக்கு இல்லையா? அய்யருக வர்க்கம். அவங்க பண்ணின வேலை தான். கூத்து தான். இதை பெரியார் எந்தெந்த ரூபத்திலே எல்லாம் சொல்லனுமோ சொன்னாரு. அதே மாதிரி எம்.ஆர்.ராதா நகைச் சுவையோடு சொன்னாரு. தெளிவாகவும் சொன்னாரு. எம்.ஆர்.ராதா அவர்களுடைய நூற்றாண்டு விழா நிகழ்ச்சிங்கறது எனக்கு மகிழ்ச்சியான நிகழ்ச்சி. அதிலே நான் கலந்துகிட்டது, அதுவும் கோவை மாவட்டத்திலே நம்ம நண்பர்களோடு சேர்ந்து கலந்துகிட்டது ஒரு பெரிய பெருமையாக நான் நினைக்கிறேன். இந்த சித்தாபுதூர் பள்ளியில் நாம் படிச்சோம். அதே சித்தா புதூர் தெருவுலே ஓட்டு கேட்க வந்தோம். இதே பகுதியில் இந்தக் கொள்கையை சொல்லனுங்கறதுக்காகவே நானாக முன் வந்து இதில் கலந்து கொண்டேன் என்றார், இயக்குனர் சுந்தர் ராசன். ✦

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 3rd July 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஜூலை 10, 2008 புரட்சி 7 முழக்கம் 28 விலை : ரூ.2.50


## இலங்கைக்கு இந்தியா ஆயுதம்



**India to train more Lankan army officers**

Rajat Pandit | TNN

New Delhi: Even as it pushes Sri Lanka to renew efforts towards resolving its bloody ethnic strife, India is throwing open the doors of its different military institutions to train Sri Lankan soldiers.

In 2008-2009 alone, over 500 Sri Lankan officers and oth-

தமிழ்நாட்டு மீனவர்களை ஒவ்வொரு நாளும் சுட்டுக் கொல்வதும், சிறை பிடிப்பதுமான அடாவடித்தனங்களை மேற்கொண்டு வரும் சிறீலங்கா அரசு, தமிழ்நாட்டு மீனவர்களையும், ஈழத் தமிழர்களையும், மேலும் அழித்தொழிக்க ஆயுதங்களை வழங்கப் போகிறது இந்திய அரசு. பாதுகாப்பு ஆயுதங்கள் மட்டுமே வழங்கி வருவதாக இதுவரை சொல்லி வந்த மன்மோகன்சிங் ஆட்சி, இனி அழித்தொழிப்பு ஆயுதங்களையும், அதற்கான பயிற்சிகளையும் தர முடிவு செய்து விட்டது. 'டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடு' (ஜூலை 1) முதல் பக்கத் தில் இந்த செய்தியை வெளியிட் டுள்ளது.

ஒரு பக்கம் பிரச்சனையைப் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கிக் கொண்டு, மற்றொரு பக்கத்தில், போராட்டத்தைத் தீவிரப்படுத்த ஆயுதங்களை இந்தியா சிறிலங்காவுக்கு வழங்கப் போகிறது என்றும், 2008-2009 இல் 500 சிங்கள ராணுவ அதிகாரிகளுக்கு மிசோராமிலுள்ள ராணுவ பள்ளியில் இந்திய ராணுவம் பயிற்சி வழங்கப் போவதாகவும் அந்த செய்தி கூறுகிறது. அதே போல மகாராஷ்டிராவில் தேவ்லாளி எனுமிடத்தில் சிங்கள கப்பல் படைக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கப் போகிறதாம்.

ஆயுதம் வழங்குதல் - ராணுவப் பயிற்சிகளோடு இந்திய உளவுத் துறையும், சிங்கள உளவுத்துறையோடு இணைந்து செயல்படப் போவதாகவும் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளிநாட்டுத் துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்புத் துறை செயலாளர் விஜய்சிங் ஆகியோர், 10 நாட்களுக்கு முன் மேற்கொண்ட கொழும்பு பயணத்தில், இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், சீனா, பாகிஸ்தானிடமிருந்து சிறிலங்கா கூடுதலாக ஆயுதம் வாங்குவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கையில் இந்தியா இறங்கியுள்ளதாகவும் அந்த செய்தி மேலும் கூறுகிறது. தமிழ்நாட்டு தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிராகப் போய்விடுமே என்று கருதி, இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தி வைத்திருந்த இந்தியா, இப்போது, தனது கொள்கையை மாற்றிக் கொள்ள முடிவு செய்துள்ளது என்றும் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் செய்தி கூறுகிறது.

### சென்னையில் பரபரப்பு; சாமியாரின் ஊர்வலம் ரத்து

# நிர்வாண சாமியார்களை எதிர்த்து கழகம் போர்க்கொடி!

சென்னையில் நிர்வாண ஊர்வலம் வந்த சமணமத சாமியார்களுக்கு பெரியார் திராவிடர் கழகம் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எதிர்ப்பின் காரணமாக நிர்வாண சாமியார்கள் ஊர்வலத்துக்கு காவல் துறை தடை விதித்து, வேன்களில் ஏற்றி சாமியார்கள் இருப்பிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். செய்தி விவரம்:

சமண மதத்தைச் சார்ந்த திகம்பர சாமியார்கள், ராஜஸ்தானியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர். இவர்கள் முழு நிர்வாணமாகத் திரியக் கூடியவர்கள். இவர்கள் - சமணர்களுக்கு ஆசி வழங்கி வருகிறார்கள். நிர்வாண சாமியார்கள் வரவிருக்கும் செய்தியறிந்த கழகத் தோழர்கள், இரவு 9 மணியளவில் காவல்துறையிடம் விசாரித்தபோது, காவல்துறையினர் நிர்வான ஊர்வலத்துக்கு அனுமதிக்கவில்லை என்று கூறினர். ஆனாலும் அடுத்த நாள் 4.7.2008 விடியற்காலை 4 மணிக்கு சென்னை ஓட்டேரியில் 'அரசிந்த் என்ற மார்வாடிகள் குடியிருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பிலிருந்து நிர்வாண ஊர்வலம் புறப்படுகிறது என்று தோழர்களுக்கு செய்தி கிடைத்தது. விடியற்காலை 4 மணிக்கே - கழக செயற்குழு உறுப்பினர் எ.கேசவன், வடசென்னை மாவட்ட செயலாளர் சீ.மணிவண்ணன், சேத்துப்பட்டு இராசன் உள்ளிட்ட கழகத் தோழர்கள், நிர்வாண சாமியார்கள் ஊர்வலம் வரும் வழியான வேப்பேரி பகுதியில் திரண்டனர். சாமியார்கள் நிர்வாணமாகவே ஊர்வலம் வருவதைப் பார்த்து கழகத் தோழர்கள் சாமியார்களுக்கு எதிராக, முழக்கங்களை நேருக்குநேராக எழுப்பி, ஆர்ப்பாட்டம் நடத்தினர். விடியற்காலை நேரத்தில் நிர்வாண சாமியார்களுக்கு எதிராக போராட்டம் நடக்கும் செய்தியறிந்த காவல்துறையினர் விரைந்து வந்தனர். எதிர்ப்பின் காரணமாக அங்கிருந்து அவர்கள் நிர்வாணமாக ஊர்வலம் செல்ல அனுமதிக்கவில்லை. கழகத் தோழர்களை கைது செய்து வேப்பேரி காவல்நிலையத்தில் வைத்த காவல் துறை, நிர்வாண சாமியார்களை வேன்களில் ஏற்றி, அவர்கள் தங்குமிடத்துக்குக் கொண்டு சென்று விட்டனர். பகல் 12 மணியளவில் கைது செய்யப்பட்ட தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தொடர்ந்து நிர்வாண ஊர்வலத்தை அனுமதிக்கக் கூடாது என்று 4 ஆம் தேதி மாலையே நிர்வாண சாமியார்கள் தங்கியிருக்கும் குடியிருப்புக்கு முன் முற்றுகைப் போராட்டம் நடத்த கழகம் முடிவு செய்தது. நிர்வாண சாமியார்கள் தங்கியிருக்கும் குடியிருப்பு ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நிர்வாண சாமியார்கள் முகாமிட்டுள்ள பகுதியில் உள்ள சமண கோயில் முன் தோழர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். வழக்கறிஞர் துரைசாமி ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கினார். வழக்கறிஞர் இளங்கோவன் தபசி. குமரன், கரு. அண்ணாமலை, எ.கேச வன், ச. குமரன், செ.மோகன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். செய்தியறிந்து - அந்தப் பகுதியிலுள்ள விடுதலை சிறுத்தைகள், புரட்சி பாரதம் மற்றும் அம்பேத்கர் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். 45 நிமிடம் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் இரா.உமாபதி நன்றி கூறினார்.

# 'காரத்தொழு'வை கலக்கியப் பேரணி



கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டை வட்டத்தில் மடத்துக்குளம் ஒன்றியம் காரத் தொழுவு கிளைக் கழகத்தில் 22.6.2008 ஞாயிறன்று மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடைபெற்றது.

மாலை 5 மணியளவில் காரத் தொழுவு ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பிருந்து தலைமை செயற்குழு உறுப்பினர் திருப்பூர் இல. அங்ககுமார் தலைமையில் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் தொடங்கியது.

ஊர்வலத்தில் பெண்கள் தீச்சட்டி எடுத்து வந்தனர். காரத்தொழுவு கிளை அமைப்பாளர் கு. மயில்சாமி, ஜோத்தம் பட்டி மா. மோகன் ஆகியோர் அலகு குத்தி அம்பாசிடர் கார் இழுந்து வந்தனர். கோவை இராசமாணிக்கம், கோவை பன்னீர்செல்வம் ஆகியோர் பறவைக் காவடியில் அலகு குத்தி தொங்கினர். காளியப்ப கவுண்டன் புதூர் கிளைச் செயலாளர் தி.பெ.சின்னு ஆணிப்படுக்கையில் படுத்து வந்தார். மேலும், கடத்தூர் கிளைச் செயலாளர் அய்யப்பன், காரத்தொழுவு முருகேசன், சூலூர் பன்னீர்செல்வம் மற்றும் கோவைத் தோழர்கள் உடம்பில் அலகு குத்தி வந்தனர்.

ஊர்வலப் பாதையின் இரு பக்கங்களிலும் கிராம மக்கள் திரண்டிருந்து ஊர்வலத்தை வியப்போடு பார்த்தனர். கூடியிருந்த மக்கள் கூட்டத்திற்கு 'கடவுள் என்றால் என்ன?' என்று தந்தை பெரியார் கூறிய கருத்துகள் அடங்கிய துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன.

தலைமை செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, தலைமைக் கழகத் தொடர்பாளர் ந. பிரகாசு, கோவை மாநகரச் செயலாளர் வே.கோபால் ஆகியோர் தோழர்களுக்கு அலகு குத்தி ஊர்வலத்தை ஒழுங்கு செய்தனர்.

4 ஆம் பக்கம்

தலையங்கம்

# ‘அக்கிரகார’ சக்திகள்!

‘ஆட்சி போனாலும் போகட்டும், அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் பின் வாங்கோம்’ என்ற முடிவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடக்கும் ஆட்சி வந்துவிட்டது. அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக தனது கூட்டணி பங்குதாரர்களான இடதுசாரிகட்சிகளைக் கைகழுவி, முலாயம் சிங்கின் ‘சமாஜ் வாதி’ கட்சி யுடன் காங்கிரஸ் பேரம் பேசத் தொடங்கிவிட்டது.

இந்த ஒப்பந்தம் நிறைவேறிவிட்டால் எத்தகைய ஆபத்துகளை சந்திக்க வேண்டியிருக்கும்?

1) அணுசக்தி பிரச்சனைகளில் மட்டுமல்ல, ராணுவம் தொடர்பான பிரச்சினைகளிலும், இந்தியா, அமெரிக்காவையே சார்ந்திருக்க வேண்டியிருக்கும். அமெரிக்காவின் ஹைட் சட்டத்திலுள்ள 123 பிரிவுகள் இதற்கு வழியமைத்து விடுகின்றன.

2) எண்ணெய் வளமும், இயற்கை எரிவாயு வளமும் நிறைந்த ஈரானிலிருந்து பாகிஸ்தான் வழியாக, இந்தியாவுக்கு இயற்கை எரிவாயு கொண்டு வரும் சீரிய திட்டத்தை, அமெரிக்கா எதிர்ப்பதால், இந்தியாவும் கைவிடுகிறது.

3) அணுசக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பதால் இந்தியாவின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய முடியாது. மொத்தத் தேவையில் 8 சதவீதம் வரை மட்டுமே பூர்த்தி செய்ய முடியும். அதுமட்டுமல்ல, அனல் மின் நிலையம் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்துக்கு யூனிட்டுக்கு ரூ.2.50 ஆனால், அணுசக்தி மின்சாரத்துக்கு ஆகும் செலவோ யூனிட்டுக்கு ரூ.5.50.

இவை எல்லாவற்றையும்விட அமெரிக்காவிடமிருந்து பெறும் அணுஉலைகளில் வெளிப்படும் ஆபத்தான அணுக் கழிவுகளை என்ன செய்யப் போகிறார்கள் என்பதுதான்!

அமெரிக்க இந்திய உறவு வரலாற்றில் கடந்த 60 ஆண்டுகளில் இதுவே முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் என்று கூறப்படுகிறது. பதவி விலகுவதற்கு முன், தனது சாதனைகளில் ஒன்றாக - இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிவிட்டு, பதவி விலக புஷ் துடிக்கிறார். ‘ஒப்பந்தம் தாமதிக்கப்படும் ஒவ்வொரு நாளும் - மிக மோசமான இழப்பு நாள்’ என்கிறது அமெரிக்க வெளியுறவுத் துறை.

அமெரிக்காவின் புதிய அதிபர் விரைவில் தேர்வு செய்யப்பட உள்ள நிலையில் - இந்தியா, இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஏன் இவ்வளவு அவசரம் காட்டுகிறது என்ற கேள்வியிலேயே - இதில் நாட்டின் நலனைவிட வேறு அரசியல் நலன்கள் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. பிரதமரின் ஆலோசகர் எம்.கே. நாராயணன், அணுசக்தித் தலைவர் அனில் ககோட்கர், அமெரிக்காவின் இந்திய தூதர் ரோனான் சென், பிரதமரின் சிறப்பு தூதர் ஷியாம் சரண், வெளியுறவு செயலாளர் சிவ் சங்கர மேனன், சிங்கப்பூரின் இந்தியத் தூதர் எம். ஜெய்சங்கர் என்று நாட்டின் அதிகாரம் மிக்க பார்ப்பன - உயர்சாதி அதிகாரவர்க்கம் தான் அமெரிக்காவுடனான இந்த ஒப்பந்தத்தை உறுதி செய்தது. சர்வதேச ஒப்பந்தங்களை உருவாக்கும் அதிகாரம் இத்தகைய அதிகாரவர்க்கத்துக்கு கிடையாது. இந்திய அரசியல் சட்டத்திலேயே அதற்கு இடம் இல்லை.

உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் வி.ஆர். கிருஷ்ணய்யர், பி.பி.சாவந்த், எச்.சுரேஷ் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் இதை சுட்டிக் காட்டியுள்ளனர். ஆனாலும் பார்ப்பன அதிகாரவர்க்கம் சட்டத்தை மீறி அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, இப்போது நாடாளுமன்றத்திலும் அதை நிறைவேற்ற தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்துகிறது. அமெரிக்க பிரதிநிதிகளாகவே செயல்படும் மன்மோகன்சிங், மகிழ்ச்சியாக தலையாட்டுகிறார்.

தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத, குறைந்தபட்ச பொது செயல் திட்டத்தில் இடம் பெறாத ஒரு திட்டத்தை மக்கள் மீது பார்ப்பன ஆட்சி திணிக்கிறது.

ஜனநாயகம் என்ற பெயரில் நாட்டில் நடப்பது ‘பார்ப்பன நாடகம்’ தான் என்பதையே இந்த நிகழ்வுகள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

# கல்விக் கட்டண கொள்ளைக்கு கண்டனம்




அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் எந்தவிதமான கட்டணமும் வாங்கக் கூடாது என்பது இவ்வாண்டு தமிழக அரசின் ஆணை. ஆனால் இதை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. குமாரபாளையம், ஜே.கே.கே. ரங்கம்மாள் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.1300/- முதல் ரூ.2000/-க்கு மேல் கட்டணமாக வசூலிக்கப்படுவதாக கேள்விப்பட்டு மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பியுசிஎல்), அகில இந்திய மாணவர் கழகம் அமைப்புகளின் தலைவர்கள் சென்று முறையாக சந்தித்து தமிழக அரசின் உத்திரவை கடைபிடித்து நன்கொடை பெற வேண்டாம் என கேட்ட ஒரே காரணத்திற்காக 5 தோழர்கள் மீது பணம் கேட்டு மிரட்டியதாகவும், அவர்கள் தீவிரவாதிகள் என்றும் பொய் வழக்கு போட்டு ஜனநாயக போராளிகளை கிரிமினல்கள் போல இழிவாக நடத்தி சிறையிலடைத்துள்ளது குமாரபாளையம் காவல்துறை.

இதைக் கண்டித்து ஜனநாயக உரிமை பாதுகாப்பு கூட்டு இயக்கங்களின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கூட்டமைப்பில் பெரியார் திராவிடர் கழகமும் இடம் பெற்றுள்ளது.

பெரியார் திராவிடர் கழக சார்பில் மாவட்ட தலைவர் தி.க. கைலாசம், கழக சொற்பொழிவாளர் கீசகன், மாது ராசு, அண்ணாதுரை (ஓவியர், பழனிச்சாமி, பவானி), திருச்செங்கோடு தோழர்கள் ரமேஷ், வைரம், ஈசுவரன், அசோக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மதம் செய்த நன்மை என்ன?

**மதத்தின் ஆதிக்கத்தில் கட்டுண்டு இருப்பவர்களுக்கு ஆவேசமும், வெறியும் உண்டாவதுதான் முக்கியப் பலனாக இருக்கிறதேயொழிய அது கஷ்டப்படுகின்ற, ஒரு பாவமுமறியாத பாமர மக்களுக்குக் காரியத்தில் இன்று என்ன நன்மை செய்திருக்கிறது; மதத்தால் மக்களுக்கு என்ன ஒழுக்கம் ஏற்பட்டிருக்கிறது என்ற கேள்விக்கு (இது மதத் துரோகமான கேள்வி என்று சொல்லுவதல்லாமல் வேறு) எவ்விதமான பதிலும் சொல்லுவதற்கு இடம் காணவில்லை.**

**- பெரியார் - குடிஅரசு 20.11.32**

# கே.ஆர். தோப்பூரில் கழகத்தின் முதல் கூட்டம்



சேலம் மாவட்டம் இரும்பாலை அருகே வுள்ள கே.ஆர். தோப்பூர் மூலக்கடை என்னும் பகுதியில் கழகத்தின் சார்பில் பிரச்சாரக் கூட்டம் 16.5.08 வெள்ளியன்று மாலை 7 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. இர.சரவணன் வரவேற்புரை நிகழ்த்த, ஊஞ்சக்காடு செழியன் தலைமையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. ‘மேட்டூர் டி.கே.ஆர்’ குழுவினர் இசையைத் தொடர்ந்து சாமியார்களின் மோசடிகளை விளக்கி காவை. இளவரசன் ‘மந்திரமல்ல தந்திரமே’ என்னும் நிகழ்ச்சியை நடத்தினார். அடுத்து நங்கவள்ளி சி.அன்பு, கோபி வேலுச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். பழனிச்சாமி நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. இந்தப் பகுதியில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முதல் பொதுக் கூட்டம் இதுவேயாகும். மற்ற அரசியல் கூட்டங்களை விட பொதுமக்கள் அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சிக்கு கே.ஆர். தோப்பூர் தோழர்கள் பழனிச்சாமி, கண்ணன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். பவளத்தானூர் தோழர்களும், இளம்பிள்ளைப் பகுதியைச் சேர்ந்த தோழர்களும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைத்தனர்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

# அரசு மற்றும் காவல்துறை கவனத்துக்கு...

# பா.ஜ.க. பார்ப்பான் எச். ராஜாவின் நரகல் பேச்சு

*(பாரதிய ஜனதா கட்சியின் துணைத் தலைவராக உள்ள எச்.ராஜா எனும் பார்ப்பான், சென்னை - எம்.ஜி.ஆர். நகரில் பேசிய 'நரகல்' பேச்சின் ஒரு பகுதியை மட்டும் இங்கு வெளியிடுகிறோம். பெரியார் திராவிடர் கழகத்தின் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிக்கு காவல்துறை, இந்து முன்னணியின் எதிர்ப்பினால் அனுமதி மறுத்தது. எனவே ஊர்வலம் இல்லாமல் கழக சார்பில் நாத்திகர் விழாவை ஜூன் 14 ஆம் தேதி பொதுக்கூட்டமாக நடத்தியது. அதற்கும் எதிர்ப்பு தெரிவித்த இந்து முன்னணியினர் சிலரை காவல்துறை தடுத்து வைத்து, கழகக் கூட்டம் முடிந்தவுடன் விடுதலை செய்தது.*

*இதைத் தொடர்ந்து, கழகம் நாத்திகர் விழா, மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு விழா நடத்திய அதே இடத்தில் அதற்கு அடுத்த வாரத்தில் ஜூன் 26 ஆம் தேதி பா.ஜ.கவினர் கூட்டம் போட்டு அதில் எச். ராஜா என்ற பார்ப்பானை சிறப்புப் பேச்சாளராக பேச அழைத்திருந்தனர். சுமார் 50 பேர் திரண்டிருந்த அந்த "மாபெரும்" கூட்டத்தில் - எச். ராஜா தனது பார்ப்பனப் பண்பாட்டின்படி பேசிய பேச்சு இது.)*

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் முதல்வர் கலைஞர், தமிழர் தலைவர் பெரியார் பற்றியெல்லாம், இந்த பார்ப்பன ஆசாமி தமிழகம் முழுதும் இதே போல்தான் பேசி வருகிறான். காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனாலும் பார்ப்பனர் கொழுப்பு - எப்படி வளர்ந்து நிற்கிறது என்பதைத் தமிழர்கள் உணர வேண்டும் என்பதற்காக ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்ட அந்த 'நரகல்' பேச்சின், ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

மத உணர்வை புண்படுத்தின தி.க. நாய்களை அல்லவா அடித்து வண்டியில் ஏற்றியிருக்கணும். பேய்கள் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் கழுகுகள். ஒரு சமூக விரோத கலாச்சார விரோத, பண்பாட்டு விரோத, இந்து விரோத கருணாநிதியின் கீழ் போலீஸ் இருந்தால் அப்படி தானே இருக்கும். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி. ஒரு மோசமான முதலமைச்சர், அதனாலே மோசமான காவல்துறை. ஆனால் காவல்துறை எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அடுத்து ஆட்சி மாற்றம் வந்தால் இவர்கள் மாறிவிடுவார்கள். பல்டி அடிப்பதில் முதலில் இருப்பவர்கள் அதிகாரிகள் தான்.

பெண்டாட்டி கழுத்திலே கட்டின தாலி, நெற்றியிலே வைச்சிருக்கிற பொட்டிலே நம்பிக்கை இருந்துன்னா போலீஸ்காரங்க அன்னைக்கு தி.க. காரனை ரோட்டிலே விட்டு அடித்திருக்க வேண்டாமா. உன் பெண்டாட்டி வைக்கிற பூ மேலேயும், பொட்டு மேலேயும், ஒவ்வொரு கோயிலிலேயே கும்பிடுறதையும் அவன் செயல்படுத்த மறுக்கிறான். அதனாலே தானே நடந்தது. போகட்டும் மானங்கெட்டவர்கள். 6 மாதம் தானே பார்த்துக் கொள்வோம்.

கருணாநிதியை திரும்ப கம்பி எண்ண வைக்கலே இந்த பி.ஜே.பி. சர்க்கார் பார்த்துக் கொள்ளங்க என்கிறேன் நான். எத்தனை ஊழல் நடந்திருக்கிறது இந்த ரெண்டு வருசத்திலே. தி.மு.க.ன்னா மின்சார தட்டுப்பாடு, ரேசன் அரிசி கடத்தல், ஊழல் இது தானே இலக்கணம். எங்களுக்கு என்ன கேசா மாட்டாது? இந்த ஆளை உள்ளே வைக்க. சைக்கிள் பேர ஊழல் ஒன்னு போதும். ஏன்னா தமிழ்நாடு அரசு சைக்கிள் கொடுக்கிறதுக்கு எந்த கம்பெனியில் வாங்கிச்சோ, அதே கம்பெனியில் தான் மத்திய பிரதேச அரசும் வாங்கிச்சு. ரூ.150 கம்மி ரேட்டுல. ஒரு சைக்கிளுக்கு ரூ.150-ன்னா எத்தனை லட்சம் சைக்கிள், எத்தனை கோடி ரூபான்னு கணக்கு போட்டுக்குங்க. டி.வி. பேர ஊழலைவிட இது பெரிய ஊழல். நிரந்தரமா தள்ளிடலாம்.

போலீசை வெச்செல்லாம் உள்ளே வைச்சிடலாம்னு இந்துக்களை மிரட்டக் கூடாது. இந்து விரோதி கருணாநிதி. கேடு கெட்ட ஆட்சியின் கீழே இவ்வளவு தெனாவட்டா, கொழுப்பா, திமிரா, இந்துக்களுக்கு எதிரா நடவடிக்கை எடுக்கற. இந்து மதத்தைப் பற்றி எப்படி பேசுவே, ஏய்யா உங்களுக்கு கருவிலே குற்றம் என்கிறேன் நான். கருணாநிதிக்கு கருவிலே குற்றம்.

தந்தை பெரியாருன்னு சொல்றாங்க, அந்த தந்தை பெரியார் எப்படிப்பட்ட நபர் தெரியுமா? அவ்வளவு கேவலமானவன் பகுத்தறிவாதியா? சீர்திருத்தவாதியா? கேடு கெட்ட ஜென்மங்கள், சமூக விரோத சக்திகள், மிக மோசமான இழிந்த ஜென்மங்கள் ஈ.வெ.ரா. அதன் பாரம்பரியத்தில் வந்த அத்தனை தி.க.காரனும். யார் இந்த ஈ.வெ.ரா. என்ன பெரிய பகுத்தறிவு பகலவனா? பேசிக் அறிவே இல்லாத ஆள். வெள்ளைக்காரன் கைக் கூலி, தேசத் துரோகி, அன்னியனின் அடிவருடி. ஈ.வெ.ராவைப் பற்றி முழுக்க தெரிஞ்சிக்குனுமுன்னு சொன்னா தமிழர் தலைவர் ஈ.வெ.ரா.ன்னு, முதல்ல ஈ.வெ.ரா. தமிழனேயில்ல. கன்னட நாய்க்கரு. தமிழர் தலைவரன்னு சாமி சிதம்பரனாருன்னு ஈ.வெ.ராவினுடைய சிஷ்ய பிள்ளை எழுதிய வரிகளை சொல்றேன். இந்த புழுத்த ஜென்மங்களை வீதிகளில் நடமாடவிடுறதே தப்பு, இந்த நாட்ல பெண்களுக்கு ஆபத்து. பெண்களின் மானத்துக்கு ஆபத்து. தி.க.காரனை, தி.மு.க. காரனையெல்லா ரோடுல நடமாடவிடுறது தப்பு. தி ஆன்ட்டி சோசியல் எலிமென்ட். ஈ.வெ.ரா. புத்தகத்தை கையிலே வைச்சிக்கிட்டு ஒவ்வொரு தி.க. காரனையும் உதைச்சி சேதுவா இருக்கட்டும், ராமனா இருக்கட்டும், அவனை இல்ல உள்ளே தள்ளனும். பிஜே.பி.காரனை எதுக்கு தள்றது.

ஈ.வெ. ராமசாமி நாயக்கர் இருந்த காலத்திலே இந்து சொரணை இல்லாமல் இருந்தான். ஆனா இப்ப அப்படி இல்ல. அப்போ நாங்கள் எல்லாம் தலை எடுக்கல. அதனால என்னடா பேடித்தனம், அராஜகம் என்கிறேன். முதலில் போலீசிலே அனுமதி மறுத்தாங்க. பின்பு கொடுத்தாங்க. கருணாநிதி என்ன கொடுக்க சொன்னாரா? கருணாநிதியே சொன்னாலும் காவல்துறையே கேட்கக் கூடாது என்கிறேன் நான். இந்த நாட்டிலே எந்த மதத்தையும் புண்படுத்தக் கூடாது என அரசியல் சட்டத்தில் இருக்கு. எப்படி அனுமதி கொடுத்தது காவல் துறை.

பெரியார் பெயரை தமிழ்நாட்டில் சொல்லுவதே தப்புடா, தேச துரோகிடா. அவன் வெள்ளைக்காரன் கைக்கூலி. 1947 இல் சுதந்திர நாளை, துக்க நாள்னு சொல்லி, சுதந்திர தினத்தில் கருப்புக்கொடி ஏற்றச் சொன்ன தேச துரோகி. கேவலமானவனில்ல. அவன் பேரை சொல்பவனெல்லாம் தேச துரோகி. தாயை வீதியிலே விக்றவனுக்கும், ஈ.வெ.ராவுக்கும் என்னடா வித்தியாசம்? மானம் கெட்டவனுக்கு விழாவா, சிலையா? ஈவ்டீசிங்கில் போயிடுவீங்க. ஜாக்கிரதையா இருங்க. நடக்கும் தமிழ்நாட்டுலே. இந்தியாவிலே 200 வருஷம் வெள்ளைக்காரன் அடிமைதனத்தை ஏற்று இருந்தவன் தானே கொஞ்சம் கொஞ்சமாகத்தான் இந்தியனுக்கு சொரணை வரும். அப்படி அப்படி ஊட்டி வளர்க்கனும், கொஞ்சம் காலம் இன்னும் 10 வருஷம்.

என்ன அராஜகம்? எவன்டா பெரியார் இந்த நாட்டுக்கு பெரிய வழிகாட்டியா? யாரு விலை மாதர்களோடு காவேரி ஆற்றங்கரையில் கும்மாளம் அடிக்கிறான், பெண்களைப் பற்றி ஈ.வெ.ராவுக்கு என்னய்யா ஒபினீயன் இருக்கு? பெண்களைப் பற்றி சொல்றான் ஈ.வெ.ரா., பெண்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. விருப்பப்பட்ட ஓட்டலிலே விருப்பப்பட்ட பணியாரம் சாப்பிடுவதுபோல விருப்பப்பட்டவனோடு பெண்கள் இருக்க வேண்டும்.

எவ்வளவு பெரிய தமிழின துரோகித் தெரியுமா இந்த ஈ.வெ.ரா.? கண்ணகியை சொல்றாரு, கண்ணகியைப் போல மிக மோசமான கற்பில்லாதவள் கிடையாதாம். மார்பகத்தை தூக்கி எறிந்தாளாம். மதுரை பற்றி எரிந்ததாம். கண்ணகி மார்பு என்ன பாஸ்பரஸ் உருண்டையா? கேட்டானா, இல்லையாய்யா. இப்படி கேட்ட மானங்கெட்டவன் தமிழர் தலைவரா? தமிழின துரோகி இல்ல ஈ.வெ.ரா. தமிழை காட்டுமிராண்டி மொழின்னு சொன்ன ஈ.வெ.ரா.வின் பேரை சொல்றவன் நாக்கை அறுத்தாலும் தப்பு உண்டா இந்த நாட்டுல. நான் சொல்ல மாட்டேன். மக்கள் கோபப்பட்டு நாக்கை அறுத்துட்டா, நான் பொறுப்பல்ல.

பெரியார் தி.க.வா, பெரியாரே வீணா போனவன் அவனுக்கு ஒரு கழகமா? தமிழின துரோகி, சிலப்பதிகாரத்தை எதிர்த்தவன், மிக மோசமான பின்னணி இருக்குற நீங்க இந்து மதத்தைப் பற்றி பேசறதா நான் கேக்குறேன். உலகம் பூரா சிலுவையில் அடிச்சிகறானடா இந்த பகுத்தறிவுவாதிகளை தீ மிதிச்சா மட்டும் போதாது. பெரியார் தி.க. தலைவன் யாரு கொளத்தூர் மணியா? அவனைக் கொண்டு வந்து சிலுவையில் அடிப்போம் என்கிறேன் நான். பகுத்தறிவை காட்டிடுவோம் என்கிறேன் நான். என்னடா மானங்கெட்ட பயலுங்களா.

இந்துக்கள் சொரணை கெட்டு இருக்கிறதனாலே தானே இந்த மானங்கெட்ட பயல்கள் பண்றான். இது வீர பாரம்பரியம். நரபலி கொடுத்து மகா பாரதத்தில் வெற்றி பெற்ற வீரபாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் நாம். பாரத நாட்டைச் சேர்ந்த பண்பாட்டு கலாச்சாரத்துக்கு சொந்தமான இந்துக்கள் நாம். இன்றைக்கு இந்த தி.க. காலிகள், பெண் பொறுக்கிகள் ஈ.வெ.ரா.வைப் போன்ற மோசமானவன் பேரைச் சொல்லி இவ்வளவு பேர் திரியறதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கோமே நாம. ஏன், நம்ம சாமிங்ககிட்ட ஆயுதத்தைக் கொடுத்துவிட்டு, நாம நாசமா போயிட்டோமா? அய்யனார் கையிலே ஆயுதம், காளி கையிலே சூலம் எல்லாத்தையும் கொடுத்துட்டு நம்ம கையிலே ஒண்ணுமே இல்லையே? இனிமே இந்து மதத்துக்கு எதிரா ஒரு பயலும் பேசக் கூடாது என முடிவு எடுக்கனும், நாம இங்கே. அந்த நேரம் வரும்.

இராம ஜென்ம பூமி இந்து மக்களிடையே மத எண்ண உணர்வுகளை அசைத்துக் கொடுத்தது. அது இப்ப நடக்கும். திராவிட இயக்கத்தின் சரித்திரம் கடந்தகாலமாகிவிடும். தோழர்களே நாம் ஒன்றை முடிவு செய்வோம். எந்த இந்து விரோதியும் இந்த மண்ணிலே செயல்படவிடக் கூடாது.

இவ்வாறு அந்த ஆசாமி ஆணவத்தோடு பேசியுள்ளார். ✦

## கழகத்துக்கு ஒரு தோழரின் மனம் திறந்த பாராட்டு

இன்று நாட்டில் மூடத்தனத்தைப் பரப்பி வரும் நாள், கிழமை, திங்கள் இதழ்கள், தொலைக்காட்சி, திரைப்படங்கள் ஆகிய ஊடகங்கள் - சோதிடம், ராசிபலன், ஆன்மீகம் என்ற பெயரிலும், ஆடை குறைத்து ஆபாசம் காட்டியும், பொய்களைப் பரப்பியும், மக்களின் அறிவையும் பொருளையும் சுரண்டித் தின்று கொழுக்கின்றனர். அவர்களுக்கு மக்களும் பேராசை வயப்பட்டு, அறிவிழந்து அடியைாகிப் போகிறார்கள்.

வீழ்ந்து கிடந்த மக்கள் பகுத்தறிவாளர்களின் ஓயாத உழைப்பால் உடல் பொருள் உயிர் இழப்பால் விழித்து எழுந்து தெளிந்தனர். உயரவும் செய்தனர்.

ஆனால், அடுத்தத் தலைமுறை, எவனால் - எதனால் இவன் பாட்டனும் முப்பாட்டனும் இழிவுபடுத்தப் பட்டார்களோ; இவன் தாத்தன் எதை - எவனை எதிர்த்துப் போராடிப் போராடி எல்லாம் இழந்தானோ; இவன் அப்பன் எவனை - எதனை எதிர்த்து அடித்து நொறுக்கி விழித்தெழுந்து உயர்ந்தானோ அவனை - அதனை மீண்டும் துதித்துத் தொழுது போற்றிப் புகழ்ந்து எழுதியும் பேசியும் இழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் பெரியார் திராவிடர் கழகம் (இது போன்ற பிற அமைப்புகள்) ஆற்றும் மூடநம்பிக்கை ஒழிப்புப் பணிகள் போற்றப்பட வேண்டிய - என்றும் தேவையான சிறப்பான பணி. ஒவ்வொரு பகுத்தறிவாளரும் இவை போன்ற பணிகளுக்கு பொருளுதவி செய்ய வேண்டும், தொடர்ந்து. பெரியார் திராவிடர் கழகத்தின் இத்தொண்டு தொடர விழைகிறேன். (ரூ.1000 நன்கொடையும் வழங்கியுள்ளார்)


– **பொன். இராமச்சந்திரன்.** சென்னை - 75.

## அடுத்த இதழில்

**நாகை மாவட்டக் கழகத் தோழர்கள் பூம்புகாரில் நடத்திய பயிற்சி முகாம் எழுச்சி செய்திகள்**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

முதல் பக்கத் தொடர்ச்சி



ஊர்வலம் பொதுக்கூட்ட மேடையை அடைந்தவுடன் மடத்துக் குளம் பகத்சிங் சிலம்பாட்டக் குழுவின் சிறுவர்கள், சிலம்பாட்டம் நடத்திக் காட்டினர். திருப்பூர் தியாகு பிரச்சாரப் பாடல்கள் பாடினார்.

மாலை 7 மணியளவில் மடத்துக் குளம் ஒன்றியச் செயலாளர் சு. சிவானந்தம் தலைமையில் பொதுக் கூட்டம் தொடங்கியது. கூட்டத்திற்கு மடத்துக்குளம் ஒன்றியப் பொருளாளர் நா.ப. கதிரவன், ஜோத்தம்பட்டி மா. மோகன், கடத்தூர் கிளைச் செயலாளர் அய்யப்பன், காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முருகேசன் வரவேற்புரையாற்றினார்.

திருப்பூர் சன். பாண்டியநாதன், பொள்ளாச்சி வட்டச் செயலாளர் கா.சு. நாகராசன், கோவை வடக்கு மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் கா. கருமலை யப்பன், தலைமை செயற்குழு உறுப் பினர் இரா. மனோகரன் ஆகியோர் பேசிய பின்னர் கழகப் பொதுச் செயலாளர் கோவை. கு. இராம கிருட்டிணன் சிறப்புரையாற்றினார். இறுதியாக சிற்பி இராசன் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சியுடன் நீண்ட நேரம் பேசினார்.

மழைத் தூறல் விழுந்து கொண் டிருந்த போதும் பெருமளவில் மக்கள் திரண்டிருந்து நிகழ்ச்சியையும், கருத்து களையும் கேட்டனர்.

ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்தி லும் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். திருப்பூர் முகில்ராசு, கார்த்தி மற்றும் தோழர்களும், கோவை கதிரவன் மற்றும் தோழர்களும், பொள்ளாச்சி காளியப்ப கவுண்டர் புதூர் தோழர்களும், ஆனைமலை ஒன்றியச் செயலாளர் ருக்குமணி, துணைச் செயலாளர் சம்பத், பழனி ஆசிவக்குமார், சுல்தான் மருதமூர்த்தி, நல்லதம்பி போன்ற தோழர்களும் பகுத்தறிவாளர் பேரவை இரா.மோகன், உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன், ஒன்றியச் செயலாளர் கோ.விசுவநாதன், ஒன்றியப் பொரு ளாளர் சு. அரிதாசு, நகரப் பொருளாளர் மு. வேல்முருகன், உடுமலை ரமேசு, கடத்தூர் காமராஜ், சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரத்தொழுவு கிராம மக்களை எல்லாம் வீதிக்கு கொண்டு வந்து மூடநம்பிக்கை ஒழிப்பு விளக்க ஊர் வலத்தைக் காணும் வகையில் நிகழ்ச்சியை சிறப்புறச் செய்ய, காரத் தொழுவு முழுவதும் கழகக் கொடியைக் கட்டியும், சுற்றியுள்ள 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுவரொட்டி ஒட்டி விளம்பரம் செய்தும், மிகச் சிறந்த முறையில் செயல்பட்ட தோழர்கள் மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சு.சிவானந்தம், காரத்தொழுவு கிளை அமைப்பாளர் குமயில்சாமி, ஜோத்தம் பட்டி மா.மோகன், மடத்துக்குளம் ஒன்றியப் பொருளாளர் நா.ப. கதிரவன், கடத்தூர் கிளைச் செயலாளர் அய்யப்பன், காமராஜ், காரத்தொழுவு முருகேசன் ஆகியோரின் கடும் உழைப்பு பாராட்டத்தக்கதாகும்.

### சின்ன வீரம்பட்டியில்

உடுமலைப்பேட்டை ஒன்றியம் சின்னவீரம்பட்டி கிளைக் கழகத்தின் சார்பாக 21.6.2008 சனியன்று மாலை 7.30 மணியளவில் 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சி, பொதுக்கூட்டம் நடை பெற்றது.

உடுமலை ஒன்றியக் கழகத் தலைவர் சி.வி.இராசேந்திரன் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்றார். கிளைக் கழகச் செயலாளர் ப.சிவகுமார், கிளைக் கழகப் பொருளாளர் கா.சண்முக சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மந்திரமா, தந்திரமா? நிகழ்ச்சியுடன் சுமார் 2 மணி நேரம் சிற்பி ராசன் சிறப்புரையாற்றினார். பொது மக்கள் திரளாகக் கூடியிருந்து நிகழ்ச்சியைக் கவனித்தனர்.

நிகழ்ச்சியில் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் கா.கருமலை யப்பன், தலைமைக் கழகத் தொடர் பாளர் ந. பிரகாசு, உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், நகர செய லாளர் இரா. பாக்கியநாதன், ஒன்றியச் செயலாளர் கோ.விசுவநாதன், ஒன்றியப் பொருளாளர் சு.அரிதாசு, நகரப் பொருளாளர் மு.வேல்முருகன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் கிளைக் கழகத் தலைவர் சு.தமிழ்வேந்தன் நன்றி கூறினார்.



*செய்தி : கரு.மலையப்பன்.*

# தமிழக கோவில் வரலாறு

தமிழ்நாட்டில் முன்பு கற்கோவில் களே இல்லை, செங்கற்களினாலும் சுண்ணாம்பினாலும் கட்டப்பட்ட கோவில்களே இருந்தன. பல்லவ மன்னர்களே முதன் முதலாகக் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் கற்கோயில் அமைத் தனர். பல்லவர்களைப் பின்பற்றி, ஊர் தோறும் கற்கோவில்களை உருவாக்கிய பெருமை சோழ மன்னர்களுக்கு உரியது. பல்லவர், சோழர்களைத் தொடர்ந்து, பாண்டியர்களும் கற்கோவில்களை எழுப்பத் தொடங்கினர்.

**முதற் கோவில்**

கடைச் சங்க காலத்திற்குப் பின்பே கோவில் வழிபாடு தோன்றியது. செங்கற் களாலும், சுண்ணாம்பினாலுமே கட்டப்பட்ட அன்றைய கோவில்கள், பின்பு கற்கோவில்களாக மாறத் தொடங்கின. கி.பி.7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் (கி.பி.600-630) முதன் முதலாகக் கற்கோவில் எழுப்பினான். குன்றுகளைக் குடைந்து கோவில் அமைக்கும் முறையைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவன் முதலாம் நரசிம்ம வர்மன் (கி.பி.630-668). மகேந்திர வர்மனின் மகனாகிய இவன் எழுப்பிய கோவில்களில் சிங்கத் தூண்கள் முதன் முதலாக இடம் பெற்றன.

கருங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கிக் கோவில் கட்டத் தொடங்கியவன் இரண்டாம் நரசிம்ம வர்மன். முதலாம் நரசிம்ம வர்மனின் பெயரன் இவன்.

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், மாமல்லபுரம் கடற்கரைக் கோவில் - இவை இரண்டும் தமிழ்நாட்டின் தொடக்ககாலக் கோவில்கள்.

பல்லவர் தொடங்கி வைத்த கற்கோவில் முயற்சியை, சோழரும், பாண்டியரும் தொடர்ந்து நிறை வேற்றிப் பரவலாக்கினர்.

திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் என்னும் சமயக்குரவர் மூவரும் வழிபட்ட சிவத்தலங்கள் யாவும் - செங் கற்களால் கட்டப்பட்ட கோவில்களே என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

**புலவர் செந்தலை ந. கவுதமன்**

# மதத்தின் பெயரில் நிர்வாண ஊர்வலமா?

சென்னையில் சமண மதத்தைச் சார்ந்த திகம்பர சாமியார்கள், முழு நிர்வாணமாக பொது இடங்களில் நடமாட மதத்தின் பேரால் அனுமதிக்கப்பட் டுள்ளதை நாகரிக சமூகத்தால் ஏற்க முடியுமா?

இந்திய அரசியல் சட்டத்தின் 25வது பிரிவு மத சுதந்திர உரிமையை வழங்கியுள்ளது உண்மைதான். ஆனால் அந்த மதச் சுதந்திரம், பொது ஒழுங்கு, ஒழுக்க நெறிகளுக்கு கட்டுப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்று அதே சட்டம் (25(1)வது பிரிவு) கூறுவதை புறக்கணித்து காவல்துறை செயல்படலாமா?

மூடநம்பிக்கைக்கு எதிராக அறிவியலைப் பரப்ப பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்யும் ஊர்வலங்களை ஆபாச ஊர்வலம் என்று பொய்யாகக் கூறி பார்ப்பன மதவெறி சக்திகள் தடை செய்ய கூப்பாடு போடும்போது அதற்கு செவி சாய்க்கும் காவல்துறை உண்மையான ஆபாசத்தை மதத்தின் பேரால் அனுமதிக்கலாமா? ஏன் இந்த இரட்டை வேடம்?

சமண மதம் கடவுளை ஏற்றுக் கொள்ளாத கடவுள் மறுப்பு மதம் என்பது நமக்குத் தெரியும்; ஆனால் பொது இடங்களில் பெண்களும், குழந்தைகளும் முகம் சுளிக்கும் வகையில் ஆண் சாமியார்கள் நிர்வாண ஊர்வலம் போவது பகுத்தறிவுக்கு எதிரானது அல்லவா?

தற்கொலை செய்து கொள்ளக்கூட சமண மதம் அனுமதிக்கிறது. அதற்காக, நிர்வாணத்திற்கு அனுமதிப்பது போல் இவர்கள் தற்கொலை செய்து கொள்ளவும் காவல்துறை அனுமதிக்குமா?

காதலர் தினம் கொண்டாடுவதால் கலாச்சாரம் பாழாகிறது என்று கலவரத்தில் இறங்கும் பார்ப்பன இந்து முன்னணிகள் இந்த நிர்வாண ஊர்வலம் குறித்து வாய்த் திறக்காதது ஏன்? தமிழக அரசே! காவல்துறையே! நிர்வாண சாமியார்களின் ஆபாச ஊர்வலத்தை தடுத்து நிறுத்து.

**– மேற்கண்ட துண்டு பிரசுரம் கழக சார்பில் ஆர்ப்பாட்டத்தின்போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.**

# கழகத்தோழர் செல்வராசு இல்ல மணவிழா


சென்னை பல்லாவரம் கழகத் தோழர் ஆ.பா. செல்வராசு - சொர்ணம் தம்பதியரின் மகன் செ. ஆஞ்சலோஸ், சென்னை அனகாபுத்தூர் அ.தேவதாஸ்-மனோன்மணி தம்பதியரின் மகள் தே. ஆன்சி ஆகியோரின் பதிவு திருமணம் 30.6.2008 திங்கள் காலை 10 மணியளவில் சென்னை பம்மல் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாலை வரவேற்பு நிகழ்ச்சி பல்லாவரம் பழைய டிரங்க் சாலையில் உள்ள அல்ஸ்தாம் தொழிலாளர் முன்னேற்ற சங்க கூடத்தில் தேனிசை செல்லப்பா குழுவினரின் இன்னிசையோடு தொடங்கியது. ஆ.பா. செல்வராசு வரவேற்க கழகத் துணைத் தலைவர் ஆனூர் கோ. செகதீசன் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். செ.ஜோசப் ஸ்டாலின் நன்றி கூறினார்.

கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் மற்றும் அனைத்துக் கட்சிகளை சார்ந்தவர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். மணமக்கள் சார்பில் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு ரூ.1500 நன்கொடை வழங்கப்பட்டது. ஆசுப்பையா ரூ.500/-ம், சென்னை தோழர் பொன். இராமச்சந்திரன் ரூ.1000-மும் நன்கொடையாக கழக ஏட்டுக்கு வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 10th July 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஜூலை 17, 2008 புரட்சி 7 முழக்கம் 29 விலை : ரூ.2.50


### சாதி மறுப்பு திருமணத்தை எதிர்த்து வெறியாட்டம்

# ஈரோட்டில் சாதி ஒழிப்பு கூட்டியக்கம் களமிறங்கியது

இரட்டை தம்ளர் முறையை எதிர்த்து போராட்டக் களத்தில் இறங்கிய பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து நம்பியூர் திருமண மண்டபத்தில் அருந்ததியினருக்கு இடமில்லை என்ற தீண்டாமையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றது. கழகத்தின் முயற்சியால் சாதி ஒழிப்பு முற்போக்கு அமைப்புகளின் சாதியொழிப்புக் கூட்டியக்கம் உருவாகியது. தொடர்ந்து பார்ப்பனர்கள் உருவாக்கிய பார்ப்பனியத்துக்கு பலியாகி, சாதி வெறியோடு செயல்படும் ஆதிக்கசாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக சாதி ஒழிப்பு கூட்டியக்கம் களப்பணிகளில் இறங்கி வருகிறது. சேலம் மாவட்டம் காவலாண்டியூர் கிராமத்தைச் சார்ந்த தலித் இளைஞரும், அதே கிராமத்தைச் சார்ந்த நாடார் சமூகத்தைச் சார்ந்த பெண்ணும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். ஆதிக்க சாதியினர், இதை எதிர்த்து நடத்திய வன்முறை வெறியாட்டத்துக்கு வழக்கம் போல் காவல்துறையும் துணை போனது. சாதி ஒழிப்பு கூட்டியக்கம் இதை எதிர்த்து கடந்த ஜூன் 30 ஆம் தேதி மாலை 5 மணியளவில் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது. செய்தி விவரம்:

உச்சநீதி மன்றத்தில் 2006 ஆம் ஆண்டு லதாசிங் வழக்கில் நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பு இச்சமூகத்தில் நிலவும் சாதி நம் நாட்டில் எல்லா ஒற்றுமையையும் அழித்துவிடும். எனவே, சாதி ஒழிய வேண்டுமென்றால் சாதி மறுப்புத் திருமணங்களை நாம் ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான். சாதி மறுப்புத் திருமணம் செய்யும் காதலர்களுக்கு அரசும், காவல்துறையும் பாதுகாப்புத் தர வேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

ஆனால், உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக சாதி ஆதிக்கவாதிகளுக்கு துணைப்போகிறது ஈரோடு காவல் துறை. சேலம் மாவட்டம் காவலாண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த அம்மாசை என்ற தலித் சமுதாயத்தைச் சார்ந்தவரின் மகன் கிருஷ்ணனும் அதே கிராமத்திலுள்ள மணிமேகலை என்கிற நாடார் சாதியை சார்ந்த பெண்ணும் காதலித்துள்ளனர். அவர்கள் ஊரை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

காதலர்கள் திருமணம் செய்து கொள்ள சட்டரீதியாக உரிமை இருந்தும் பெண் வீட்டார்கள் கொலை வெறியுடன் அவர்களை தேடி வந்துள்ளனர். சாதி வெறி பிடித்த அந்த ஆதிக்கக் கூட்டம் ஈரோட்டில் மகளிர் சுயஉதவிக் குழு என்ற பேரில் கட்டப் பஞ்சாயத்து உள்ளிட்ட ஊழல்களுக்கு துணை புரிந்து வரும் திலகவதி என்ற பெண்ணின் உதவியுடன், ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர்களுடன், சேர்ந்து சட்ட விரோதமாக கத்தி போன்ற ஆயுதங்களுடன் இரண்டு கார்களில் வந்து காவலாண்டியூரில் இருந்த மணமகனின் தந்தை அம்மாசையை வலுக்கட்டாயமாக தூக்கிக் கொண்டு வந்துள்ளனர்.

வழியில் சித்தோடு பால் பண்ணை அருகே வாகனங்களை நிறுத்தி காவலர்களை கண் சிமிட்டி ஒதுங்கியிருக்க சொல்லிவிட்டு அம்மாசையை காரிலேயே வைத்து கடுமையாக அடித்து தாக்கி, குத்திக் கொலை செய்து விடுவோம் என்று கத்தியை காட்டி மிரட்டியுள்ளனர். சாதியை சொல்லி இழிவாக திட்டி அவரை கேவலப் படுத்தியிருக்கிறார்கள் அந்த சாதி வெறியர்கள். காவல்துறையின் ஒப்புதலோடு காட்டுமிராண்டித்தனம் நடத்திருக்கிறது.

அதன்பின் அம்மாசையை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து அங்கே காவலர்களும், திலகவதியும் சேர்ந்து வலுக்கட்டாயமாக அவர் வாயில் மதுவை ஊற்றி குடிக்கச் செய்து ஈரோடு மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருத்துவ பரிசோதனை செய்து வந்திருக்கிறார்கள்.

மருத்துவமனையில் திலகவதி தனக்கு உயரதிகாரிகளிடம் பெரும் செல்வாக்கு உள்ளதாக சொல்லி காவலர்களையும், ஊழியர்களையும் மிரட்டியிருக்கிறார்.

இவர்களின் சித்ரவதையால் உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார் அம்மாசை. தான் கடுமையாக தாக்கப்பட்டதை விரிவாக எடுத்துச் சொல்லியும்கூட ஒருநாள் கழித்தே காவல்துறை அதிகாரிகள் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

- காவல்துறை விசாரணை என்ற பேரில் ஒரு கட்டப் பஞ்சாயத்து பெண்மணியான திலகவதி காவலர்களுடன் சென்று மிரட்டும் அளவுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?
- காவல்துறையின் பாதுகாப்பிலேயே கொலை வெறி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட தலித் அம்மாசைக்கு உரிய நியாயம் கிடைக்க வேண்டும்.
- சட்டப்படியும், நியாயப்படியும், சாதி மறுப்புத் திருமணம்செய்து கொண்ட கிருஷ்ணன் - மணிமேகலைக்கு காவல்துறை முறையான பாதுகாப்பு வழங்கவேண்டும்.
- ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்திலேயே பலாத்காரமாக வாயில் மதுவை ஊற்றி வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட அம்மாசையின் இந்த நிலைமைக்கு பின்னணியில் இருந்தவர்களை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்.

என்ற கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு கூட்டியக்கப் பொறுப்பாளர் ப. இரத்தினசாமி தலைமை வகித்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் ஜி. வெங்கடாசலம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் எஸ்.சுப்ரமணியன், மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன், மக்கள் சிவில் உரிமைக் கழக பொதுச் செயலாளர் பாலமுருகன், தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சி பொதுக்குழு உறுப்பினர் ச.அர. மணிபாரதி, விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் மு.சேதுபதி, தமிழர் தேசிய இயக்கத்தைச் சார்ந்த சத்தியமூர்த்தி, சாதி ஒழிப்பு கூட்டியக்கத்தைச் சார்ந்த ஆ.மாரப்பனார், புரட்சிகர தொழிலாளர் விடுதலை முன்னணியைச் சார்ந்த இரணியன், ஆதித் தமிழர் பேரவையைச் சார்ந்த வீரகோபால் ஆகியோர் உரையாற்றினர். ✦

## ஈரோடு மாவட்டக் கழகத்தின் தீவிர செயல்பாடுகள்

ஈரோடு மாவட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து களப்பணிகளை எழுச்சியுடன் நடத்தி வருகிறது. பெரியாரியல் பயிற்சி முகாமைத் தொடர்ந்து,

ஜூன் 30 - ஈரோடு மாவட்ட காவல்துறையைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்.

ஜூலை 8 - ரோகிணி மில்ஸ் முன்பு பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்.

ஜூலை 13 - காசிபாளையத்தில் தோழர் சிற்பி ராசன் பொதுக் கூட்டம் சிறப்புடன் நடந்து முடிந்துள்ளன.

ஜூலை 20 - அந்தியூரில் பெரியார் பிறந்த நாள் விழா, நாத்திகர் விழாப் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. தோழர்கள் தீவிர பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### லண்டனில் பேரெழுச்சி
## புலிகளுக்கு கொசாவா பகிரங்க ஆதரவு

தமிழ் ஈழத்துக்கான கோரிக்கை விடுதலைப் புலிகளையும் தாண்டி உலகம் முழுதும் தீவிரம் பெற்று வருகிறது என்று ‘டெக்கான் குரோனிக்கல்’ நாளேடு (ஜூலை 14) முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த சனிக் கிழமை லண்டனிலுள்ள ரோகேம்ப்டன் விளையாட்டு மைதானத்தில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் 25,000த்துக்கும் அதிகமான தமிழர்கள் திரண்டனர் என்று லண்டன் சென்று திரும்பியுள்ள, அந்நாளேட்டின் செய்தியாளர் பகவான்சிங் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனில் - பல்வேறு கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், சர்வதேச விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதிநிதிகளும் பங்கேற்றதோடு, சிங்கள இடதுசாரி கட்சியினரும் பங்கேற்றுப் பேசியுள்ளனர். பெண்களும், குழந்தைகளும் பெருமளவில் திரண்டதோடு, பிரபாகரன் உருவம் பொதித்த பனியன்களை அணிந்து வந்திருந்தனர். பிரிட்டனில், விடுதலைப் புலிகளின் இயக்கத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும், பேரணிக்கு தடை போடவில்லை. உலகம் முழுது மிருந்தும் மனித உரிமையாளர்கள் திரண்டிருந்தனர்.

அண்மையில் விடுதலை பெற்ற நாடான கொசாவாவின் மைத்ரோவிக்கா நகர மேயரான டாக்டர் பஜ்ராம் ரக்சேபி இதில் பங்கேற்றது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். கொசாவா விடுதலை இயக்கத்தில் மருத்துவராகப் பணிபுரிந்தவர் இவர். இவர் தனது உரையில்,

“கொசாவா விடுதலை இயக்கமும், விடுதலைப் புலிகள் போல் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் தான் இடம் பெற்றிருந்தது. காலம் மாறி விட்டது. அதே நிலை விடுதலைப் புலிகளுக்கும் வரும். விடுலைப் புலிகளின் தமிழ் ஈழப் போராட்டத்துக்கு கொசாவா, தனது முழு ஆதரவை வழங்கும்” என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

“லண்டனைச் சுற்றியுள்ள 12 நகரங்களிலிருந்தும் தமிழர்கள் திரண்டு வந்திருந்தனர். இதற்கு முன் எப்போதும் இருந்திடாத அளவில் தமிழர்கள் உலகம் முழுதும், தங்களது விடுதலை உணர்வை வெளிப்படுத்தி வரு கிறார்கள்” என்று லண்டனில் உள்ள தமிழ்ப் பொறியாளர் சார்லஸ் அந்தோணி தாஸ் தெரிவித்தார்.

இவ்வாறு ‘டெக்கான் குரோனிக்கல்’ ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

தலையங்கம்

# மீனவர் படுகொலை!

நாகை மாவட்டத்தில் மீண்டும் இரு தமிழக மீனவர்களை இலங்கை கப்பல் படை சுட்டுக் கொன்றுவிட்டது. இது வரை சுமார் 300 தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்திய அரசோ, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல், தமிழக மீனவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்காமல், இலங்கைக் கப்பல் படைக்கு கூடுதலாக நவீன ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கப் போகிறதாம். பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளிநாட்டுத் துறை செயலாளர் சிவ்.சங்கர்மேனன், பாதுகாப்புத் துறை செயலாளர் விஜய்சிங் ஆகியோர் ஜூலை முதல் வாரத்தில் கொழும்பு சென்று, இந்தியா ஆயுத உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறி விட்டு டெல்லி திரும்பியுள்ளனர். மிசோரம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் சிங்கள ராணுவத் தினருக்கும் கடல்படையினருக்கும் பயிற்சிகள் தரப் போகிறார்களாம்.

சீனாவும், பாகிஸ்தானும் இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதை தடுக்கவே, இந்தியா தாமாக முன் வந்து உதவுவதாக, பார்ப்பன அதிகார வட்டா ரங்கள் கூறுகின்றன. தமிழக மீனவர்கள் பிண மாவது பற்றியோ, அவர்கள் மீன்பிடி தொழில் பாதிக்கப்படுவது பற்றியோ, கச்சத் தீவு பறிபோனது பற்றியோ, பார்ப்பன அதிகார வர்க்கத்துக்கு கவலை இல்லை. சீனாவையும், பாகிஸ்தானையும் அடக்கி வைப்பதில்தான் ஆர்வம் காட்டுகிறார்கள்.

எந்த ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையும் அந்த நாட்டில் வாழும் மக்கள் உரிமைக்கும் நலனுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும். ஆனால், இந்தியாவின் பார்ப்பன ஆளும் வர்க்கம், நாட்டு மக்கள் நலனைவிட, தனது ஆதிக்க நலன்களையே முன்னிறுத்தி கொள்கைகளை வகுக்கிறது. அதனால் தான் சீனா, பாகிஸ்தான் நாட்டின் பகைமையை முன் வைத்து, மக்கள் பிரச்சினைகளைப் பின்னுக்குத் தள்ளி விடுகிறார்கள். சிறீலங்கா அரசு ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ராணுவத்தால் ஒடுக்குவதைக் கண்டிக்காமல், அந்நாட்டுக்கு ஆயுதம் வழங்க முன் வருகிறார்கள். அதே நேரத்தில், ஆட்சியே கலைந்தாலும் பரவாயில்லை என்று கருதி, அமெரிக்காவுடன் அணு சக்தி ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, இந்திய பாதுகாப்பை அமெரிக்காவிடம் அடகு வைக்கத் துடிக்கிறார்கள்.

'அடக்கியாள்; ஆதிக்கம் செலுத்து' என்பதே பார்ப்பனியத்தின் சித்தாந்தம். அந்தப் பார்ப்பனிய சித்தாந்தத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தும் நாடுதான் அமெரிக்கா. எனவே அமெரிக்க சங்கிலிப் பிணைப்பில் தன்னையும் இணைத்துக் கொள்ள இந்தியாவின் ஆளும் பார்ப்பன வர்க்கம் துடியாய் துடிக்கிறது. அதே நேரத்தில் தமிழக மீனவர்கள் படுகொலை என்றாலும், ஈழத் தமிழர் இனப் படுகொலையானாலும் அதைத் தட்டிக் கேட்காமல், படுகொலைகளை நிகழ்த்துவோருக்கு பகிரங்கமாக உதவுகிறது.

அப்படியானால், இந்தியா என்ற அமைப்பும், அதை இயக்கும் பார்ப்பன ஆளும் வர்க்கமும், அதன் அடியொற்றி செயல்படும் ஆட்சியாளர்களும் யாருக்காக அதிகாரத்தில் இருக்கிறார்கள்?

இந்த நாட்டின் மக்கள் நலன் பற்றி இவர்களுக்கு கவலை இல்லை என்றால், பிறகு, எதற்காக, இந்த ஆட்சியின் கீழ், குடி மக்களாக இருக்க வேண்டும் என்ற கேள்வி எழத்தானே செய்யும்?

இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு பற்றி கூப்பாடு போடுகிறவர்கள் சிந்திக்க வேண்டும். இந்தியாவை உடைக்கப்போவது, இந்த ஆதிக்க சக்திகளின் தவறான கொள்கைகள் தான் என்பதை, புரிந்து கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை.

பிழைப்புக்கு தொழில் நடத்தப் போய், பிணங் களாகத் திரும்பும் தமிழக மீனவர்களின் குமுறல் களுக்கு பதில் சொல்லித் தீர வேண்டிய கடமையும், பொறுப்பும், இந்தியப் பார்ப்பன ஆட்சிக்கு உண்டு!

# ரோகினி மில்ஸ் நிர்வாகத்தைக் கண்டித்து பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழகம் ஆர்ப்பாட்டம்

11.7.2008 வெள்ளிக் கிழமை காலை 11 மணியளவில் ஈரோடு மாவட்டம் சத்தி வட்டம் இண்டியம்பாளையத்திலுள்ள 'ரோகினி' மில்ஸ் நிறுவனம் முன்பு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழகத்தின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழகத்தின் தலைவர் செயக்குமார் தலைமை தாங்கினார். பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழக செயலாளர் என்.பி. செல்வம், கிளை செயலாளர் பெ. திருமூர்த்தி, கிளை தலைவர் ப. சிதம்பரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



முன்னதாக திருப்பூர் பாடகர் தியாகு, கழகப் பாடல்களை பாடினார். பின்னர் பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழக செயற்குழு உறுப்பினர் கருப்பண்ணன் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் மற்றும் திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் துரைசாமி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி விரிவாக உரை நிகழ்த்தினர். இறுதியாக பொருளாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார். ஏறத்தாழ 2 மணி நேரம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 100க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். மிகவும் எழுச்சியாகவும், போர்க் குணத்துடனும் இந்த ஆர்ப்பாட்டம் அமைந்திருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இளைஞரணி செயலாளர் சிதம்பரம், மாவட்ட அமைப்பாளர் இரகுநாதன், கோபி நகர செயலாளர் செயராமன், நகர அமைப்பாளர் குணசேகரன், நகர பொறுப்பாளர் நிவாசு, மாக்கினாங்கோம்பை பாலு, சத்தி ஒன்றிய செயலாளர் இராசேந்திரன், கூடக்கரைத் தலைவர் அருணானந்தம், கெம்பநாய்க்கன் பாளையம் மூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

- பணி நீக்கம் செய்த நிரந்தர தொழிலாளர்களை மீண்டும் பணியில் அமர்த்தவும்
- வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு நிலுவையிலுள்ள போனஸ் தொகையை வழங்கவும்,
- குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதை நிறுத்தவும்
- கேம்ப் கூலி முறையை ஒழித்துவிட்டு, உள்ளூர் பெண் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவும்
- உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலை அளித்து நிரந்தரம் செய்யவும்
- கட்டாய விடுப்பு ஓய்வுத் திட்டமுறையின் மூலம் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதை நிறுத்தவும்
- தொழிலாளர்களின் தொழிற்சட்டத்தை அங்கீகரிக்கவும்

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# திருக்குறள் கூறும் பகலவன்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இதற்குப் பொருள்: எப்படி எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் அகரம் முதன்மையாக உள்ளதோ, அதுபோல இந்த உலகத்திற்குக் கடவுள் முதன்மையாக உள்ளது என்று உரைகாரர்கள் கற்பித்து உள்ளார்கள். விஞ்ஞானப்படிப் பார்த்தால் உலக உற்பத்திக்குக் கடவுள் ஒன்று அவசியம் இல்லை. அது இயற்கையாகவே நிகழக்கூடியது என்கின்றார்கள். மற்றும் இந்த உலகமானது சூரியனில் இருந்து சிதறி விழுந்த ஒரு தீப்பிழம்பானது குளிர்ச்சியடைந்து பூமியாயிற்று என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். ஆகவே சூரியனே இந்தப் பூமி உண்டாவதற்கு ஆதாரமானவன்; ஆதிகாலந் தொட்டு இருந்து வருபவன் என்பதோடல்லாமல், மேல் நாட்டினரும் முன் காலத்தில் சூரியனைத் தான் வணங்கி வந்திருக்கிறார்கள்; ஆதலால் பகவன் என்பது சூரியனைத்தான் குறிக்கும். **'விடுதலை' 22.3.60**

தமிழ் நூல்களையெல்லாம் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் போடச் செய்தும், நெருப்பில் பொசுக்கிப் பாழாக்கியும் விட்டனர் பார்ப்பனர். எஞ்சியிருப்பது குறள் ஒன்றேயாகும். நமது திருவள்ளுவர் வகுத்த இக் குறள் வழிச் சென்றால் நம் நாட்டுக்கு மட்டுமின்றி வடநாட்டுக்கும் உலகத்துக்குங்கூட நாம் நன்னெறி காட்டியவர்கள் என்ற பெருமையை மீண்டும் அடைய முடியும். **'விடுதலை' 22.3.60**

ஆனாலும், எதற்கெடுத்தாலும் குறள், குறள் என்று சொன்னால் நாம் எப்படி முன்னேறுவது? திருவள்ளுவர் 2000 வருடத்துக்கு முன்னாலே தோன்றிய ஒரு சிறந்த அறிவாளி. அப்போது அவர் கருத்துக்குப் பட்டதை எடுத்துச் சொன்னார். அவர் சொன்னவை முக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் என்று சொன்னால் அதை எப்படி ஏற்றுக் கொள்வது? 2000 ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னது இனி வரப்போகும் உலகத்துக்கு ஒத்ததாக இருக்குமா? எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்பது எவ்வாறு பகுத்தறிவுக்கு ஒத்ததாகும். **'விடுதலை' 2.2.59**

**- பெரியார்**

# பொ ளாச்ளுயி ளுய்ளு ராசபீ பகுத்தறிவு நிக ச்ளு

6.7.2008 ஞாயிறு அன்று பொள்ளாச்சி லாரி உரிமையாளர்கள் சங்க மண்டபத்தில் 'சமூக நீதி' கருத்தரங்கு நடைபெற்றது. நகர செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

குடந்தை சிற்பி இராசன் 'அறிவியல் உண்மைகள் செயல்முறை விளக்கம்' எனும் தலைப்பில் சுமார் 2 மணி நேரம் பகுத்தறிவு செயல் விளக்கப் பிரச்சாரம் நடத்தினார்.

பகுத்தறிவாளர்கள் பேரவையின் அமைப்பாளர்கள் சி.விசயராகவன், இரா. மோகன், உடுமலை பாக்கிய நாதன், நடராசு, சிவா, சிற்றிதழ் ஆசிரியர் பொள்ளாச்சி நசன், காசு. நாகராசன், ராசகுமார், த.இராசேந்திரன்,

4 ஆம் பக்கம்

# புத்தெழுச்சியைத் தந்த பூம்புகார் பயிற்சி முகாம்

*நாகை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் ஜூலை 5, 6 தேதிகளில் கடற்கரை நகரமாம் பூம்புகாரில் பயிற்சி முகாம் எழுச்சியுடன் நடைபெற்றது. 60 தோழர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.*

பூம்புகார் சுற்றுலாத் துறை அரங்கில் பயிற்சி முகாம் நடந்தது. ஜூலை 5 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் சிற்பி ராசன், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகள் நடத்தி, மூடநம்பிக்கைகளை விளக்கிப் பேசினார். 11.30 மணியளவில் தோழர் தமிழகன் 'பாகுபாடு' எனும் தலைப்பில் பயிற்சி அளித்தார். வேறுபாடு - பாகுபாடு - முரண்பாடுகளை விளக்கிக் கூறிய தமிழகன், புராதன சமூகத்தில் பாகுபாடு இல்லை. பிறகு சமூகம் உடைமைச் சமூகமானபோது பாகுபாடுகள் உருவாயின. பாகுபாடுகள் முரண்பாடுகளுக்கு இட்டுச் சென்றன. தீர்க்க முடியாத நிலையில் முரண்பாடுகள் உருவாகிறது. தமிழர் - சிங்களர் பிரச்சினை முரண்பாடுகளாக மாறியுள்ளது. தாய்வழிச் சமூகம் உடைமைகள் உருவான பிறகு தந்தை வழிச் சமூகமாக மாறியது. அப்போது ஆண், பெண் பாகுபாடுகள் தோன்றின. பாகுபாடுகளை நியாயப்படுத்த பார்ப்பனியம் புனிதங்களைக் கட்டமைத்தது. அந்தப் புனிதங்கள் சமூகத்தின் பொதுப் புத்தியில் திணிக்கப்பட்டதால்தான் பார்ப்பனியம் செல்வாக்கு பெற்றது. சிவப்பு நிறமும், பூணூலும், பசுவும், தாலியும், வேதமும், புனிதங்களாக்கப்பட்டு, கருப்பும் உழைப்பும் புனித மற்றவையாக்கப்பட்டன. ஒரு காலத்தில் அடிமைகள் வாங்கப்பட்டனர்; விற்கப்பட்டனர். அவர்கள் ஒரே இடத்தில் இருப்பதற்கு சங்கிலியால் பிணைத்து வைத்தனர். இப்போது சங்கிலி தேவையில்லை. மனப்பூர்வமாகவே விரும்பி அடிமைத்தனத்தை ஏற்க வைத்துவிட்டனர். இதற்குத்தான் பார்ப்பனர் கட்டமைத்த புனிதக் கோட்பாடுகள் பயன்பட்டன என்று விரிவாக விளக்கங்களை முன் வைத்தார். மதிய உணவுக்குப் பிறகு வழக்கறிஞர் சுந்தர்ராசன் 'உலக மயமாக்கல்' எனும் தலைப்பில் விரிவாகப் பயிற்சி அளித்தார்.

உலக மயமாக்கல் என்ற கொள்கை வந்ததால் மக்கள் கடும்பாதிப்புக்குள்ளாவதை விரிவாக எடுத்துரைத்தார். அரசுத் துறைகள் தனியார் மயமாக்கப்படுவதால் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் வேலை வாய்ப்பு உரிமைகள் பறி போகின்றன. நாட்டில் நர்சுகள் பற்றாக்குறை இருந்தாலும், நர்சுகளுக்கான பயிற்சிக் கல்லூரிகள் தொடங்க முதலாளிகள் முன்வருவதில்லை. மாறாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்கவே முன்வருகிறார்கள். காரணம் சமூகப் பார்வையைவிட கொள்ளை லாபம் அடிப்பதே இவர்களின் நோக்கம். 'நோவேட்டிங்' எனும் மருந்து தயாரிப்பு பன்னாட்டு நிறுவனம் ரத்தப் புற்று நோய்க்கான 'கிளிவேக்' எனும் மருந்துக்கு காப்புரிமை கோரி, அதன் விலையை பன்மடங்கு உயர்த்தி கொள்ளையடித்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், மருந்து நிறுவனத்துக்கு ஆதரவாக சென்னை உயர்நீதிமன்றத்தில் அப்போது வாதாடியவர், இப்போது நிதியமைச்சராக இருக்கும் ப. சிதம்பரம் தான். இப்படி பன்னாட்டு நிறுவனங்களின் வழக்கறிஞர்களாக இருப்பவர்கள், நிதியமைச்சரானால், அவர்களின் நிதிக் கொள்கைகள் எப்படி மக்களுக்கு சாதகமாக இருக்க முடியும்?

நாட்டின் செல்வாக்குள்ள அரசியல் கட்சிகள் பலவும் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் தான் செயல்படுகின்றன. அரசியல் கட்சிகளுக்கு தாராளமாக நிதிகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றன. பெட்ரோல் நிறுவனங்கள் உணவுப் பொருள் தயாரிப்பிலும் ஈடுபடுகின்றன. மரபு அணு மாற்றம் என்ற பெயரில் விவசாயத்தில் நடைபெறுகிற ஆராய்ச்சிகள் நமது பாரம்பர்ய விவசாய முறையை ஒழித்து, மக்களுக்கு நோய்களையும், கேடுகளையும் விளைவிக்கும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. தோல் கருத்துப் போகாத வாழைப் பழங்களும், கீழே போட்டால் உடையாத தக்காளியும், மரபணு மாற்றத்தினால் உருவாக்கப்பட்டவை. ஆனால் உடலுக்கு பெரும் கேடுகளை உருவாக்கக் கூடியவை. இப்படி மரபணு மாற்றப்பட்ட பொருள்களை விற்கும் போது, அவை மரபணு மாற்றத்தின் மூலம் உருவாக்கப்பட்டவை என்பதை அறிவிக்க வேண்டும் என்று வெளிநாடுகளில் சட்டம் இருக்கிறது. நமது நாட்டில் அத்தகைய சட்டங்களே கிடையாது. மக்கள் மீது மரபணு மாற்றத்தில் உருவாக்கப்பட்ட பொருள்கள் அவர்கள் விருப்பத்துக்கு மாறாக திணிக்கப்படுகின்றன. 'மான் சாண்டோ' எனும் பன்னாட்டு நிறுவனம் - இப்படி மரபணு மாற்ற பருத்திகளை தயாரிப்பதால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பருத்தி விதைகளை பூச்சிகள் அழிக்காமல் இருக்க, சில உயிரிகளையே விதையுடன் சேர்த்து பி.டி. காட்டன் பருத்தி விதைகளை உருவாக்கினார்கள். இந்த பி.டி. காட்டன் பருத்தி விதைகளை நம்பி, பயிரிடும் விவசாயிகள், ஏமாந்து போனார்கள். பருத்திகளை அழிக்கும் வீரிய மிக்க வேறு வகை பூச்சிகள் உருவாயின. கடும் விலை கொடுத்து பி.டி. காட்டன் பருத்திப் பயிர் செய்த விவசாயிகள், விளைச்சல் பாதிக்கப்பட்டு, கடனை கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். கோவை விவசாயப் பல்கலைக்கழக துணை வேந்தர் மான்சாண்டோ நிறுவன உற்பத்திப் பொருள்கள் உருவாக்கும் ஆபத்துகள் பற்றி, தங்களுக்கு கவலை இல்லை என்றும், உற்பத்தி தான் முக்கியம் என்றும் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் விளக்கம் கேட்ட ஒரு விவசாயிக்கு பதில் கூறியுள்ளார் என்று பல்வேறு தகவல்களை வழக்கறிஞர் சுந்தரராசன் விளக்கி உரையாற்றினார்.

இரவு 7 மணியளவில் மீண்டும் சிற்பி ராசன், தோழர்களிடம் மூடநம்பிக்கைகளை விளக்கி, 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தினார். இரவு 9 மணி வரை நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

### இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் காலை 11 மணியளவில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், உலகம் தோன்றியது எப்படி? உயிர் தோன்றியது எப்படி? என்ற தலைப்புகளில் பேசினார். தனியார் துறையில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தியும், பெருகி வரும் தகவல் தொழில்நுட்பத் துறை தொடர்பான வேலை வாய்ப்புகளில் பார்ப்பனர்கள் ஆதிக்கம் தலை விரித்தாடுவதை புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டியும் பேசினார். உலகமயமாக்கல் கொள்கை மண்டல் குழு பரிந்துரை அமுலானவுடன் மிகத் தீவிரமாக பார்ப்பன அதிகாரவர்க்கம் அமுல்படுத்தத் தொடங்கியது. அரசு வேலை வாய்ப்புகளில் 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கும் ஆணையை செயலிழக்கச் செய்வதற்கு, அரசுத் துறைகள் பொதுத் துறைகளில் தனியார் மயமாக்கம் நுழைக்கப்பட்டது.

தனியார் துறைகளில் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்தி வந்த பார்ப்பனர்கள் புதிதாக தனியார் மயமாகும் நிறுவனங்களையும் ஆக்கிரமித்து கொண்டு பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு ஆணையை காகிதத்தில் மட்டும் இருக்கக்கூடிய ஆணையாக மாற்றிவிட்டனர். மத்திய தேர்வாணையமும், உச்சநீதிமன்றமும் உலகமயக் கொள்கைகளையே மறைமுகமாக அமுல்படுத்தி பார்ப்பன ஆதிக்கத்துக்கு துணை போய்க் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் உயர் அதிகாரத்தில் உள்ள சில பார்ப்பன அதிகாரிகள் அமெரிக்காவுடன், அணுசக்தி ஒப்பந்தத்தை உருவாக்கிட பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒப்பந்த சரத்துகளையும் உருவாக்கி, இந்திய பார்ப்பன மேலாதிக்கத்தை அமெரிக்காவின் கண்காணிப்புக்குள் கொண்டுச் சென்றுவிட்டனர். உண்மையில் சர்வதேச உடன்பாடுகளை உருவாக்கும் உரிமை இந்திய அரசியல் சட்டத்தில் அதிகாரவர்க்கத்துக்கு வழங்கப்படவில்லை. இதை பல முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதிகளே சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனாலும், இந்திய தேசியப் பார்ப்பனிய அமைப்பு இத்தகைய பார்ப்பனர்களின் சட்ட மீறல்களை அனுமதிப்பதாகவே இருக்கிறது.

மன்னர்கள் ஆட்சியில் மக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டு, பார்ப்பனர் நலன் மட்டுமே பேணப்பட்டது. மன்னர் ஆட்சி ஒழிந்து, மக்களாட்சி வந்த பிறகு, மக்களுக்கான கல்வி, மருத்துவம், அடிப்படை வாழ்வுரிமை போன்ற மக்களுக்கான திட்டங்களை ஆட்சிகள் நிறைவேற்றி வந்தன. இப்போது உலக வங்கிகளின் உத்தரவுகளை ஏற்று, இத்தகைய மக்கள் சேவை பொறுப்பிலிருந்து மக்களாட்சி விடுவித்துக் கொண்டு விட்டது. எனவே, மன்னராட்சியில் நடந்தது போல், மக்கள் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, பார்ப்பனர் நலன் மட்டுமே இப்போது மக்களாட்சி என்ற பெயரில் பாதுகாக்கப்படுகிறது. வேலை வாய்ப்புகள் நிரந்தரம் இல்லாமல் அனைத்துமே ஒப்பந்த அடிப்படையில் கொண்டு வரப்படுவதால், எதிர்காலப் பாதுகாப்பு கேள்விக் குறியாகிவிட்டது. சந்தையையும், விற்பனையையும், விளம்பரத்தையும், மூலதனத்தையும், உலக மயமாக்கி வரும் பெரும் தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்களின் ஊதியத்தை மட்டும் உலகமயமாக்கவில்லை. குறைந்த கூலியில் உழைப்பு சுரண்டப்படுகிறது. இவை அனைத்துமே பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவே பயன்படுகிறது என்று குறிப்பிட்டார்.

### கொளத்தூர் மணி

மதிய உணவுக்குப் பிறகு பயிற்சியாளர்களின் விரிவான அறிமுகம் நடந்தது. அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெரியாரியல் பார்வையில் சில முக்கிய கருத்துகளை விளக்கி, தோழர்களிடம் பேசினார். பழந்தமிழ், பழந்தமிழர் பெருமை பேசுவது இன்றைய சமுதாய அறிவியல் வளர்ச்சிக்கு உதவாது என்று பெரியார் அழுத்தமாக வலியுறுத்தி வந்ததை சுட்டிக் காட்டினார்.

சோழ மன்னன் ராஜேந்திர சோழன், அருண் மொழித் தேவன் எனும் தமிழ்ப் பெயரை வடமொழிக்கு மாற்றிக் கொண்டான். தமிழ்ப் பெயரை பார்ப்பன வடமொழிக்கு மாற்றம் செய்வதை முதலில் தொடங்கி வைத்த மன்னன் அவன் தான்.

எந்தத் தமிழ் மன்னர் ஆட்சி காலத்திலும் சரி; மக்களுக்கு கல்வி வழங்கப்படவில்லை. மக்கள் அனைவருக்குமான பொதுக் கல்வியை வழங்கியது பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தான். மெக்காலேதான், அந்தக் கல்வி முறையைக் கொண்டு வந்தார். அதற்கு முன் பார்ப்பனர்களுக்கு மட்டும் சமஸ்கிருத கல்வி வழங்கப்பட்டு வந்தது. 'சதி' என்று கூறப்பட்ட உடன்கட்டை ஏறும் பழக்கத்தை 1829 இல் வில்லியம் பெண்டிங் ஒழித்ததைத் தொடர்ந்து 1836 இல் மெக்காலே அனைவருக்குமான அறிவியல் கல்வியை அறிமுகப்படுத்தினார். அறிவியலை சமஸ்கிருதத்திலே தேடுவதை எதிர்த்தார் மெக்காலே.

பெரியார் கருத்துகளை பெரியார் எழுத்திலும், பேச்சிலும் தேடிப் படிக்க வேண்டும். மூலத்தைத் தேடிப் படிக்கும்போது தான் சரியான புரிதலைப் பெற முடியும். பிரம்ம சூத்திரத்துக்கு ஆதிசங்கரர். ராமானுஜர், மத்வர் ஆகியோர் உரை எழுதக் கிளம்பினார்கள். மூன்று பேர் எழுதிய உரைகளும் தனித்தனி மதங்களாகவே மாறிவிட்டன. எனவே உரைகளைத் தவிர்த்து, மூலத்தையே படிப்பதுதான் நல்லது.

பெரியார் நடுநிலைப் பார்வையில் சமத்துவத்தைப் பேசவில்லை. பாதிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்று, அவர்களுக்கான உரிமைகளை மீட்க வேண்டும் என்று போராடியவர். நீதிக் கட்சியின் கொடியில் 'தராசு' சின்னம் நடுநிலையை குறிப்பதாக இடம் பெற்றிருந்தது. அந்தத் 'தராசு' சின்னத்தையே பெரியார் எதிர்த்துள்ளார். சமத்துவ மற்ற சமுதாயத்தில் நடுநிலை சமத்துவம் பேசுவது பயன் தராது. சமத்துவம் மறுக்கப்பட்டவர்களின் உரிமை முன்னிறுத்தப்பட வேண்டும் என்பதே பெரியாரின் பார்வையாக இருந்தது.

புரோகிதத் திருமணங்களை மறுத்து, பெரியார் சுயமரியாதைத் திருமணத்தை அறிமுகப்படுத்தினார். ஆனால், இப்போது சுயமரியாதை திருமணத்துக்கு பதிலாக, தமிழ் உணர்வாளர்கள் தமிழ்த் திருமண முறையை முன் வைக்கிறார்கள். உண்மையில் 1939 இல் பெரியாரின் சுயமரியாதை திருமண முறைக்கு எதிர்ப்பாகத்தான் சைவத் தமிழர்கள் சிலர் தமிழ்த் திருமண முறையை அறிமுகப்படுத்தினார்கள். வைதீகத் திருமணத்தைவிட மோசமான அறிவுக்குப் பொருந்தாத சடங்குகள் தமிழ்த் திருமணத்தில் இடம் பெற்றுள்ளன. எனக்குத் தெரிந்த ஒரு பெரியாரியலாளர் தமிழ்த் தேசிய அமைப்பில் இடம்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பெரியாரை எதிர்த்தவர்கள் திசை மாறிய கதை

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பெற்றிருந்தார். அவரது திருமணத்துக்கு நான் சென்ற போது, அவர் சட்டை இல்லாமல், வேட்டியுடன் மணமகன் கோலத்தில் இருந்தார். அது தமிழ்த் திருமணம். என்னை பார்ப்பதற்கே அவர் கூச்சப்பட்டார். சுயமரியாதைத் திருமணத்துக்கு எதிராக எதிர்ப் புரட்சியாளர் அறிமுகப்படுத்தியதுதான் தமிழ்த் திருமணம் என்பதை நமது தோழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரியாருக்கு எதிர்ப்பு என்ற பெயரில் செயல்பட்ட பலரும், பாதை தவறி கொள்கைக்கு எதிராக செயல் படத் தொடங்கி விடுகிறார்கள். தோழர் ஜீவானந்தம் பெரியாரை விட்டுப் பிரிந்த வுடன், பெரியார் ராமாயண எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார் என்பதற்காக, அவர் ராமாயண ஆதரவுப் பிரச்சாரம் செய் தார். கம்பன் கவிதையில் பொது வுடைமையை தேடினார். இடஒதுக் கீட்டுக்கு எதிராக ஜீவா பிரச்சாரம் செய்தார். தா. பாண்டியன் ஜீவாவிடம் இடஒதுக்கீட்டை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு நான் ஒரு பொது வுடைமைக்காரன் என்பதால் எதிர்க் கிறேன் என்று ஜீவா பதில் கூறியதாக தோழர் தா. பாண்டியன் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

பெரியார் தற்காப்புக்காக கத்தி வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிய போதுதான், பெரியாரிடமிருந்து பிரிந்து சென்ற அண்ணா, ‘கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு’ என்றார். நம்முடைய தோழர்கள் சிலர் முருகன், தமிழ்க் கடவுள் என்று பேசி வரு கிறார்கள். முருகனை தமிழர்கள் வழி படலாம் என்கிறார்கள். முருகனை தனியாக மீட்டெடுக்க வேண்டும் என் கிறார்கள். முருகனை மட்டும் எப்படி தனியாக மீட்க முடியும்? முருகனை மீட்கும் போது, முருகனோடு தெய்வானை வருவாள். சுப்ரமணியன் வருவான், விநாயகன் வருவான். இவர்கள் எல்லாம் முருகனோடு இணைக்கப் பட்டுள்ள நிலையில் முருகனை மட்டும் தனியே எப்படிப் பிரித்து எடுக்க முடியும்? தமிழில் பெயர் சூட்டுவதிலும் பிரச்சினை இருக்கிறது. வடமொழிப் பெயருக்கு பதிலாக தமிழ்ப் பெயர் சூட்டுவதை நாம் ஆதரிக்கிறோம் என்றாலும், பார்ப்பன எதிர்ப்பை பண்பாட்டுப் புரட்சியை சுட்டி நிற்கும் பெயர்களை அவை தமிழில் இல்லை என்பதற்காக ஒதுக்கிவிட முடியாது. பிரபாகரன் என்ற பெயர் தமிழ்ப் பெயர் இல்லை தான். ஆனால் அந்தப் பெயர் இனத்தின் விடுதலையை, வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை சுட்டி நிற்கிறது. இராவணன் - வடமொழி பெயர் தான். நல்ல தமிழ்ப் பெயர் தரும் உணர்வை விட இராவணன் என்ற பெயர் பார்ப்பன எதிர்ப்பை உணர்த்தி நிற்கிறது. பெரியார் பேசிய இனவுரிமை - இனவாதம் அல்ல. நான் ஹிட்லரைப் போல் இனவாதம் பேசுகிறவன் அல்ல என்று பெரியாரே கூறியிருக்கிறார். எனவே தமிழ் மொழிப் பற்று என்பது இனவாதமாக மாறிப் போய்விடக் கூடாது. அண்ணா தமிழன் என்பவன் யார் என்பதற்கு மிக அழகாக விளக்கம் தந்துள்ளார். மொழியால் மட்டும் தமிழனாக இருப்பவன் தமிழன் அல்ல. மொழியால், வழியால், விழியால், தமிழனாக இருக்க வேண்டும் என்கிறார். தமிழைப் பேசுவது மட்டும் தமிழனின் அடையாளமாக இருக்க முடியாது. வாழும் வழியாகிய பண்பாடும், தமிழனின் விழிப் பார்வை போன்ற கண்ணோட்டமும் தமிழனாக இருக்க வேண்டும் என்கிறார். அதுபோல் பெரியார் பேசிய நாத்திகம், பார்ப்பன எதிர்ப்பு நாத்திகம், பார்ப்பன எதிர்ப்பை யும், சாதி எதிர்ப்பையும் உள்ளடக்கிய நாத்திகம் என்பது போன்ற செய்திகளை விரிவாக விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து - கழகப் பொதுச்செய லாளர் விடுதலை இராசேந்திரன் முகாமை நிறைவு செய்து உரையாற்றி னார். பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடு - பண்புத் தளம் - அணுகுமுறைகளை விளக்கியதோடு, பெரியாரியலில் பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதி மத எதிர்ப்பு, பெண்ணுரிமை, பகுத்தறிவு போன்ற பெரியாரியல் கோட்பாடுகளோடு உலக மயமாக்கம், சுற்றுச்சூழல் பிரச்சினை களில் அடங்கியுள்ள பார்ப்பனிய உள்ளடக்கங்களையும், மனித உரிமைப் பிரச்சனைகளையும் பெரியாரியலில் இணைக்க வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கினார். கடற்கரைக்கு அருகே இயற்கைச் சூழலில் மிகச் சிறப்பாக பயிற்சி முகாமை நாகை மாவட்டத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இரு நாட்களும் காலை மதியம் இரவு உணவு மிகச் சிறப்பான முறையில் வழங்கப்பட்டது. நட்புரிமை யுடன் குழுவாக இணைந்து நின்று சரியான புரிதலில் நாகை மாவட்டக் கழகத் தோழர்கள் ஆற்றிடும் களப் பணியை தோழமை அமைப்பினர் பலரும் பாராட்டினர். இரவு 8 மணியள வில் முகாமை முடித்து, தோழர்கள் பிரியா விடை பெற்றனர். பல்வேறு கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் இந்த முகாம் தங்களுக்கு பயன்பட்டதாக பயிற்சி யாளர்கள் தெரிவித்தனர். பெரியாரை நோக்கி வரும் புதிய இளைஞர்கள் இந்தப் பயிற்சியில் பெருமளவில் பங் கேற்றது குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் இறுதியில் நாகை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களாக - கீழ்க்கண்ட தோழர்களை கழகத் தலைவர் அறி வித்தார்.

### கழகப் பணியாளர்கள்

நாகை மாவட்டம் - தலைவர் இரா. பரசுராமன்; செயலாளர் தெ. மகேசு, அமைப்பாளர் நா. இளையராசா. மாவட்டத் துணைத் தலைவர்கள் - இரசீத்கான், இராசராசன்.

மயிலாடுதுறை நகரப் பொறுப் பாளர்கள் - நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர், துணைத் தலைவர் ராஜராஜன், துணைச் செயலாளர் மு. அன்பு, துணைச் செயலாளர் முகிலன். ✦

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857

# தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பு: தோழர்கள் சுற்றுப் பயணம்

சென்னையில் கூடிய பெரியார் திராவிடர் கழக செயற்குழு (ஜூன் 15, 2008) எடுத்த முடிவின்படி தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் மாணவர் கழக அமைப்பாளர்கள் மாவட்டம் தோறும் கல்லூரி மாணவர்களை சந்திக்கிறார்கள். அவர்களது சுற்றுப்பயண விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது. கழக மாவட்ட பொறுப்பாளர்கள் மாணவர் கழக பொறுப்பாளர்களின் சுற்றுப்பயணத்துக்கு உதவுவதோடு அவர்கள் தங்குமிடம், உணவுக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வொரு மாவட்டமும் பயணத்தில் வரும் குழுவினருக்கு வழிச் செலவுக்காக ரூ.500 வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

**சுற்றுப்பயண விவரம்:**

| மாவட்டம் | ஊர் | நாள் |
|---|---|---|
| சேலம் | மேட்டூர் | 22.7.08 |
| ஈரோடு | கோபி (தங்கல்) | |
| கோவை வடக்கு | திருப்பூர் | 23.7.08 |
| கோவை மாநகரம் | காந்திபுரம் (தங்கல்) | |
| கோவை தெற்கு | பொள்ளாச்சி | 24.7.08 |
| திண்டுக்கல் | பழனி (தங்கல்) | |
| மதுரை | மதுரை | 25.7.08 |
| திருச்சி | திருச்சி (தங்கல்) | |
| பெரம்பலூர் | பெரம்பலூர் | 26.7.08 |
| நாமக்கல் | நாமக்கல் (தங்கல்) | |
| சேலம் மாநகரம் | சேலம் | 27.7.08 |

பங்கேற்கும் தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர்கள்: கோவை ந. பன்னீர்செல்வம், மயிலாடுதுறை இளையராஜா, திருப்பூர் கார்த்தி. கலை இலக்கிய அமைப்பு : திருப்பூர் இராவணன்.

**– தலைமைக் கழகம்**

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

கலை இராசேந்திரன், இராம கிருட்டிணன், கண்ணன், செயலாப், ஆனைமலை, அரிதாசு, ருக்மணி, மணிமொழி, கா.க.புதூர் ஆதி, சம்பத், சின்னு உள்ளிட்ட கழகத் தோழர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் என சுமார் 150 பேர் பங்கேற்றனர்.



மறுநாள் 7.7.2008 திங்கள் மாலையில் ஆல்வா செவிலியர் கல்லூரி அரங்கில் ‘அறிவியல் கற்போம் - ஏமாற்றங்களை தவிர்ப்போம்’ என்கிற தலைப்பில் சிற்பி இராசனின் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 200-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ-மாணவிகள் பங்கேற்ற இந்நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்தது.


சாய்பாபாவின் தந்திரங்கள், சாமியார்களின் மோசடி ஆகியவற்றை தோலுரித்தும், கடவுள், சாதி, மதம் உள்ளிட்ட சமூகக் கேடுகளை சவுக்கால் அடித்தும் சிற்பி. இராசன் அறிவியல் பூர்வமான செயல்முறை விளக்க நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்.

மாணவர்களும், புதிய இளைஞர்களும் மிகுந்த ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் நிகழ்ச்சியை கவனித்தனர். ஆனைமலை, திப்பம் பட்டி, அழகப்பா குடியிருப்பு, ஊத்துக் குளி உள்ளிட்ட பொள்ளாச்சி சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து சிற்பி இராசன் நிகழ்ச்சிக்கு தேதி கேட்டு புதிய இளைஞர்கள் தொடர்ந்து வருகிறார்கள். இப்பகுதியில் இயக்கத்திற்கு புதிய பொழிவையும், வலிமையும் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சி உருவாக்கியுள்ளது. **செய்தி: கா.சு.நாகராசன்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 17th July 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சி பெரியார் முழக்கம்

**பெரியார் திராவிடர் கழக வார ஏடு**

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஜூலை 24, 2008 புரட்சி 7 முழக்கம் 30 விலை : ரூ.2.50


## தேசிய வியாபாரம்!

*சாதாரணமாக மற்ற பல நாடுகளில் பொதுநல சேவை என்பதில் ஈடுபடுகின்றவர்கள் பலர் கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் கவலைக்கும் உள்ளாகி, அனேகவித தொல்லைகளை அனுபவிக்கின்றார்கள். ஆனால், இந்த நாட்டிலோ சிறிதும் கஷ்டமும், நஷ்டமும், தொல்லையும், கவலையும் இல்லாமல் நேருக்கு நேராகவே, உடனுக்குடனே பதவி, உத்தியோகம், பணம், கீர்த்தி, அதிகாரம் முதலியவைகள் மாற்றுப் பண்டமாக அடையப்பட்டு வருகின்றன. இவற்றிக்குக் காரணம், பொது மக்களை மூட நம்பிக்கைக்கு ஆளாக்கி, வைத்திருப்பதால், அந்த மூட நம்பிக்கையானது அந்த மக்களைத் தேசிய வியாபாரிகளிடமும் சிக்கி, ஏமாந்து கஷ்டப்படும்படி செய்து வருகின்றது.*

*இந்த நிலைமையானது நாளுக்கு நாள் பெருகி, அனேகர் இவ் வியாபாரத்தில் பங்கெடுக்க நேர்ந்ததன் பின், 'லிமிடெட் கம்பெனி'யாக இருந்தது, 'அன்–லிமிடெட் கம்பெனி'யாகி – அதாவது ஒரு வகுப்பாருக்கு மாத்திரம் என்று இருந்தது எல்லா வகுப்பாருக்கும் பங்கு எடுத்துக் கொள்ள சவுகரியம் ஏற்பட்டு – பிறகு, அதற்கு அனேக (பிராஞ்சு) கிளை இயக்கங்களும் உண்டாகி, இப்போது வரவரப் பெருகி, ஏறக்குறைய சிறிது கல்வியும் தந்திரமும் உள்ள எல்லா மக்களுமே* **தேசிய வியாபாரத்தில்** *கலந்து, அளவுக்கு மீறிய – அதாவது தங்களது யோக்கியதைக்கும், தகுதிக்கும் எத்தனையோ பங்கு மீறியதான இலாபத்தை, பயனை அடையும்படியாகச் செய்து விட்டது.*

– **பெரியார் – 'குடிஅரசு'** 1.3.1931

*சாதாரணமாக யோசித்துப் பார்த்தோமானால், இந்தியாவில் தேசியம் என்கின்ற பதமே தப்பான வழியில், மக்களை ஏமாற்றிப் பிழைக்க ஒரு கூட்டத்தார் –அதாவது மேல் சாதியார் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் கற்பனை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தாசர்களாக இருந்தால் தான் பிழைக்க முடியும் என்று கருதிய சில பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்பவர்களால் ஆதரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தார் சூழ்ச்சியாலும் பாமர மக்களை ஏமாற்றிச் சிலர் பிழைக்க உபயோகிக்கப்பட்டு வரும் ஒரு பாதகமும் அபாய கரமுமான அர்த்தமற்ற ஒரு வார்த்தையாகும்.*

– **பெரியார் – 'குடிஅரசு'** 19.5.1929

# இந்தியா விற்பனைக்கு தயார்!

*இந்தியா விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானத்தில் ஆளும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று விட்டது. ஆனாலும் நடந்த சம்பவங்கள் தலைகுனிய வைத்துள்ளது.*

*நாடாளுமன்ற உறுப்பினர்கள் - சந்தை நிலவரம் கிடுகிடுவென ஏறிக் கொண்டே போய் விலை பேசப் பட்டார்கள். நாட்டை விலை பேசிக் கொண்டிரு க்கும் தொழிற் குடும்பங்களில் ஒன்றான அம்பானி குடும்பம் - இந்தியாவின் நாடாளுமன்றத்தின் ஆயுளைத் தீர்மானிக்க களம் இறங்கியிருப்பதை பத்திரிகைகள் எல்லாம் பகிரங்கமாகவே எழுதி வருகின்றன. ரிலையன்ஸ் நிறுவன அதிபர் திருபாய் அம்பானி மறைவுக்குப் பிறகு அவரது பிள்ளைகள் அண்ணன் முகேஷ் அம்பானியும், தம்பி அனில் அம்பானியும் வியாபாரப் போட்டியில் இரு துருவங்களாக மாறி ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு வருகிறார்கள்.*

*அரசுக்கு ஆதரவாக உறுப்பினர்களைவிலைக்கு வாங்கும் பொறுப்பில் களமிறங்கினார் தம்பி அனில் அம்பானி. ஆட்சியைக் கவிழ்க்க எம்.பி.க்களுக்கு விலை பேசினார் அண்ணன் முகேஷ் அம்பானி. காங்கிரஸ் கட்சியைக் கடுமையாக இதுவரை எதிர்த்து வந்த முலாயம் சிங்கின் சமாஜ்வாதி கட்சி, அனில் அம்பானியின் சட்டைப் பைக்குள் அடக்கம். இப்போது அணில் அம்பானி முயற்சியால் சமாஜ்வாதி கட்சி காங்கிரசை ஆதரிக்கிறது. டெல்லி வந்திறங்கிய அனில் அம்பானி, பிரதமர் மன்மோகன் சிங்கை நேரடியாக சந்தித்து விட்டு களம் இறங்கிவிட்டார். ஆனாலும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பெட்ரோலியத் துறை அமைச்சராக இருக்கும் பார்ப்பனர் முரளி தியோரா - முகேஷ் அம்பானியின் 'கையாள்'. அணில் அம்பானி, காங்கிரஸ் தலைமையிடம் இதை சுட்டிக்காட்டியவுடன், ஓட்டெடுப் புக்கு நான்கு நாட்களுக்கு முன்பு, ஒரு சமரசம் நடந்தது. பெட்ரோலியத் துறையின் செயலாளராக இருந்த பார்ப்பன அதிகாரி, அவசரமாக விடுவிக்கப்பட்டு, அதற்கு பதிலாக, வேறு ஒரு பார்ப்பனர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார். தியோராவை மாற்ற வேண்டும் என்ற அனில் அம்பானியின் கோரிக்கையை உடனடியாக அமுல்படுத்த முடியாது என்பதால், அடையாள பூர்வமாக அவரது துறையின் செயலாளரை மாற்றி, அனில் அம்பானியை குளிரச் செய்திருக்கிறது காங்கிரஸ் தலைமை.*

*சர்வதேசப் பிரச்சினை ஒன்றை முன் வைத்து இந்தியாவின் நாடாளுமன்றம் நம்பிக்கை வாக்கெடுப்பை இப்போது கோருகிறது. ஆட்சியே கவிழ்ந்தாலும், அமெரிக்காவின் அணுசக்தி ஒப்பந்தத்தை விடமாட்டோம் என்று, காங்கிரஸ் கட்சி தோள் தட்டி தொடை தட்டி நிற்கிறது. இந்தியாவின் எதிர்கால வளர்ச்சிக்கு அணுசக்தி தேவை; அதுவும் அணுசக்தி மின்சாரம் தேவை என்று, நாட்டின் எதிர்காலம் பற்றி மிகவும் கவலைப்பட்டு, கசிந்துருகி நிற்கிறது ஆளும் காங்கிரஸ் கூட்டணி. அதே நேரத்தில் ஆட்சிக்கு ஆதரவு தருவதை திரும்பப் பெற்ற இடதுசாரி கட்சிகள், அடுத்த கட்டத்துக்கும் போய் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சிகளில் அதீத ஆர்வம் காட்டியது. அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியை - அதாவது, இந்துத்துவா சக்திகளை வீழ்த்துவதற்காக உருவாக்கப்பட்ட கூட்டணி ஆட்சியைக் கவிழ்க்க, இடதுசாரி கட்சிகள், 'இந்துத்துவா' சக்திகளோடு சேர்ந்து ஓட்டளிக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை!*

*அப்படியே அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி கவிழ்க்கப்பட்டு, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சிக்கு வந்தால், அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம் ரத்தாகி விடுமா என்றால், இல்லை என்பதுதான் பதில். தாங்கள் ஆட்சிக்கு வந்தால், அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தி, அணுசக்தி ஒப்பந்தத்தைப் போடுவோம் என்று நம்பிக்கைகோரும் தீர்மானத்தில் பேசும் போதே அத்வானி அறிவித்து விட்டார். நெருக்கடியில் சிக்கிக்கொண்ட அகில இந்திய கட்சிகளான இடதுசாரிகள் - உ.பி. முதல்வர் மாயாவதி தலைமையில், மூன்றாவது அணியை ஆட்சியில் அமர்த்துவோம் என்றார்கள்.*

*மாயாவதி உ.பி.யில் நடத்தும் தலித்திய அரசியலில் பார்ப்பனர்கள் தான் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை. பார்ப்பனர்கள் பலரை சட்டமன்ற உறுப்பினர்களாக்கி, அமைச்சர்களாக்கி, உயர் அதிகாரப் பதவிகளில் பார்ப்பனர்களை அமர வைத்து, தலித்தியத்தை பார்ப்பனியத்தை நோக்கி மடை திருப்பிவிட்டவர் மாயாவதி. அவரை அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக அடையாளம் காண்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் அமெரிக்க ஆதரவு - அமெரிக்க எதிர்ப்பு என்ற கொள்கைப் பார்வையிலோ அல்லது அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் தேவையா? இல்லையா? என்ற கருத்துத் தளத்திலோ, இப்போது, நாடாளுமன்றத்தில் கட்சிகள் அணி பிரிந்து நிற்கவில்லை! சந்தர்ப்பவாத அரசியல் சதுரங்கத்தில் தான் காய்கள் நகர்த்தப்பட்டு வருகின்றன.*

*இடதுசாரிகளின் தீவிர நிலைப்பாட்டில் அக்கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற தலைவர் சோமநாத் சட்டர்ஜியும், மூத்த தலைவர் ஜோதிபாசுவுமே வேறுபட்டநிலை எடுத்து விட்டனர். பா.ஜ.கவும், இடதுசாரிகளும் இணைந்து ஆட்சியைக் கவிழ்க்கும் முடிவை பார்ப்பன மதவெறி சக்திகளின் மக்கள் விரோத கொடூரத்தைப் புரிந்து கொள்ளும் எவராலும் எப்படி சீரணிக்க முடியும்?*

*அமெரிக்கவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் நாட்டின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் ஆபத்து என்பதும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை, அமெரிக்காவின் பிடிக்குப் போய் விட்டது என்றும் கூறப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கிறது. மறுக்க முடியாது. ஆனால் அதே ஆபத்தான கொள்கையைத்தான் தாங்களும் அமுல்படுத்துவோம் என்று கூறும் பார்ப்பன பா.ஜ.க.வுடன் சேர்ந்து கொண்டு, ஆட்சியைக் கவிழ்க்கும் போது ஏற்படப் போகும் விளைவுகளில் ஒரே ஒரு வித்தியாசம் தான் இருக்கும்.*

*காங்கிரசு பெயரளவுக்காவது மதச்சார்பின்மை பேசி அமெரிக்காவின் பக்கம் நிற்கிறது. பார்ப்பன - இந்துத்துவா - பா.ஜ.க.வோ, அமெரிக்காவின் பக்கம் நின்று கொண்டு, பார்ப்பன மேலாண்மையையும், மதவெறியையும் தூக்கிப் பிடித்து நிற்கிறது.*

*மாயாவதியே இந்துத்துவப் பார்ப்பனியம் என்பதற்கு பதிலாக, தலித்தியப் பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடித்து அமெரிக் காவின் வாசலில் போய் நிற்கும் சக்தியாகவே இருக்கும்.*

*இந்த நிலையில் தனித்து விடப்பட்டவர்களாக நிற்கப் போகிறவர்கள், உண்மையான மதச்சார்பின்மைவாதிகளும், சமூக நீதி சக்திகளும், இடது சாரிகளும் தான்!*

*இதில் கேவலமாக முகம் கிழிந்து தொங்குவது, இந்திய ஒருமைப்பாடு தான். 'இந்திய தேசியம்' என்பதாக இங்கே ஒன்றும் இல்லை என்ற உண்மையை இந்திய ஒருமைப்பாடு பற்றிப் பேசும் கட்சிகள் சிந்திக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.*

*"நான் இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டேன். ஆனால், ஒரு இந்தியனைக்கூட பார்க்கவில்லை. நீங்கள் யாராவது ஒரு இந்தியரை பார்த்தது உண்டா?" - என்று இந்தியா முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு, தாம் எழுதிய 'இந்தியாவுக்கான தீர்ப்பு' என்ற நூலில் பெசாலி நிக்கலஸ் என்ற ஆய்வாளர் குறிப்பிட்டிருந்தார். 1942 இல் வெளிவந்த நூல் இது. 2008 இல் நிலைமை இதைவிட மோசம் தான்! இந்தியாவின் நாடாளுமன்றத்தை தேசியக் கட்சிகளே ஆட்சி செய்யும் அத்தியாயம் முடிவுக்கு வந்து விட்டது. மாநிலக் கட்சிகள் தான் நாடாளுமன்றத்தையே நிர்ணயிக்கின்றன. அதனால் தான்*

4 ஆம் பக்கம்

# எங்கள் இன மக்களிடம் நாங்கள் பகுத்தறிவு பரப்புவதை தடுக்க, நீயாரடா? பார்ப்பான் காவடி தூக்குவானா?

## பார்ப்பன ராஜாவுக்கு இயக்குனர் சீமான் சவால்!

*சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 20.7.2008 மாலை 7 மணியளவில் சென்னை எம்.ஜி.ஆர். நகர் மார்கெட்டில் கழக சார்பில் காமராசர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் வழக்கறிஞர் அமர்நாத் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழகத் தோழர்கள் எ.கேசவன், சா.குமரன், அன்பு தனசேகர், பெரம்பலூர் லட்சுமணன், வழக்கறிஞர் சு. குமார தேவன், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் இயக்குநர் சீமான், ஒன்றரை மணி நேரம் எழுச்சியுரை யாற்றினார். அதே பகுதியில் பெரியாரை இழிவாகப் பேசிய பா.ஜ.க.வைச் சார்ந்த எச்.ராஜா எனும் பார்ப்பானுக்கு பதிலடி தந்தார்.*

*"நீ எழுதி வைத்த புராணங்களிலுள்ள கதைகளை நாங்கள் கூறினால், ஆபாசம் என்றால், உன் கடவுளும் ஆபாசம் தானே! ராமன், விநாயகன் பிறப்புக்கு இதே கதையைத் தானே நீயும் சொல்வாய்? ஒரே மேடையில் விவாதிக்க தயார்; நீ தயாரா?" என்று சவால் விட்டுக் கேட்டார் சீமான்.*

*எங்களுடைய இனமக்களை மூடநம்பிக்கையிலிருந்து திருத்துவது எங்கள் கடமை. அதைத் தடுத்து நிறுத்த நீ யாரடா? என்றும் சீமான் கேட்டார்.*

*திரண்டிருந்த மாபெரும் மக்கள் கூட்டத்தை உணர்வுகளால் கட்டிப் போட்டது சீமான் உரை. அவரது உரையிலிருந்து...*

எங்கள் மீது வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டு கிருத்துவ மதத்தை, இசுலாம் மதத்தைப் பற்றியெல்லாம் பேசாமல் இந்து மதத்தைப் பற்றியே தாக்கி பேசுகிறார்களே என்பது. இங்கே இருக்கிற கிருத்துவன், முசுலீம்களின் பாட்டனார் யார்? நேரடி வாரிகள் யார்? எப்படி இத்தனை பேர் கிருத்துவனானான், இசுலாமியனானான். பார்ப்பனர்களுடைய சாதிக் கொடுமை தாங்க முடியாம தான் இந்த மதங்களை நாடிச் சென்றான். இல்லை என்று மறுக்க முடியுமா?

இசுலாமியனின் வேத நூல் குர்ஆன் ஒவ்வொரு இசுலாமியனும் கட்டாயம் படிக்க வேண்டும்; படிக்கிறான். கிருத்துவ மதத்தின் வேத நூல் பைபிள். ஒவ்வொரு கிருத்துவனும் கட்டாயம் படிக்க வேண்டும். படிக்கிறான். இந்து மதத்தின் வேத நூல் எது? 'பகவத் கீதை'. யார் படித்தது? பார்ப்பனரை தவிர பகவத்கீதையை படித்த ஒரு இந்துவை சொல்ல முடியுமா?

குர் ஆனை படிக்க வேண்டும் என்று இசுலாத்தில் சட்டம் இருக்கின்றது. பைபிளை படிக்க வேண்டும் என்று கிருஸ்துவத்தில் சட்டம் இருக்கின்றது. ஆனால் பகவத் கீதையை படிக்கவே கூடாது என்று பார்ப்பானின் சட்டம் இருக்கின்றது. இப்பேர்ப்பட்ட மதத்தின் பின்னால் நாங்கள் வர வேண்டுமா? என்ன மதம் இது.

இந்த நாட்டில் எல்லா சாதிக்கும் கட்சி இருக்கிறதே! அதேபோல பார்ப்பனர்களும் ஒரு சாதி கட்சி தொடங்கட்டுமே. மதம் இல்லாம ஒரு சாதிக் கட்சியாக வாயேன். ஒரு இடத்திலும் உனக்கு வாக்கு விழாது. ஏனா, நீ ஆயிரத்திற்கு இரண்டு பேரு. அதனால தான் மதத்துக்குள்ளே போயி நீ ஒளிஞ்சுகிட்டு, இந்துக்கு ஆபத்து என்கிறாய்! இந்து என்கிறாயே நீயும் இந்து நானும் இந்து, அப்புறம் ஏன் சாதி? அப்புறம் என்ன பிரிவு? என்ன பிரச்சினை இங்கே? உன் கட்சிக்கு இராமன் தலைவரு. புள்ளையாரு பொதுச் செயலாளர். (சிரிப்பு)

நாங்கள் என்ன கடவுள் இல்லைனா இந்து மதக் கடவுள், கிருஸ்தவ மதக் கடவுள் இருக்குன்னா சொல்றோம்? கடவுள் இல்லைனா மொத்தமாக கடவுள் இல்லை தான். மதம் இல்லைனா எந்த மதமும் எங்களுக்கு இல்லை. சாதி தாண்டி, மதம் தாண்டி கடவுளை மறந்து மனிதர்களை நேசிக்கிற மகத்தான கூட்டம் தான் எங்கள் கூட்டம். எங்களை விட நல்லவர்களை உலகத்திலே எங்கேயும் கண்டுப்பிடிக்க முடியாது. (கைதட்டல்)

மதம் என்பது என்ன? அது ஒரு 'அபின்'. மாமேதை மார்க்சு சொல்றார், கள்ளுக்கக்கூட குடித்தால் தான் போதை வரும். மதம் என்று சொன்னாலே போதை வரும் என்றார், எங்கள் அய்யா பெரியார். யானைக்கும், மனிதனுக்கும் மதம் பிடித்தால் அழிவைத் தவிர வேறொன்றும் மிஞ்சாது. நீங்கள் இந்த மதங்களில் எங்களை திணிக்க பார்க்கிறீர்கள். இந்த மக்களை இந்த மதங்களிலிருந்து மீட்க நாங்கள் போராடுகிறோம். இதுதான் வித்தியாசம்.

இந்துக் கடவுளையே குறை சொல்றான் என்கிறாயே. ராஜாவே உன்னைக் கேட்கிறோம். என்னை கீழ்சாதி, வேசி மகன் என்று சொன்னது இந்துக் கடவுள் தானே. அதை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும். இந்து மதக் கடவுள் பிறப்பைப் பற்றி நீ எழுதின புராணத்திலிருந்து தான் சொல்கிறேன். நீயும் அதைத் தானே சொல்லப் போகிறாய். எந்தப் பார்ப்பானா இருந்தாலும் சரி; சவால் விடுகிறேன். ஒருத்தன் இந்த மேடையிலே ஏறி பேசுடா! இராமன் பிறந்ததை நாங்கள் சொல்றது தவிர, நீ சொல்வது தான் சரி என்று, உன்னால் பேச முடியுமா? ராமன், பிள்ளையாரு எப்படி பிறந்தார்னு, நீ பேசுவதைத் தானே நாங்களும் பேசுகிறோம்; நீயும் அதைத் தானே பேசுவ. நாங்களா பிறப்புக் கதையை எழுதி வைச்சுகிட்டு பேசுகிறோம்? உன் புராணத்துல இருக்குதா? இல்லையா? நீ மூடி மறைக்கிறாய். நான் என் மக்களிடம் வெளிப்படையாக சொல்றேன்.

இதுல இராஜாவுக்கு என்னடா வந்தது? நாங்க தீ மிதிச்சா எங்க ஆளுங்க கரகம் எடுத்து ஆடினா உங்களுக்கு ஏன் கோபம் வருதுன்னு கேட்கிறான். ஒன்னுமில்ல ராஜா அவர்களே, உங்களைத்தான் கேட்கிறோம். அதே கரகத்தை நீங்க எடுத்து ஆடுங்க. உங்க அக்கா தங்கச்சி அம்மா, உங்க உறவுக்காரங்க தீ மிதிங்க. அப்ப நாங்க எதிர்த்து கேட்டால் செருப்பைக் கழட்டி அடிங்க. இந்த தேசத்திலே ஒரு பாப்பாத்தி தீச்சட்டி எடுத்து தெருவுல ஆடி இருக்காளாடா? ஒரு பார்ப்பான் தீ மிதிச்சிருக் கானாடா? காவடி எடுத்து ஆடி இருக்கானாடா? நேர்த்திக் கடனுக்காவது மயிரை வளர்த்து சிரைச் சிருக்கியாடா? இதையெல்லாம் செய்வது என் அம்மாவும், தங்கச்சிகளும் என்கின்ற அவமானத் தினால் தானே நாங்கள் தெருவுல வந்து கத்தறோம். ராஜா, நீ வாப்பா; நீ வந்து தீமிதி; நெருப்புல இறங்கு; என் அருமை மக்களே இத்தனை ஆயிரம் ஆண்டுகளில் ஒரு பார்ப்பான் தீ மிதிச்சிருக்கானா? காவடி தூக்கி ஆடியிருக்கிறானா? அலகு குத்தியிருக்கானா? வேலு குத்தி ஆடியிருக்கானா? பறவைக் காவடியில் தொங்கியிருக்கானா? என்ன செஞ்சிருக்கான். எல்லாத்தையும் கொண்டுபோய் உள்ளே கொடுத்தா சின்ன மணியை அடிச்சிட்டு சுலோகம் சொல்லிவிட்டுப் போயிடுவான்.

அப்புறம் சொல்லுவான், செய்யும் தொழிலே தெய்வம் என்று. ஏன்? நீ செரைக்கற வேலையை செஞ்சிகிட்டே இரு. துணி வெளுக்கிற வேலையை செஞ்சிகிட்டே இரு. நீ பிணம் எரிக்கிற வேலையை செஞ்சிக்கிட்டே இரு. நீ தெரு கூட்டும் வேலையை செஞ்சிக்கிட்டே இரு. அப்போது தான் பார்ப்பான் சொகுசா இருக்கலாம். இப்படி எழுதின வேசி மகனை தாண்டா தேடிக்கிட்டு இருக்கேன் நான்! செய்யும் தொழிலே தெய்வம்னா நீ கொஞ்ச நாள் மலம் அள்ளு, நாங்கள் கொஞ்சம் நாள் மணி அடிக்கிறோம் வா! கொஞ்ச நாள் பொணம் எரியுங்க; நாங்கள் பூஜை பண்றோம் என்று சொன்னா வலிக்குதுள்ளே உனக்கு. இது எவ்வளவு பெரிய மோசடி.

அறிவுலக ஆசான் பெரியார் என்றால் உனக்கேன் வலிக்குது? அத்வானியை சொல்லவா, ராஜா உன்னை சொல்லவா? எந்த ஒன்றையும் சந்தேகி என்றான் சாக்ரடீஸ். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்றார் திருவள்ளுவர். எதையும், ஏன்? எதற்கு? என்று கேள் என்றார் பெரியார். அந்த சந்தேகத்தில் தானே அறிவு பிறக்கிறது.

சிவபெருமான் கையில் ஒரு சூலாயுதத்தைக் கொடுத்துவிட்டு அன்பே சிவம் என்கிறீர்களே. அன்பே சிவம்னா அவன் கையில் சூலாயுதம் எதற்கு என கேட்க வைத்ததே அதுதான் பகுத்தறிவு. அந்த பகுத்தறிவு இயக்கத்தின் தலைவர் தான் தந்தை பெரியார்.

ஆதாமையும், ஏவாலையும் படைத்து ஒரு ஆப்பிள் தோட்டத்தையும் படைச்ச ஆண்டவன், எங்க ஆத்தா வீட்டைச் சுற்றி ஏன்டா வேலிக்கருவ மரமா படைச்சான் என கேட்க வைத்த அறிவு பகுத்தறிவு. அந்த அறிவைத் தந்தவர்தான் பெரியார். தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொன்னீர்களே, ஏன் சாத்தினீர்கள் என்று கேட்பதுதான் பகுத்தறிவு. கேளுங்கள் தரப்படும் என்றீரே பரம்ம பிதாவே!

3 ஆம் பக்கம்

### காவடி தூக்கிய தமிழா! இதுவா உன் கதி!

கோவில் திருவிழாவில் வேல் காவடி எடுத்து விட்டு திரும்பிய வாலிபர், ஆட்டோ கவிழ்ந்ததில் உடலில் ஏராளமான வேல்கள் பாய்ந்து பரிதாபமாக உயிரிழந்தார். சென்னை கொருக்குப்பேட்டை ஜமால் சவுக்கார் தெருவைச் சேர்ந்தவர் தீனன். இவர் வண்ணாரப்பேட்டை பகுதியில் பம்ப் ஸ்டவ் செய்யும் கம்பெனி நடத்தி வருகிறார். தீனன் தீவிர கடவுள் பக்தர் ஆவார். இவர் அம்மன் கோவில் திருவிழாக்களில் உடலில் வேல், அலகு குத்தி காவடி எடுத்து வருவது வழக்கம். இந்த நிலையில் விழுப்புரத்தில் உள்ள கருமாரி அம்மன் கோவிலில் ஆடி திருவிழா நடைபெற்றது. அந்த விழாவில் காவடி எடுப்பதற்காக தீனன், தனது நண்பர்கள் வேலு, நந்தகுமார், வரதன், ராஜேந்திரன், ஜோதி ஆகியோருடன் ஷேர் ஆட்டோவில் சென்றார்.

அங்கு சென்றதும் காவடி எடுத்து நேர்த்தி கடனை செலுத்தினார். பின்னர் தீனன், காவடியில் இருந்த வேல் கம்புகளை தனியாக எடுத்து ஆட்டோவின் பின்னால் வைத்துக் கொண்டு, சென்னைக்குப் புறப்பட்டார்.

விழுப்புரம் அருகே கூட்டேரிப்பட்டு மெயின் ரோட்டில் ஆட்டோ வரும்போது ரோட்டில் கொட்டி வைக்கப்பட்டு இருந்த ஜல்லிக் கற்கள் மீது திடீரென ஏறி இறங்கியது. இதில் ஆட்டோ நிலை தடுமாறி ரோட்டில் தலைகீழாக கவிழ்ந்தது.

இந்த சம்பவத்தில் ஆட்டோவில் பயணம் செய்த தீனனின் உடலில், தனியாக கட்டி வைக்கப்பட்டு இருந்த வேல் கம்புகள் தாறுமாறாக குத்தின. வயிறு, மார்பு, கழுத்து, முகம் என பல இடங்களில் குத்தி துளைத்தன. இதில் தீனன் சம்பவ இடத்தில் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்தார்.

**'தினத்தந்தி' சென்னை 21.7.2008**

# உலகில் ஒவ்வொரு மனிதனும் நாத்திகன் தான்!

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஊமை எப்படி கேட்பான் என்று கேட்டோமே அந்த அறிவு பகுத்தறிவு. தேடுங்கள் கிடைக்கும் என்றீரே! குருடன் எங்கே போய் தேடுவான் என்று கேட்பது பகுத்தறிவு. இந்த அறிவை நீ சொல்லித் தரல. அப்படியே நம்புங்கள் என்றீர்கள். என்னை முழுமையாக விசுவாசி என்கிறீர்கள். எதையுமே சந்தேகிக்கக் கூடாது என்கிறீர்கள். அந்த இடத்திலே எங்கள் அறிவை சிந்தனையை நிறுத்தி மடமையிலே மூழ்கடித்தீர்கள். அதிலிருந்து எங்கள் சிந்தனையைத் தூண்டி எங்கள் அறிவில் கிளர்ச்சி செய்து அதை வளரச் செய்த தலைவர் தந்தை பெரியார். அதனால் தான் அவர் அறிவுலக ஆசான்.

நாங்கள் பேசுவது யாருக்காக? எங்கள் உறவுக்காக! ஏன் காட்டு மிராண்டிதனமாக இருக்கிறாய் என்று கேட்கிறோம். அலகு குத்தும் என் அன்பு சொந்தங்களே! இரண்டு தாடைகளுக்கு இடையில் உள்ள மெல்லிய சதைப் பகுதியிலே அலகு குத்துறீங்க; அதே பக்தியை சொல்லிக் கொண்டு நீ சிறந்த பக்திமானாக இருந்தால் அப்படியே தாடைக்கு மேலே அரை அங்குலம் மேலே ஏற்றி குத்துப் பார்க்கலாம். உன்னாலே முடியுமா? முடியாது. செத்துப் போயிடுவோம் என்று தெரியும். தீமிதிக்கிறாயே நீ சிறந்த பக்திமானாக இருந்தால் நெருப்பு கரியை எடுத்துவிட்டு பழுக்கக் காய்ச்சிய 10 இரும்பு கம்பியை போடுறேன், மிதியடா பார்க்கலாம். அப்படி நீ மிதிச்சிட்டா, அன்றைக்கே நான் இந்த கருப்புச் சட்டையை போடல.

உன்னால் முடியுமா? முடியாது. ஏனா இது அறிவியல், கடவுள் மறுப்பு என்பது விஞ்ஞானம். வீட்டில் தாய் மார்கள் சமையல் செய்யும்போது கீழே விறகு கட்டை எரியும். அதன் நெருப்பு வெளியே வந்தால் கையாலே எடுத்து உள்ளே போடுவார்கள். மேலே ஒரு பானை இருக்கும் அதன் மேலே உலை மூடி இருக்கும். அதை கையால் எடுக்க முடியாது. ஒரு துணியை பிடித்து எடுப்பார்கள். காரணம் என்ன? அறிவியல்! வெப்பத்தை கரி கடத்தாது. உலோகம் உடனே வெப்பத்தை கடத்தி விடும். இது தான் அறிவியல்.

இதை என் சொந்தங்களுக்கு நான் சொல்லித் தராம, நாயே, நீயா சொல்லித் தருவே? எத்தனை ஆயிரம் ஆண்டு களாக என் இனத்தை மடமையிலே மூழ்கடித்து வைப்பாய்! பாம்புக்கு பால் ஊற்றும் எங்கள் இனத்தின் மடமையை எந்தக் காலத்தில் நாங்கள் விடுவிக்கப் போகிறோம்? நாங்கள் சொல்லித் திருத்த வேண்டாமா? பாம்பு பாலூட்டி இனமே இல்லை என்ற ஒரு உண்மையை சொல்லித் தர தவறிய என் இனத்து மக்களை எப்படியடா திருத்தப் போகிறோம்! பாம்புக்கு பிளவுப்பட்ட நாக்கு அது எதையும் உறிஞ்சிக் குடிக்காது. அப்படியே விழுங்கும் முட்டையைக் கூட கொத்திக் குடிக்காது. அப்படியே விழுங்கும். ஆனால் திரைப்படத்தில் குடிக்குதே என்று கேட்கலாம். அது அறிவு கெட்ட முட்டா பயல்கள் எல்லாம் சேர்ந்து மேலும் முட்டாளாக்க செய்கிற முட்டாள்தனம் அது. பாலைக் குடிக்குதே என்பீங்க. அது வாயைத் தைத்து வைச்ச சினிமா பாம்பு ஒரு மயிரும் குடிக்காது. சட்டி மேலே கொண்டு போய் வைப்போம். அது மயங்கிக் கிடக்கும் ஒரு காட்சியை எடுத்துப்போம். பாலை கொஞ்சம் கீழே ஊற்றிவிட்டு திரும்ப காட்சி எடுப் போம். இப்படி மூன்று நான்கு முறை எடுத்து எல்லாத்தையும் ஒன்று சேர்த்துக் கொள்வோம். பார்ப்பவர்களுக்கு பாம்பு சரவரவென பாலைக் குடித்ததுப் போல தெரியும். இதுல ஏமாறுகிறது போல் தான் எங்க சனங்க இரண்டாயிரம் வருடங்களா ஏமாந்து கிடக்கிறார்கள்.

பாம்புக்கு காதுக் கேட்காது. அதற்கு உணர்வு நரம்புகள்தான் இருக்குது. மகுடி ஊதுறவன் அப்படியே நின்னா பாம்பும் அப்படியே நிற்கும். ஆடிக் கிட்டே ஊதுறதாலே அதுவும் ஆடும். இவையெல்லாம் ஒரு அடிப்படை அறிவு. அடிப்படை அறிவுக்கூட வளராத என் இன மக்கள் 21-ம் நூற்றாண்டு வரை வந்து விட்டார்களே என்ற வேதனையில் தானே நாங்கள் எடுத்துச் சொல்றோம். இன்னும் குடகுடமா பாலைக் கொண்டு போய் ஊத்துற மக்களை என்ன சொல்வது ராஜா? ஏன் நீ இதையெல்லாம் சொல்லித் தரலை. ஏன் தெரியுமா? எம் இனம் அறிவார்ந்த இனமா மாறிட்டா, பார்ப்பானுக்கு ஆபத்து. பிறகு கேள்வி கேட்பான். அது தானே உன் பிரச்சினை. கடவுள் இருக்கா? இல்லையா? என்று எங்கள் மக்கள் முன்னாலே நாங்கள் பேசும் நாத்திகம், எங்கள் மக்களின் விடிவுக்கான நாத்திகம். இன்னும் சொல்லப் போனால், நாங்கள் நாத்திகம் பேசவில்லை; அறிவை பேசுகிறோம்.

நான் மட்டுமா நாத்திகன்? இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் நாத்திகன் தான். எவனாவது மறுக்க முடியுமா? பசிக்கு சாப்பிடுகிற எல்லாரும் நாத்திகன் தான். கடவுள் உங்களை பிறக்க வைச்சபோது நிர்வாணமா பிறக்க வைச்சா நிர்வாணமாக திரிய வேண்டியது தானே? இந்த நாட்டிலே தலைவலி, காய்ச்சலுக்கு திரு நீரைப் பூசிக்கிட்டு கோயிலிலே அங்க பிரதட்சணம் செய்ய வேண்டியது தானே? ஏன் டாக்டர் கிட்ட போறே? நீ டாக்டர் கிட்டே போறப்பவே கடவுளை நம்பவில்லையே, நீ! கோயில் கதவை பூட்டிக்கிட்டுப் போற எல்லாருமே நாத்திகன் தானே. கடவுள் நம்பிக்கை எனக்கா இல்லை, உங்களுக் கும் தானே இல்லை. (கைதட்டல்)

இசுலாமிய கடவுளை கிருத்து வனும், இந்துவும் நம்பல. கிருத்துவ மதக் கடவுளை இசுலாமியனும் இந்துவும் நம்பல. இந்துமதக் கடவுளை இசுலாமியனும், கிருத்துவனும் நம்பல. நாங்க மூன்றையும் நம்பறதில்லை. நீங்க சுத்தி சுத்தி நம்பல. நாங்க நேரடியா நம்பல. நீங்கள் தனித்தனியா சொன்னா அது நல்லது. நாங்க மொத்தமா சொன்னா நாத்திகமா! (கைதட்டல்)

நாத்திகம் என்பது அறிவு. நாத்திகம் என்பது கல்வி. ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் கற்க வேண்டிய பாடம். கோவிலில் கடவுள் அளவற்ற சக்தியும், அண்டசராசரங்களையும் இரட்சிக்கிற பேராற்றல் கொண்ட அந்த பெரு மகனுக்கு எதுக்குடா கதவும், பூட்டும்? ஒரு நாள் அல்ல அரை மணி நேரம் திறந்து வைத்து பார். உன் கடவுள் அங்கே இருக்குதா என்று. கோணிப் பையிலே போட்டு கட்டிக் கொண்டு போயிருப்பான். அப்புறம் போய் போலீஸ் நாயை கொண்டு நக்கிக் கண்டுப் பிடிக்கனும், உன் கடவுளை. அவன் காலடியில் வைத்திருக்கிறாயே ஒரு உண்டியல் அதற்கு எதற்கு ஒரு பூட்டு. ஏன் வங்கிகளைவிட கோயில் உண்டியலில் தான் கொள்ளை அடிக்க அதிகம் பணம் இருக்கிறது.

இந்து மதம் என்பது பார்ப்பனீய மதம். மறுத்துப் பேச முடியுமா? நீயும் இந்து நானும் இந்து. பிறகு ஏன் நீ அய்யரு, நான் பறையரு? இது சாதிய துவேசம் அல்லவா? நபிகள் நாயகம் சொன்னாரா, நான் நான்கு வர்ணத்தைப் படைத்தேன் என்று? கிருஸ்து சொன்னாரா, சாதியை நான் தான் படைத்தேன் என்று.

கிருஷ்ணன் பகவத் கீதையில் சொல்றான், ‘நால்வகை வர்ணாசிரம தருமத்தை நானே படைத்தேன் என்று. அது மட்டுமா சொல்றான்? இதை நானே நினைத்தாலும் மாற்ற முடியாது என்று கிருஷ்ணன் சொல்றான். இது கொடுமையல்லவா? சரி கிருத்துவ மதத்தின் தலைவன் ஒரு கிருத்துவனாக இருக்கிறான். இசுலாம் மதத்தின் தலைவன் ஒரு இசுலாமியராக இருக்கிறான். இந்து மதத்தின் தலைவன் இந்துவாகத் தானே இருக்க வேண்டும். எங்கள் அண்ணன் திருமாவளவன் இந்து தானே! காஞ்சி மடாதிபதியை இறக்கிட்டு திருமாவளவனை 5 வருடம் மடாதிபதியாக்குங்கடா. நாங்க இந்து மதத்தைப் பற்றி பேசலை. (கைதட்டல்)

(தொடரும்)

## இராமகோபாலனுக்கு ஒரு கேள்வி!

**“கபாலீஸ்வரன் கோயில் உண்டியலை உடைத்து கொள்ளை போய் விட்டது. அந்த உண்டியலை இராமகோபாலன் 5 பேரோடு தூக்கிப் பிடித்துக் கொண்டு கோயில் உண்டியலை களவாடி விட்டார்கள். காவல் துறையே உடனே நடவடிக்கை எடு என்று கேட்கிறான். கடவுள் நம்பிக்கை உனக்கு இல்லையா? இராம. கோபாலன் அவர்களே, கோயில் உண்டியலை கடவுள் காப்பாற்ற முடியல. காலடியில் உள்ள உண்டியலை காப்பாற்ற முடியாத கடவுள் இந்த உலகத்தை காப்பாற்றுது நம்புங்கன்னு இவன் சொல்லி வச்சிருக்கான்.**

**ஒரு பெண் கவிஞர் கவிதை எழுதி இருந்தாங்க. ‘கையில் சூலாயுதம் இருந்தும், காத்துக் கொள்ள தவறிவிட்டாள் கடத்தப்பட்ட மகமாயி’; ஒருவன் புதுக் கவிதை எழுதினான் ‘ஆன்மீகத்தை நம்பினால் ஆயுள் கூடும்; நம்புங்கள் நம்புங்கள் பிரேமானந்தாவிற்கு இரட்டை ஆயுள்கிடைத்திருக்குதுன்னு’.”**

**சீமான் உரையிலிருந்து**

# பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி உருவபொம்மை எரிப்பு

## பொள்ளாச்சியில் 15 தோழர்கள் கைது

ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு மீனவர்களைக் கடத்திச் சென்று சிங்கள ராணுவம் கொடுமைப் படுத்திய காயம் ஆறுவதற்குள்ளாகவே ஜுலை 12 ஆம் தேதி அதிகாலை நாகை மீனவர்கள் இருவரை சுட்டுக் கொன்றிருக்கிறது சிங்கள ராணுவம்.

இந்தச் செய்தி வெளியான சில மணி நேரத்தில் பொள்ளாச்சியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணியின் உருவ பொம்மை எரிப்புப் போராட்டம் நடத்தி கழகத் தோழர்கள் 15 பேர் கைதானார்கள்.

பேருந்து நிலையம் முன்பு உருவ பொம்மையுடன் திரண்ட தோழர்கள் சிங்கள ராணுவத்திற்குத் துணை போகும் இந்தியாவைக் கண்டித்து கடுமையான முழக்கங்களை எழுப்பினர்.

போக்குவரத்து தடைபட்டு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தை கண்டனர்.

வட்டச் செயலாளர் காசு.நாகராசன் தலைமையில் நகர துணைச் செயலாளர் த.இராசேந்திரன், பொருளாளர் கலை இராசேந்திரன், மாணவர் கழக அமைப்பாளர்கள் கணேசு, விவேக் மற்றும் வே.மணி, சாரனாத், சபரி, சி.கிரி, சுரேசு, கண்ணன், ஆதித் தமிழர் பேரவை வானுகன் உள்ளிட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

## நன்னன் அண்ணல் நினைவு பரிசுப் போட்டி விழா

பேராசிரியர் நன்னன் - மறைந்த தனது மகன் அண்ணல் நினைவாக ஆண்டுதோறும் பகுத்தறிவு பரப்பும் கட்டுரைகள் - சிறுகதைகளுக்கும் பரிசுப் போட்டிகளை நடத்தி வருகிறார். இதன் 5 ஆம் ஆண்டு நிகழ்ச்சி 30.7.2008 அன்று மாலை 6 மணியளவில் சென்னை தியாகராயர் நகர் சர். பிட்டி தியாகராயர் அரங்கில் நடைபெறுகிறது. விழாவில்

1) இளையவன் இவன் (சிறுகதைத் தொகுதி)

2) எழுதுகோலா, கன்னக் கோலா
(தமிழ் உரை நடை - இயல்)

3) பெரியாரைக் கேளுங்கள் (24 குறுமங்கள்)

ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்படவிருக்கின்றன. பேராசிரியர் அன்பழகன், முனைவர் பொன்னவைக்கோ, முனைவர் சொ.ந. கந்தசாமி, சிலம்பொலி செல்லப்பன், முகம் மாமணி, தோழர் இரா. நல்லக்கண்ணு ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## காவேரிப் பட்டினத்தில் காமராசர் பிறந்த நாள்

கிருஷ்ணகிரி மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக பெருந்தலைவர் காமராசரின் 106-வது பிறந்த நாளை 15.7.2008 அன்று வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.



மாவட்ட அமைப்பாளர் ஆர். கண்ணன் தலைமையில் 25-க்கும் மேற்பட்ட கருஞ்சட்டை கழகத் தோழர்கள், கழகக் கொடிகளை கரங்களில் ஏந்தி காவேரிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கருகிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு காவேரிப்பட்டணம் பேரூராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் ஒன்றிய அமைப்பாளர் குமார் வரவேற்புரையினைத் தொடர்ந்து, மாவட்ட அமைப்பாளர் ஆர். கண்ணன், காமராசரும் - தந்தைப் பெரியாரும் என்னும் பொருளில் சிறப்புரை ஆற்றினார். மேற்படி நிகழ்ச்சியில் பகுத்தறிவாளர்கள் கழகத்தின் சார்பில் ஆசிரியர்கள் சிவசங்கர், பிரபு, முனிராசு, பால முருகன் ஆகி யோரும் கழகத் தோழர்கள் யுவராஜ், காமராஜ், சிலம்பரசன், நிருபன் சக்கரவர்த்தி, சேகர், கோவிந்த், கமல், அர்ச்சுணன், சுரேஷ்பாபு, பூபேஷ் ஆகியோருடன் கழக அனுதாபிகள் திரளாகக் கலந்து கொண்டனர். ஆனந்தன் நன்றியுரை கூற கூட்டம் இனிது முடிவுற்றது. மணி கண்டன், முனியப்பன், ஜீவானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## திருச்சியில் கண்ணைக் கட்டிக் கொண்டு இருசக்கர வாகனம் ஓட்டி பிரசாரம்

கறுப்புத் துணியால் கண்ணைக் கட்டிக் கொண்டு இரு சக்கர வாகனம் ஓட்டி, சேது சமுத்திரத் திட்டத்துக்கு ஆதரவு கேட்டு 15.7.2008 செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் பிரச்சாரம் செய்தார் தூத்துக் குடியைச் சேர்ந்த கழகத் தோழர் பால். அறிவழகன்.



திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே தொடங்கிய இப்பிரச்சாரம், நகரின் முக்கிய வீதிகளின் வழியே வந்து சத்திரம் பேருந்து நிலையத்திலுள்ள காமராஜர் சிலை அருகே நிறைவடைந்தது.

திருச்சி மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தலைவர் செ.த.ராஜேந்திரன் தலைமை வகித்தார். திருச்சி மாநகர துணை மேயர் மு. அன்பழகன் தொடங்கி வைத்தார்.

நிறைவில் காமராஜர் அறக்கட்டளை நிறுவனர் மலைக்கோட்டை மாயாண்டி கலந்து கொண்டு வாழ்த்தினார். சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும். மீனவர்கள் தொடர்ந்து கொல்லப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் ஆகியவை இதில் வலியுறுத்தப்பட்டன.

முதல் பக்கத் தொடர்ச்சி

மாயாவதியும், முலாயம்சிங்கும் நம்பிக்கை ஓட்டெடுப்பின் நட்சத்திரங் களாகியுள்ளனர்.

மேற்கு வங்கம், திரிபுரா, கேரளா என்ற மாநிலங்களைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் அதிகாரத்தைப் பிடிக்க இயலாத தேசிய கட்சிகளான இடதுசாரிகள் உண்மையில் மாநிலக் கட்சிகள் தான்! இந்த மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை நம்பியே செயல்படுகிறார்கள். பிரிட்டிஷாரின் நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட இந்தியா ஒரு தேசமல்ல; பல்வேறு கலாச்சாரம், மொழி, இனங்களைக் கொண்ட ஒரு உப கண்டம். தேசிய கட்சிகளும், இடதுசாரி கட்சிகளும் இந்த எதார்த்தத்தைப் புறக்கணித்துவிட்டு, ஒருமைப்பாடு, தேசியம் என்ற முழக்கங்களுக்குள் முடங்கிக் கிடப்பதில் அர்த்தமில்லை.

மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற அரசியல் முழக்கத்தை கடந்த காலங்களில் பேசி வந்த தி.மு.க. போன்ற கட்சிகள் கூட, அதற்கான காலம் கனிந்துள்ள நிலையில் கொள்கைகளைப் பேசவே தயங்கி நிற்கிறது.

ஆக, நாடாளுமன்றத்தில் ஆளும் கூட்டணி கொண்டு வந்துள்ள நம்பிக்கைத் தீர்மானம் வெற்றி பெற்று விட்டது; ஆனால், 'இந்தியா' என்ற அமைப்பின் மீதான நம்பிக்கை தீர்மானகரமாக தோல்வி அடைந்து வருகிறது என்பது மட்டும் உண்மை. மாநிலங்களின் முழுமையான தன்னாட்சி நோக்கிய அரசியல் விவாதங்கள் தொடர வேண்டிய நேரம் வந்துவிட்டது!

**– இராசேந்திரன்**

## செப். 17 இல் – 27 தொகுதிகள்

## 'குடிஅரசு' முன்பதிவுத் திட்டம்

1925 முதல் 1938 முடிய சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதும் தொகுக்கப்பட்டு 27 தொகுதிகளாக, வெளிவர இருக்கின்றன.

ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்களுக்கு மேல்!

ரூ.5400 விலையுள்ள இத் தொகுதிகள் முன் பதிவு திட்டத்தின் கீழ் ரூ.3500-க்கே உங்களுக்கு கிடைக்கும்.

ரூ.3500 முன் பணம் அனுப்பி, முன் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி, ஆகஸ்ட் 31.

வரைவோலையாகவோ (டிராப்ட்), பணவிடை வழியாகவோ (மணியார்டர்) மட்டும் அனுப்ப வேண்டும். காசோலைகள் (செக்) அனுப்ப வேண்டாம்.

பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி - 27 தொகுதிகளும் வெளி வருகின்றன.

ஒவ்வொரு தமிழர் இல்லத்திலும் இடம் பெற வேண்டிய அரிய தொகுப்பு!

ஏற்கனவே கழகத்தால் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளும், பல புதிய சேர்க்கைகளோடு, கூடுதல் பக்கங்களில் இப்போது, இத் தொகுதிகளோடு இணைத்து, மீண்டும் வெளியிடப்படுகிறது.

முன்பணம் செலுத்தி, உங்கள் தொகுதிகளை உறுதி செய்து கொள்ளுங்கள்!

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தா.செ.மணி**, பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை-1,
சேலம் மாவட்டம்-636 401

வரைவோலையாகவோ (D.D.), பணவிடையாகவோ (எம்.ஓ.) அனுப்பலாம். **'T.S. MANI'** என்ற பெயரில் வரைவோலை எடுக்க வேண்டும். மேட்டூர் அணையில் மாற்றத்தக்க வங்கி வரைவோலைகளாக இருத்தல் வேண்டும். காசோலை (Cheque) ஏற்க இயலாது.

***குறிப்பு:*** முன் பதிவுக் கட்டணம் பெறுவதற்கான ரசீது புத்தகங்களை விரைவில் கழக செய்தி தொடர்பாளர் பொள்ளாச்சி பிரகாசு நேரில் வந்து வழங்குவார். தோழர்கள் விரைந்து செயல்பட வேண்டுகிறோம்.

**– பெரியார் திராவிடர் கழகம்**

## விழுப்புரத்தில் நடிகவேள் எம்.ஆர்.ராதா நூற்றாண்டு

16.7.2008 புதன் மாலை விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நடிகவேள் எம்.ஆர். ராதா நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ப.கண்ணன் தலைமையேற்க, சி. ஆசைத்தம்பி வரவேற்புரையாற்ற, வெ. அமிர்தலிங்கம், மு.வ. நடராசன், சி. சாமிதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ப. கண்ணன், வெ. அமிர்தலிங்கம், மு.வ. நடராசன், ந. அய்யனார் ஆகியோர் உரையைத் தொடர்ந்து, கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன், கழகத்தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர். முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். குழுவினர் பகுத்தறிவு பாடல்கள் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கல்லை செந்தில், க. சரவணன், ஆசிரியர் ஜெயராமன், மு.வ. செல்வராசு, ச. இளையராஜா, செ. பிரபு, மு. ராசா, மா. அன்பழகன், விழுப்புரம் கணேசன், ம. குப்புசாமி, ச. தனபால், மா.குமார், ஆசிரியர் தேவராசு, ஆ. தமிழ்தாசதுரை உள்பட ஏராளமான தோழர்கள், பொது மக்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ச. பெரியார் வெங்கட் நன்றி கூறினார்.

## 'தோழி' பிறந்த நாள் !

சென்னை மாவட்டக் கழக செயலாளர் இரா. உமாபதி - பாரதி இணையரின் பெண் மகவு 'தோழி'யின் 2 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா இராயப்பேட்டையில் உள்ள உமாபதி இல்லத்தில் 19.7.2008 மாலை 7 மணியளவில் சிறப்புடன் நடந்தது. கழகத் தோழர்கள் பங்கேற்றனர். பிறந்த நாள் நன்கொடையாக ரூ.500 கழக ஏட்டுக்கு உமாபதி வழங்கினார்.


நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 25th July 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 ஜூலை 31, 2008 புரட்சி 7 முழக்கம் 31 விலை : ரூ.2.50


# ஆர்ப்பாட்டங்கள்; பிரச்சாரங்கள்; களப்பணியில் கழகத் தோழர்கள் தீவிரம்







*தமிழகம் முழுதும் – பெரியார் திராவிடர் கழக செயல் வீரர்கள் – தீவிரமான களப்பணிகளை ஆற்றி வருகிறார்கள்*

**சாதிவெறிப் படுகொலைக்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்**

அண்மையில் சேலம் மாவட்டம் காவலாண்டியூர் கிராமத்தைச் சார்ந்த தலித் இளைஞரும், அதே சமூகத்தைச் சார்ந்த நாடார் வகுப்பு பெண்ணும் காதலித்து திருமணம் செய்து கொண்டதை எதிர்த்து, ஆதிக்கசாதியினர் நடத்திய வன்முறை வெறியாட்டத்தைக் கண்டித்து, கடந்த ஜூன் 30 ஆம் தேதி ஈரோட்டில் சாதி ஒழிப்பு கூட்டியக்கம் எழுச்சியான ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

அதைத் தொடர்ந்து, கோவை அருகே உள்ள ஊஞ்சப்பாளையத்தைச் சேர்ந்த ஒரு தலித் தோழர் ஆதிக்கசாதிப் பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து, ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு கொலை செய்யப்பட்டுள்ளார். கொலையை மூடி மறைக்க காவல்துறையும் துணை போகிறது. இதை எதிர்த்து, கழகத்தின் முயற்சியால் உருவாக்கப்பட்ட சாதி ஒழிப்பு கூட்டியக்கம் போராட்டத்தில் இறங்கியுள்ளது. செய்தி விவரம்:

கோவை சோமனூர் அருகிலுள்ள ஊஞ்சப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் சிற்றரசு. அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்தவர். இவர் அதே ஊரைச் சேர்ந்த கோமதி என்ற உயர்சாதிப் (கவுண்டர்) பெண்ணை காதலித்து ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்து கொண்டார். இவர்கள் திருமணத்தை கோமதி வீட்டினரும், உறவினர்களும் கடுமையாக எதிர்த்து, சிற்றரசை கொலை செய்து விடுவதாக மிரட்டி வந்தனர். கொலை மிரட்டலுக்கு பயந்து தலைமறைவாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் கடந்த 6.7.08 அன்று மங்கலத்திலிருந்து பல்லடம் போகும் சாலையில் வேலாயுதம் பாளையம் அருகில் சிற்றரசு அரை நிர்வாண நிலையில் தலை நசுங்கி பிணமாகக் கிடந்தார். சிற்றரசுவின் சடலம் சட்டை இல்லாமல் காலில் செருப்பும் இல்லாமல் இருந்தது. உடல் முழுவதும் முற்களால் குத்தப்பட்டு கடுமையான காயங்களுடன் தலையில் வாகனத்தை ஏற்றி தலைநசுங்கி இறந்து கிடந்தார்.

சிற்றரசின் வழக்கை காவல்துறை விபத்து வழக்காக பதிவு செய்துள்ளது. இந்த வழக்கை வன்கொடுமை மற்றும் கொலை வழக்காக பதிவு செய்யக் கோரியும், சிற்றரசின் கொலைக்கு காரணமானவர்களை உடனடியாக கைது செய்யக் கோரியும் 23.7.08 புதன் மாலை 3 மணியளவில் சாதி ஒழிப்பு கூட்டியக்கத்தின் சார்பில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் இரா. அதியமான் தலைமை தாங்கினார். தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் நிலவன் முன்னிலை வகித்தார். கழகத்தின் சார்பில் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் சுசி. கலையரசன், விழுதுகள் அமைப்பைச் சார்ந்த தங்கவேலு, புரட்சிகர இளைஞர் முன்னணி முருகேசன் உள்ளிட்ட பல்வேறு இயக்கத்தவர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

## கலைவாணர் நூற்றாண்டுதொடக்கம்

***கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் 30.7.2008 புதன் 6 மணியளவில் சென்னை இராயப் பேட்டையில் கழக சார்பில் தொடங்கின. முதல் நிகழ்ச்சியாக இராயப்பேட்டை வி.எம்.தெரு, லாயிட்ஸ் சாலை சந்திப்பில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நடித்த பகுத்தறிவு திரைப்படக் காட்சிகள் திரையிடப்பட்டன. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். சு. பிரகாசு தலைமை தாங்கினார்.***

ஆர்ப்பாட்டத்தில் கழகத்தின் சார்பில் செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, வடக்கு மாவட்ட தலைவர் சு.துரைசாமி, பொள்ளாச்சி வட்டத் தலைவர் கா.சு.நாகராசன், கோவை மாநகர தலைவர் ம.ரே. இராசக்குமார், செயலாளர் வே.கோபால், இருகூர் செந்தில், திருநாவுக்கரசு பகுதி கழக செயலாளர்கள் சண்முகசுந்தரம், அண்ணாமலை, சத்யா, மாணிக்கம், நாகராசு, தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் மணிகண்டன், பால்முரளி, மாசிலாமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சிற்றரசின் வழக்கை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் பதிவு செய்யவும், மறு விசாரணை கோரியும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் இரா. அதியமான், சுசி. கலையரசன், நிலவன் உள்ளிட்டோர் கோரிக்கை மனு ஒன்றை வழங்கினர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

**செய்தி : இ.மு. சாஜித், கோவை.**

**காரிமங்கலத்தில் கழகக் கூட்டம் புதிய தோழர்கள் இணைந்தனர்**

22.7.08 அன்று தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் ஒன்றியம், மொரப்பூர் சாலையில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் பெரியாரியல் பரப்புரை பொதுக் கூட்டம் நடைபெற்றது. கெ.த.அறிவுடை நம்பி வரவேற்புரையாற்றினார். ஒன்றிய அமைப்பாளர் கோ.செந்தில்குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் முனி.ஆறுமுகம் தலைமை தாங்கினார். சிற்பி இராசன், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியைத் தொடர்ந்து திரைப்பட இயக்குனர் வேலு பிரபாகரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நங்கவள்ளி அன்பு, மாவட்ட அமைப்பாளர் கொ. வேடியப்பன், கிருட்டிணகிரி மாவட்ட அமைப்பாளர் கா. கண்ணன், ஒன்றிய அமைப்பாளர்கள் தி.குமார், மா. அசோக் குமார் ஆகியோர் உரையாற்றினர். 250-க்கும் மேற்பட்ட தோழர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர். புதிதாக மாவோயிஸ்ட் நக்சல்பாரி அமைப்பிலிருந்து விலகி மேடு அள்ளி கிராமம் தோழர்கள் கோ.செந்தில் குமார், மு.சரவணன், காவேரிப்பட்டிணம் ஒன்றியத்தைச் சேர்ந்த தோழர்கள் இடியராசா, பிரேம்குமார், இரணியன், நிருபன் சக்ரவர்த்தி, எல். யுவராசு, சிலம்பரசன், கமல், மணி, இராமதாசு, கார்த்திக், சேகர் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்டவர்கள் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். மு.சரவணன் நன்றி கூறினார்.

**செய்தி : முனி. ஆறுமுகம்**

**நெல்லை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்**

20.7.08 அன்று திருநெல்வேலி மாவட்ட பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம், மாவட்டத் தலைவர் ப. அரியமுத்து தலைமையில், துணைத் தலைவர் வெ.கவிதை ராசு முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சி.ஆ.காசிராசன், மாநகரச் செயலாளர் பொ.பொன்ராசு, மாவட்ட பொருளாளர் கா.மா. அமைதிராசன், மண்டலச் செயலாளர் க.செயகுமார், கா.மா. கருமலை பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாதத்தில் முதல் வார ஞாயிற்றுக் கிழமைகளில்

4 ஆம் பக்கம்

*தலையங்கம்*

## மக்களை பலிகடாவாக்கும் 'மதவெறி' குண்டுகள்

பெங்களூரைத் தொடர்ந்து அகமதாபாத் நகரத்திலும் குண்டுகள் வெடித்துள்ளன. அப்பாவி மக்கள் 50 பேர் உயிர்ப் பலியாகியுள்ளனர். இந்தியாவின் முக்கிய நகரங்களில் - டெல்லி, பம்பாய், சண்டிகார் என்று தொடர்ந்து குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. இது மிகக் கொடூரமான வன்மையாக கண்டிக்கத்தக்க பயங்கரவாதம். இந்த வன்முறைகளுக்குப் பின்னால், மதவாதம் தான் மறைந்து கொண்டு நிற்கிறது. மத அடிப்படைவாதம் – அது எந்த மதத்துக்கு ஆதரவாக வந்தாலும் பாதிக்கப்படுவது மனித குலம் தான். இதே குஜராத்தில் தான் மோடி ஆட்சி முஸ்லீம்களை மதவாதத் தின் பெயரால் நரவேட்டை ஆடியது. இப்போது நடக்கும் தொடர் குண்டு வெடிப்புகள் – பாகிஸ்தானுடன் தொடர் புடைய இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் சதி என்று செய்திகள் வருகின்றன. உண்மை எதுவாக இருந்தாலும், மதவாதமும் சரி, அதனடிப்படையில் எழுப்பப்படும் அரசியலும் சரி, இரண்டுமே மக்களுக்கான வாழ்க்கை நெறி களுக்கே மதம் என்ற மதத்தின் அடிப்படைக் கோட் பாடுகளிலிருந்து முழுமையாக விலகி, வேறு திசையில் மக்களை பயணிக்கச் செய்து வருகின்றன.

அறிவியல் வளராத காலங்களில் உருவான மதங்களும், அதன் வாழ்க்கை முறைகளும், கோட் பாடுகளும் இன்றைய வாழ்க்கையோடு முரண்பட்டு, காலாவதியாகிவிட்ட நிலையில், மதத்தின் பெயரால் சுரண்டும் சக்திகள் இந்த மதங்களை உயிர்ப்புடன் வாழ வைக்க அதீதமான முயற்சிகளில் இறங்கி வருகின்றன. மதத்துக்கும், கடவுளுக் கும் உறவுகளை உருவாக்கியவர்கள் ஒரு கட்டத்தில் மதத்துக்கும், அரசியலுக்குமான உறவை வலிமைப்படுத்தி, அதற்கு கடவுளையும் கடவுள் நம்பிக்கையையும் கருவி களாக்கிவிட்டனர். அதனால்தான் மதத்தின் பெயரால் நடக்கும், குண்டு வெடிப்புகளில் அரசுகளும், அரசியல்களும், அரசு அமைப்புகளான உளவு நிறுவனங்களும் விவாதத்துக்கு உள்ளாகின்றன. "கடவுள் இதை ஏன் தடுத்து நிறுத்த வில்லை?" என்ற கேள்வியே எழாமல் போய்விட்டது. 'கடவுள்'கள் என்ற அடித்தளத்தில் மதத்தை நிற்க வைத்த காலம் முடிந்து போய், உண்மையான அதிகாரமும், வலிமையும் கொண்டுள்ள அரசுகள், அரசு நிறுவனங்களின் மீது தான் மதத்தை நிற்க வைக்க முடியும் என்ற நிலை வந்துவிட்டது. கடவுள்கள் அதிகாரமோ, சகதியோ இல்லாதவை என்பது அம்பலமாகிவிட்டது. அதன் காரணமாகத்தான் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்த வுடன், மக்களுக்கு தரும் பாதுகாப்புகளை விட அரசுகள், செல்வம் கொழிக்கும் கோயில்களுக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றன. கோயிலுக்கு வரும் பக்தர்கள் கூட கடும் சோதனைகளுக்கு பிறகே கோயிலுக்குள் பகவானை தரிசிக்க அனுப்பப்படுகிறார்கள்.

ஆக, மதவாதங்களிலிருந்து மக்களை மீட்டெடுப்பது தான் மக்களுக்கான எதிர்கால பாதுகாப்பாக இருக்க முடியும். இந்தியாவில் உளவு நிறுவனங்கள் ஏராளமாக இருந்தாலும், கோடிக் கணக்கான ரூபாய் அதற்கு செலவிடப்பட்டாலும், இந்த உளவு நிறுவனங்களுக்குள் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் இல்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுகின்றன. 'இந்தியன்' என்ற ஒருங்கிணைவே இல்லாத ஒரு நாட்டில், அதன் நிறுவனங்கள் மட்டும் ஒருங் கிணைவாக செயல்படும் என்பது எதிர்பார்க்க முடியாதது தான். பார்ப்பனியம் உருவாக்கிய சாதியக் கட்டமைப்பு, கூறு போட்டு நிற்கும் சிந்தனைகளை உருவாக்கி ஓர்மையையும், ஒற்றுமையையும் சீர்குலைத்து விட்டது. பார்ப்பன இந்தியாவின் குணாம்சமும் இதைத் தானே பிரதிபலிக்கும்? பாதிக்கப்படுவது மக்கள் தான்!

மதவெறிகளும், அதனால் எழும் குண்டு வெடிப்புகளும் பற்றிய அழமான விவாதங்கள் நடத்தப் பெற வேண்டும். இந்துத்துவா குண்டு ஆனாலும், இசுலாமிய குண்டு ஆனாலும், கிறித்துவ குண்டு ஆனாலும் குண்டு – குண்டு தான். அந்தக் குண்டுகளைத் தங்களோடு இணைத்துக் கொள்ள மதங்கள் கதவுகளைத் திறந்து வைத் திருப்பதுதான், இதில் அடங்கியுள்ள பேராபத்து.

குண்டு வெடிப்புகளைத் தடுக்க மீண்டும் 'பொடா' வைக் கொண்டுவர வேண்டும் என்பது அபத்தமான யோசனை. 'பொடா'வும்மதவெறி ஆயுதம் தான்! ஒது குறிப்பிட்ட மதத் தினருக்கும், மத நம்பிக்கையற்ற மனித உரிமையாளர் களுக்கும் எதிராக பார்ப்பன மதவெறி கையில் எடுத்துக் கொண்ட அடக்குமுறை 'குண்டு' தான் 'பொடா'! ஒரு மத வெறிக்கு மற்றொரு மதவெறி தீர்வாக முடியாது. மனித நேய முள்ள – மத வெறியற்ற – சமூகமும், அரசியலும் வரவேண்டும். மக்களிடம் மதத்தை எதிர்த்துப் பேசவே கூடாது என்று, வாய் மூடிக் கொண்டிருக்கும் முற்போக்கு சக்திகள், இப்போதாவது தங்கள் மவுனத்தைக் கலைத்து வெளியே வரவேண்டும்!

# குஞ்சிதம் அம்மையார் நூற்றாண்டு தொடங்கியது



சுயமரியாதை வீராங்கனையும், குத்தூசி குருசாமியின் துணைவியருமான குஞ்சிதம் அம்மையாருக்கு, வரும் 2009 ஆம் ஆண்டு நூற்றாண்டாகும். 1909 ஆம் ஆண்டு ஜூலை 7 இல் திருவாரூரில் பிறந்தவர். பள்ளிக் கல்வியை சென்னை ஜியார்ஜ் டவுனில் உள்ள டேஸ் ஸ்கூலிலும் கல்லூரிப் பட்டப் படிப்பை ராணி மேரி கல்லூரியிலும் படித்தவர். 'இசை வேளாளர்' என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த குஞ்சிதம் - 1929 ஆம் ஆண்டில் பி.ஏ. இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தபோது, தந்தை பெரியார், பொன்னம்பலனார், இராமாமிர்தத்தம்மையார் ஆகியோர் குத்தூசி குருசாமிக்காக அவரை பெண் பார்க்கச் சென்றனர். குத்தூசி குருசாமி வைதீகத்தில் ஊறிய தொண்டை மண்டல முதலியார் சமூகத்தில் பிறந்தவர். சாதி மறுப்புத் திருமணம் செய்வதில் உறுதியாக இருந்தவர். தனது சாதி வெறி எதிர்ப்புகளை புறந்தள்ளினார் குருசாமி. 'குஞ்சிதம்-குருசாமி' திருமணத்தை பெரியாரே பெயரில் அழைப்பிதழ் அச்சிட்டு 8.12.1929 இல் ஈரோட்டில் பெரியார் இல்லத்திலே மாநாடு போல் நடத்தினார். பரபரப்பாக பேசப்பட்ட இந்த புரட்சிகர திருமணத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பிய பெரியார், திருமணத்துக்கு முதல் நாள் மணமகள் குஞ்சிதத்தை கோச் வண்டியில் அமர்த்தி, ஈரோடு நகரின் பெரிய வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்து வர ஏற்பாடுகளை செய்தார். அடுத்த நாள் காலையில் வாழ்க்கை ஒப்பந்தம் முடிந்த நிலையில், அன்று மாலையே ஈரோடு, சாரைவாய்க்கால் தெருவில் ஒரு பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்து, மக்களைத் திரட்டி, இந்த புரட்சிகர சாதி மறுப்பு மணமக்களை அழைத்துப் பேச வைத்து, தானும் பேசி, மக்கள் மன்றத்தில் சுயமரியாதை சாதி மறுப்புத் திருமணத்தை அறிமுகம் செய்தார். கூட்டத்தில் பெண்ணுரிமையை வலியுறுத்தி, மணமகள் குஞ்சிதம் ஆங்கிலத்தில் பேசியதை சுயமரியாதை வீரர் ஜே.எஸ்.கண்ணப்பர் தமிழில் மொழி பெயர்த்தார்.

புரட்சிகர - சாதி மறுப்பு - சுயமரியாதை வீராங்கனையாக வாழ்ந்த குஞ்சிதம், 1961 ஆம் ஆண்டில் முடிவெய்தினார். குஞ்சிதம் அம்மையாரின் நூற்றாண்டு விழா சென்னை காமராசர் சாலையிலுள்ள பல்கலைக்கழக இணைப்பு வளாகத்தில் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் சார்பில் 29.7.2008 அன்று பிற்பகல் 3 மணியளவில் நிகழ்ந்தது. குஞ்சிதம் அம்மையார் நூற்றாண்டின் முதல் நிகழ்ச்சியாக நடந்த இந்த விழாவில் துறைத் தலைவர் பேராசிரியர் அரசு தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஓவியா, வ.கீதா, முனைவர் வளர்மதி ஆகியோர் குஞ்சிதம் அம்மையார் பற்றி பேசினார்கள். குஞ்சிதம் அம்மையாரின் உரைகள் படிக்கப்பட்டன.

# கடவுளுக்கு தொப்புள் வந்தது எப்படி?

பெருந்தெய்வ வழிபாடு, இடைத் தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு - எனக் கடவுள் வழிபாட்டில் மூவகையுள்ளன.

சிவன், திருமால், பிரம்மன் வழிபாடு பெருந் தெய்வ வழிபாடு. காளியம்மன், மாரியம்மன், அய்யனார் முதலிய வழிபாடு - இடைத் தெய்வ வழிபாடு.

மதுரை வீரன், சுடலை மாடன், வீரமாச்சி யம்மன், மீனாட்சியம்மன், பட்டத்தரசியம்மன், அத்தனூரம்மன் என நீளும் வழிபாடு - சிறு தெய்வ வழிபாடு.

காக்கையை முன்னோராகக் கருதுவதும், நம் மக்களின் நம்பிக்கை. படைப்புச் சோற்றை வீட்டுக் கூரை மீது போட்டு, காக்கை உண்ட பின்பே உண்ணத் தொடங்குவது இன்றும் தொடரும் வழக்கம். (விருந்தில் நஞ்சு கலந் துள்ளதா என்பதைக் காக்கைக்கு முதலில் வைத்து அறிந்து கொள்வதே இதன் உண்மை நோக்கம்.)

பலி கொடுத்தல் முறை - இப்போது மாறிவிட்டது. உயிர் பலி கொடுப்பதற்கு மாறாக - குங்குமம் பூசிய பூசணிக்காயையோ எலுமிச்சம் பழத்தையோ வெட்டிக் குருதி சிந்துவதுபோல் காட்டப்படுகிறது.

அம்மை நோய் வந்தால் - மாரியம்மன் கோவில் பூசாரிக்கு இளநீர், பனங்கற்கண்டு, கோழி, ஆடு எனப் பூசைப் பொருட்களும், காணிக்கைகளும் முன்பு குவியும்; இன்று மறைந்து விட்டது.

தூய சைவர்கள் கூட அச்சம் காரணமாக ஆடு, கோழி, பலி கொடுத்து இறைச்சியைப் பிறருக்கு வழங்கிவிடுவது அன்றைய வழக்கம்.

சுடலை, மாரி, சூலக்கல் மாரி - என ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த தெய்வங்கள், இன்று மக்களின் நினைவிலிருந்து மறைந்து விட்டன.

அய்யப்பன், ஆதிபராசக்தி, மூகாம்பிகை முதலிய புதிய தெய்வ வழிபாடுகள் இப்போது அறிமுகமாகியுள்ளன.

தாயின் வயிற்றிலிருந்து நாம் வந்ததற்கு அடையாளமே நமக்குள்ள தொப்புள், பிறப்பு இல்லாமல் தானாகவே தோன்றிய கடவுளுக்கு எப்படித் தொப்புள் வந்தது? அறிவியல் எழுப்பும் இந்த வினாவிற்கு விடை சொல்லத் தெரியாமல் விழிக்க வேண்டியுள்ளது.

கடவுள்களின் தொப்புளை மறைத்து ஓவியமும் சிறப்பமும் அமைப்பதில் - இன்று ஓவியர்களும் சிற்பிகளும் கவனமாய் உள்ளனர்.

'எல்லாம் மாறியே தீரும்' என்னும் விதிக்குக் கடவுள்களும் கூட தப்ப முடியவில்லை - என்பதையே கடந்த கால வரலாறு காட்டு கிறது.

**– 'மதம், கடவுள், மனிதன் – வளர்ச்சி வரலாறு' நூலில் புலவர் செந்தலை ந. கவுதமன்**

**வந்த கடிதம்**

## கொளத்தூர் மணி உரை

சூலை 17, 2008 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழில் அய்யா கொளத்தூர் மணி அவர்களின் 'பெரியாரை எதிர்த்தவர்கள் திசை மாறிய கதை' சொற்பொழிவைப் படித்தேன். தந்தை பெரியாரின் தத்துவத்தில் சிந்தை பறிகொடுத்து வந்தவர்கள், பின்னர் தன்னலத்தால் எப்படித் தடம் மாறிப் போனார்கள் என்பது என் போன்றோர் நினைவில் மறுபதிப்பு; இன்றைய இளைஞர் களுக்கு வேண்டிய மனப்பதிவு.

வடமொழி என்பதற்காக வரலாற்றோடு இணைந்த பெயர்கள் பிரிக்க முடியாதவை என்பததை நன்றாக விளக்கி இருந்தார். ஆனால் இராவணன் என்பது வடமொழி யன்று என்பது என் கருத்து.

**–திருவை அரசு, திம்மக்குடி.**

# கடலுக்கு மேலே இருப்பவைதான் பாலம்: ராமன் பாலம் - கடலுக்கு கீழே போனது ஏன்?

## புரட்டுவாதங்களுக்கு இயக்குனர் சீமான் பதிலடி!

*அவரவர் செய்த பாவங்களுக்கு தண்டனை நரகத்தில் இருந்தது என்றால், நாட்டில் நீதிமன்றங்கள் எதற்கு என்று, இயக்குநர் சீமான் கேட்டார். கடலுக்கு மேலே இருந்தால் தான் பாலம்; கடலுக்கு கீழே எப்படி ராமன் பாலம் போனது என்றும் கேள்வி எழுப்பினார்.*

*ஜூன் 15 அன்று சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய காமராசர் பிறந்த நாள் விழா கூட்டத்தில் பங்கேற்று இயக்குனர் சீமான் ஆற்றிய உரை, சென்ற இதழின் தொடர்ச்சி:*

கோயில் உண்டியல் காணோம் காவல் துறையே நடவடிக்கை எடுக்கனும்னா, கோயில் உண்டியலையே காவல்துறை தான் காப்பாற்றுதுனா கடவுளைவிட காவல்துறைக்கு சக்தி அதிகம் இல்லையா. அவர்கள் காலில் விழுந்து கும்பிடு.

கேரளாவில் மீரா ஜாஸ்மின் என்ற கிருத்துவ பெண் இந்துக் கோவிலுக்குள் சென்றதால் சாமிக்கு தீட்டாயிடுச்சாம். அப்படியானால் கடவுளைவிட மீரா ஜாஸ்மின்னுக்கு சக்தி அதிகமா? அவர் காலில் விழுந்து கும்பிடுங்க (கைதட்டல்) என்ன பைத்தியக் காரத்தனம். அறிவு கெட்ட நிலை. காலங்காலமாக ஆண்டாண்டு காலமாக இந்த மக்களை சிந்திக்கிற திறனற்று அதே இடத்தில் நிற்க வைத்து வாக்கு பறித்து ஆளவும், வாழவும் பழகிக் கொண்ட பார்ப்பனர்களின் சதி.

இந்து மதம் என்கிறாயே? உன் மதத்தை தோற்று வித்தவன் யார்? இந்து மதம் என்கிற ஒரு மதத்தை உருவாக்கியவனே வெள்ளைக்கார கிருத்துவன் தானே? இல்லை என்று உன்னால் மறுக்க முடியுமா?

யார் இந்து? எவன் கிருத்துவன் இல்லையோ, யார் இஸ்லாமியன் இல்லையோ, யார் பார்சி இல்லையோ, யார் யூதன் இல்லையோ, அவன் இந்த நாட்டில் அரசியலமைப்புச் சட்டப்படி இந்து மதத்தைச் சார்ந்தவன் என்று வெள்ளைக்காரன் எழுதினான். நான் சொல்லவில்லை. இதற்கு முன்னால் இருந்த பெரியவா காஞ்சி சங்கராச்சாரியார் சொன்னார், வெள்ளைக்காரன் வந்தானோ இல்லையோ, நாம தப்பிச்சோம் என்றார். உன் மதம் என்ன நெறிப் படுத்தியது. நீங்க படம் போறீங்க, பக்தி படமா இருந்தா நம்ம பெண்களுக்கு சாமி வருதே. அதே திரையரங்கில் பால்கனியில் உட்கார்ந்து படம் பார்க்கும் பெண்களுக்கு சாமி வந்து, நீங்கள் பார்த்ததுண்டா? காரில் வந்திறங்கி படம் பார்க்கும் பெண்களுக்கு சாமி வந்து ஆடி பார்த்ததுண்டா? ஒரு பாப்பாத்தி சாமி வந்து, பேய் பிடிச்சி ஆடி பார்த்ததுண்டா? கோயிலுக்கு வெளியே நிற்கும் உழைக்கும் பாட்டாளி வர்க்கம், இந்தத் தமிழன் தானே ஆடுகிறான், சாமி வந்தது என்று. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கோயிலின் உள்ளே சிறிய மணியை ஆட்டுகிற ஒரு பார்ப்பானுக்கு சாமி வந்திருக்குதாடா இந்த நாட்டிலே? ஆட மாட்டான், ஏன் தெரியுமா? அவனுக்கு எங்கள் அய்யா பெரியாரை விட நல்லாவே தெரியும் கடவுள் இல்லை என்று. இல்லை என்றால் கோயில் வாசலில் வைத்து சங்கரராமனை கொலை செய்வார்களா? இல்லாத ராமனுக்கு கோயில் கட்டுவானாம்; இருக்கின்ற இராமனை தீர்த்துக் கட்டுவானாம். (கைதட்டல்) என்ன பைத்தியக்காரத்தனம். இதை நாங்கள் கேட்கக் கூடாது; பேசக் கூடாது என்றால் எப்படி? எம் மக்களுக்கு யார் சொல்லித் தருவார்கள்? இதை யார் உணர்த்துவார்கள்? எவ்வளவு காலமாக இதையே சொல்லிச் சொல்லி மடமையில் தள்ளுவீர்கள்?

இந்து மதம், இந்து என்று சொல்லுகிறான் என்றால் எதற்காக? வாக்கு சேகரிக்க. சாதிக் கட்சியாக இருந்தால் எந்த இடத்திலும் கட்டிய முன் பணம்கூட பெற மாட்டோம் என்பது தெரியும். அதனால் தான் கடவுளின் பெயரால் மதத்தின் பெயரால் இங்கே பயன்படுத்தி வருகிறான். எப்படி கிருத்துவனுக்கு பல நாடுகள் இருக்கு, இசுலாமியனுக்கு, பவுத்தனுக்கு பல நாடுகள் இருக்கு. ஆனா, இந்துக்களுக்கு ஒரு நாடு இல்லை. யாரு இந்து இங்கே, தாழ்த்தப்பட்ட பள்ளன், பறையன் இந்துவா, ஏன் இந்த இந்து மதத்தை சாட வேண்டி இருக்கிறது. மக்களே, ஒரு தாழ்த்தப்பட்டவர், ஒரு கிருத்துவனாக மாறிவிட முடியும். ஒரு இசுலாமியனாக மாறிவிட முடியும். ஆனால், இவர்கள் பார்ப்பனாக மாறி விட முடியுமா? ஒரு போதும் இந்த நாட்டில் ஆக முடியாது. அப்படியானால் எது கொடுமை?

தீண்டாமையைப் பற்றி எல்லாம் பேசு வான்.



ராஜாவே! உன் முதுகில் இருக்கும் பூணூல் உன் தோட்டத்தில் விளைந்ததா? என் தோழன் தோட்டத்தில் விளைந்த பஞ்சாலே தானே பூணூல் செய்து போட்டிருக்கிறாய். அப்போது தீட்டு வரலையா? இந்த நாட்டில் எந்த பார்ப்பானாவது விவசாயம் செய்கிறான் என்று சொல்ல முடியுமா? உழைக்கிற எல்லா வேலையும் செய்து, செல்வங்களை செழிக்க வைப்பது எம்மினம் தானே?

கடவுள் என்கிறாய், இராமன், பிள்ளையார் என்கிறாயே! இராசாவே ஈசுவரன் யார்? ஈஸ்வரி யார்? தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பிறந்த பிள்ளையார் மட்டுமே எப்படி பார்ப்பான் ஆனான்? இதற்கு பதில் சொல்லுங்கடா.. பிள்ளையாருக்கு மட்டும் காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி மட்டும் தெருவுக்கு இரண்டு பிள்ளையார் வைத்து கும்பிடுகிறீர்களே! அவனுடைய தம்பி முருகன், அவனும் இந்துக் கடவுள் தானே. அவனேதிருத்தணியிலிருந்து வடக்கு நோக்கி ஒரு அங்குலம் நகர்த்துங்கடா பார்க்கலாம். என்ன கொடுமை!

### இராமனுக்கு என்னடா சக்தி?

*நாம் கட்டிய பாலம் எல்லாம் கடலுக்கு மேலே இருக்கிறது. இராமர் கட்டிய பாலம் மட்டும் ஏன் கடலுக்கு அடியிலே போகனும். கடவுளுக்கு சக்தியில்லாமல் போய் விட்டதா? இராமன் எதற்காக பாலம் கட்டினான்? இலங்கைக்கு செல்வதற்கு எதற்காக? இராவணன் இராமன் பெண்டாட்டியை தூக்கிக் கொண்டு போய் விட்டானாம். நாமே அரை மணி நேரம் மனைவியைக் காணவில்லை என்றால் இங்கும் அங்கும் தேடுவோம்; காவல் நிலையத்திற்கு செல்வோம். ஆனால் இராமன் பொறுமையாக குரங்குகளை, அணில்களை கொண்டு பாலம் கட்டிக்கிட்டிருந்திருக் கிறான். அணில் கல் எடுத்துக் கொடுத்ததாம். அணில் கல் எடுத்துக் கொடுத்துத்தான் பாலம் கட்டனும்னா இராமனுக்கு என்னடா சக்தி இருக்கிறது? இராமர் செல்லமாக அணிலை வருடி விட்டாராம், மூன்று கோடு விழுந்ததாம். இந்தியாவிலுள்ள அணிலுக்கு இராமர் கோடு போட்டார். ஆஸ்திரேலியா விலுள்ள அணிலுக்கும் கோடு இருக்கிறதே, அதற்கு யார் போட்டது? இராமர் விரல்பட்ட இடம் எல்லாம் கோடா இருந்தால், சீதை வரிக் குதிரையாக அல்லவா இருக்க வேண்டும். (கைதட்டல்) இதையெல்லாம் சிந்தித்துப் பேசினால், இந்துக் கடவுள்களை மட்டுமே பேசகிறார்கள் என்பதா? இவையெல்லாம் கடவுளா? 60 ஆயிரம் பெண்டாட்டிகளைக் கட்டி, 6 ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தாரு தசரதன். ஒரு பெண்டாட்டிக் கட்டி வாழ் பவனுக்கே இல்லாத பொல்லாத நோய்களெல் லாம் வருகின்றது. 60 ஆயிரம் பெண்டாட்டி களோடு வாழ்ந்திருந்தா, எயிட்ஸ் வந்தில்ல செத்திருக்கணும். இதை சொன்னா என்ன தப்பிருக்கு.*

**சீமான் உரையிலிருந்து**

இந்து, இந்து என்று சொல்கிறாயே, அந்த இந்து தானே தமிழ் ஈழமண்ணில் போராடுகிறான். அதற்கு குரல் கொடுத்து, அந்த விடுதலைக்கு போராடேன் பார்ப்போம். அந்த விடுதலைக்காக ஒருத்தனாவது பேசியிருக்கிறீர்களாடா? இந்த நாட்டிலே அது குறித்து சிந்தித்திருக்கிறீர்களா? சிந்திக்க மாட்டீர்கள்.

ராஜா சொல்கிறான், பெரியார் சுதந்திர தினத்திற்கு எதிராக கருப்புக்கொடி ஏற்றிவிட்டாராம். அதனாலே அவர் தேச துரோகியாம். எதற்கு ஏற்றினார் கருப்புக் கொடி என்பது தெரியுமா? சுபாஷ் சந்திரபோஸ் கூட இந்த தேச விடுதலைக்காக இராணுவம் கட்டி போராடியவர். அவர் சொன்னார், சுதந்திரம் வாங்கினால் அதை மக்களுக்கு 20 ஆண்டுகளுக்கு சொல்லாதீர்கள் என்று. அது என்ன குற்றமா? ஏன் சொன்னார்? அடிமைத்தனத்தில் இருந்த மக்களை அதே அடிமைத்தனத்தில் வைத்து கடுமையாக உழைக்க வைத்து வளத்தையும், செல்வத்தையும் பெருக்கிவிட்டு இந்த நாட்டில் சுதந்திரத்தை அறிவித்து கொடுங்கள் என்று சொன்னார் சுபாஷ் சந்திர போஸ்.

காங்கிரஸ் கட்சியை கலைத்து விடுங்கள் என்று நேருவிடம், காந்தி சொல்லுகிறார். ஆனால் நேரு ஒத்துக் கொள்ளவில்லை. தந்தை பெரியார், “ஒரு முழுமையான கல்வி அறிவு இல்லாமல், படிப்பறிவு தெளிந்து சிந்திக்கக் கூட திறனில்லாமல் இருக்கும் மக்களிடத்தில் ஒரு ஜனநாயகத்தை கொடுத்தால், அவனுக்கான சரியான தலைவனை தேர்ந்தெடுக்க முடியாமல் திணறி விடுவான். தவறு செய்து விடுவான் என்று அச்சப்பட்டுத்தான் முதலில் கல்வியைக் கொடு, பிறகு சுதந்திரத்தைக் கொடு என்றார். அந்தக் கல்வியை மறுக்கும் வர்ணாஸ்ரமத்தைப் பாது காக்கும் பார்ப்பானின் கீழ் எங்கள் மக்கள் சுதந்திரம் பெறுவதை எதிர்த்தார். எங்கள் நாட்டைத் தனியாகப் பிரித்துக் கொடுத்து விடு என்றார். அந்த பார்ப்பான் சுதந்திரத்திற்கு எதிராக கருப்புக்கொடி ஏற்றச் சொன்னார் எங்கள் அய்யா. கல்வி அறிவு இல்லாத சுதந்திரத்தை தந்ததால்தான் ராஜாவே நீயெல்லாம் மத்திய அமைச்சராப் போயிட்டே. என் அன்பு மக்களுக்கு வாக்களிக்க தெரியலையே. தனக்கான தலைவன் யாருன்னு தெரியலையே. மூக்குத்திக்கும், பிரியாணி பொட்டலத்துக்கும், 100 ரூபாய் காசுக்கும் வாக்களிக்கும் கீழ்த்தரமான சனநாயக நாட்டில் என்னடா சுதந்திரம் இருக்குது.

தமிழை காட்டுமிராண்டி மொழின்னு சொல்லிட் டாருன்னு, ராஜாவே சொன்னியே. உன் சங்கராச்சாரி, தமிழ் மொழியை நீச மொழி, தேவிடியா மொழின்னு சொன்னானே, அதைவிடவா கேவலமா எங்கள் அய்யா சொன்னார், ஏன் சொன்னார்? இந்த புராண புளுகுகளிலிருந்து இந்த மொழியை பிரிக்க முடியலியே என்ற வேதனையில் சொல்றார்.. அய்யா சொல்றார், ஒருவர் முழுமையான தமிழ் பற்றாளராய், தமிழை விரும்புவாரேயானால் நான் காலங்காலமாக அடிமையாய் இருப்பேன் என்று சொல்றார். ஏன் காட்டுமிராண்டி மொழின்னு சொல்றாரு. உங்க இராமாயணம், மகாபாரதம், பாஞ்சாலி சபதம் என்ற எழவு, கருமாதி, தேவாரம், திருவாசகம், இந்த புராண புளுகுகளை சுமந்த மொழியாக இந்த தமிழ் இருந்து கொண்டிருக்கிறதே என்ற வேதனையில்தானே. மொழியின் மேலே, இந்த நாட்டு மக்கள் மீது பற்று இல்லாமலா தனித் தமிழ்நாடு கேட்டார்?

### கூறு போட்ட சமஸ்கிருதம்

அவர் தாத்தா பாட்டி பூர்வீகக் குடி பிறந்த மண் கர்நாடகாவிலே இருக்கு. ஆனால் தனித் தமிழ்நாடு கேட்டு இந்திய தேசிய வரைப்படத்தை தமிழ்நாடு நீங்கலாக எரிக்கிறபோது அவர் தாயக மண்ணான கர்நாடகமும் வரைபடத்தில் சேர்ந்துதான் எரிந்தது என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம். ராசாவே நீ யாரு, இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக எங்கள் இனத்துக்கு துரோகம் செய்பவர்கள் தானேடா நீங்கள்? இமயம் வரை பரவியிருந்த ஒரு தேசிய இனம் இன்றைக்கு மலையாளிகளாகவும், தெலுங்கர்களாக வும், கன்னடர்களாகவும் பிரிந்துப் போனதற்கு காரணமே பார்ப்பன ஆரிய மொழியான சமஸ் கிருதம் தான். தமிழ் மொழியோடு இந்த மொழியை கலந்து பேசியதின் விளைவு தான் இத்தனை மொழிகள், மறுக்க முடியுமா?

காரியம் என்ற சொல் இருக்கும் போது விசேஷம் என்ற சமஸ்கிருத சொல்லை நாம் பயன்படுத்து கிறோம். அவன் காரியத்தை கெட்டதுக்கு வைச்சான். மகிழ்ச்சி என்ற சொல் இருக்கும் போது சந்தோஷம் என்ற சொல்லை பயன்படுத்தினோம். கோயில் என்ற சொல் இருக்கும் போது ஆலயம் என்று பேசினோம். சோறு என்ற சொல் இருக்கும்போது சாதம் என்ற பேசினோம். மிளகு சாறு என்பதை ரசம் என்றோம். கருவி என்பதை ஆயுதம் என்றோம். இப்படி பேசிப் பேசியே ஏற்பட்ட மொழி திரிபில் கலப்பில்தான் இவ்வளவு பெரிய தமிழ் தேசிய இனம் சிக்குண்டு சிதறிப்போனது என்பது வரலாற்று உண்மை. சேர, சோழ, பாண்டியன் என்ற தமிழ் மூவேந்தர்கள். அதில் சேர மன்னன் மலையாளம் பேசிக் கொண்டு கேரளா போனான் என்பது நீங்கள் ஆய்வு செய்தால் தெரியும்.

(தொடரும்)

REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# இளம்பிள்ளையில் கழகம் நடத்திய மாபெரும் பரப்புரை கூட்டம்



காரிமங்கலத்தில் கழகத்தில் இணைந்த புதிய தோழர்கள்

முதல் பக்கத் தொடர்ச்சி

மாதக்கூட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது. கழக ஏட்டுக்கு சந்தா சேர்க்கவும் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

**மீனவர் படுகொலையைக் கண்டித்து, மதுரையில் கழகம் ஆர்ப்பாட்டம்**

தமிழக மீனவர்களை தொடர்ந்து கொன்று குவித்துவரும் சிங்கள இனவெறி அரசைக் கண்டித்தும், அதை வேடிக்கைப் பார்க்கும் இந்திய அரசைக் கண்டித்தும், 22.2.08 செவ்வாய்கிழமை காலை 10.30 மணியளவில் மேலமாசி வீதி, வடக்கு மாசி வீதி சந்திப்பு முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

மாவட்டத் தலைவர் மா.மாயாண்டி தலைமையில், தூத்துக்குடி பால் பிரபாகரன், ஆ. முருகேசன், அ. பெரியசாமி, மு.தமிழ்ப்பித்தன், ஸ்டாலின், பாண்டி, கைவண்டிக் கருப்பு, திராவிடமணி, அகராதி, வெண்மணி, விடுதலை சேகர் மற்றும் இயக்கத் தோழர்கள் முன்னிலை யில், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் மு.கருப்பையா, தமிழர் தேசிய இயக்கம் வெ.ந.கணேசன், தமிழ்த் தேசப் பொது வுடைமைக் கட்சி இராசு, ஆதித்தமிழர் பேரவை நாகை திருவள்ளுவன், வழக் கறிஞர் கு.பகத்சிங், வன்கொடுமைக்கு எதிரான வழக்கறிஞர் ஆர்வலர் மையம் மற்றும் வழக்கறிஞர்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

**இளம்பிள்ளையில்...**

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை யில் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சியின் இடையிடையே வெவ்வேறு தலைப்பு களில் கழகத் தலைவர் மூன்று முறை சிறப்புரை நிகழ்த்த புதிய முறையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இளம்பிள்ளை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் 21.7.2008 திங்கட் கிழமை மாலை 7 மணிக்கு பகுத்தறிவுப் பிரச்சாரப் பொதுக் கூட்டம் மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவின் பகுத்தறிவுப் பாடல் களுடன் துவங்கியது. தோழர்கள் குமரப்பா, முத்துக் குமார், கோவிந்தராஜ் ஆகியோர் சிறப்பாக பாடி முடித்தனர். தொடர்ந்து மாவட்ட இளைஞரணி தலைவர் அ.கோகுல கண்ணன் வரவேற் புரையாற்றி னார். மாவட்ட துணைத் தலைவர் ஆ.செழியன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி யில் புராணக் கதைகளையும், கடவுளர் கதைகளின் ஒழுக்கக் கேடான செய்தி களையும் மக்களிடம் விளக்கினார். மாவட்ட செயலாளர் சக்திவேல் உரையை அடுத்து சிற்பி. இராசன் நிகழ்ச்சியை தொடர்ந்தார். கழகத் தலைவர் தனது சிறப்புரையை துவங்கும் முன் மூன்று தலைப்புகளில் 1. பகுத்தறிவு, 2. இட ஒதுக்கீடு, 3. ஈழச் சிக்கல் என்ற முறையில் உங்களுடன் கருத்துகளை பகிர்ந்து கொள்கிறேன் என்று அறி வித்து, பகுத்தறிவு என்ற தலைப்பில் பாமர மக்களுக்கும் புரியும்படி சிறப் பான உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிற்பி இராசன் பிள்ளையார் சிலை எப்படி பால் குடித்தது என்ற மோசடியை அம்பலப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் இடஒதுக்கீடு என்ற தலைப்பில், பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்தும் வகுப்புவாரி பிரதி நிதித்துவ தீர்மானத்தை நிறைவேற்ற முடியாததால் காங்கிரசை விட்டு வெளியேறிய வரலாற்று செய்திகளை யும், பார்ப்பனர்களின் இடஒதுக்கீட் டுக்கு எதிரான சதியையும் விளக்கிப் பேசினார். தொடர்ந்து சிற்பி இராசன், பிரேமானந்தா, சாய்பாபா போன்ற சாமி யார்களின் மோசடிகளை தந்திரத்தால் செய்து விளக்கம் கொடுத்தார். தொடர்ந்து கழகத் தலைவர் ஈழச் சிக்கல் தலைப்பில் விடுதலைப் புலிகளின் நிலைப் பற்றியும், ஈழத்தில் நடைபெறும் இனவெறி தாக்குதல் பற்றியும், புலிகளின் போர் நேர்மையையும், இலங்கை அரசின் போர் நிறுத்த ஒப்பந்த மீறல் களையும், இந்திய அரசின் ஆயுத உதவிகள் பயிற்சிகளால் ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களையும் மக்களிடம் விளக்கினார்.

இனிவரும் காலங்களில் தமிழர் பிரச்சினையில் கட்சி பாகுபாடுகளை கடந்து அனைவரும் போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, தனது உரையை நிறைவு செய்தார். தொடர்ந்து சிற்பி இராசன் தான் செய்து காட்டிய பல நிகழ்ச்சிக்கு விளக்கம் தந்து முடிவு செய்தார். மாலை 7 மணி முதல் இரவு 11 மணி வரை கூட்டம் கலையாமல் எந்த ஒரு அரசியல் கட்சிக் கும் கூடும் கூட்டத்தைக் காட்டிலும் பல மடங்கு பொது மக்கள் கூடியிருந்து இறுதி வரை கருத்துகளை கேட்டது கூட்டத்திற்கு மிகச் சிறப்பாக அமைந் தது. கு. சௌந்தரராசன் நன்றியுரை கூற கூட்டம் நிறைவுற்றது.

**செய்தி : அ. முத்து மாணிக்கம்.**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 2451 2857

## குடிஅரசு பெரியாரின் எழுத்தும் - பேச்சும் 1925 - 1938

## முன் வெளியீட்டுத் திட்டம்

*தமிழ் மக்களுக்குத் தேவையான சில கருத்துகளைச் சொல்லிப் பதிந்தாக வேண்டும். இன்று ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நாளை ஒரு நாள் ஏற்றுக் கொள்ளும் நிலை வரும். இக் கருத்துகளை சொல்லும் நிலையில் நான் தான் இருக்கிறேன். சொல்ல வேண்டிய கருத்துகளை நானே எழுதி, நானே அச்சுக்கோத்து, நானே அச்சிட்டு, நானே படித்துக் கொள்ளும் நிலைக்குப் போனாலும் குடிஅரசை வெளியிட்டு, என் கருத்துக்களை வரும் தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டியது எனது கடமை (குடிஅரசு 10.06.1929)* **- தந்தை பெரியார்**

தமிழர்களின் நீண்டகால விருப்பம் இப்போது செயல் வடிவத்தில்

வரலாறு படைத்திட்ட - தமிழர் வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சிகர பச்சை அட்டை 'குடிஅரசு' ஏட்டில் பெரியார் எழுதிய கட்டுரைகள் - தலையங்கங்கள் - அறிக்கைகள் - பேச்சுக்களை முழுமையாகத் திரட்டி, கால வரிசைப்படி தொகுத்து தமிழ் கூறும் நல்லுலகத்தின் முன் பெரியார் திராவிடர் கழகம் பெருமையுடன் ஒப்பளிக்கிறது!

1925 முதல் 1938 முடிய சுயமரியாதை இயக்கக் காலம் முழுவதும் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

ஏற்கனவே கழகத்தால் வெளியிடப்பட்ட மூன்று தொகுதிகளும், பல புதிய சேர்க்கைகளோடு, இத்தொகுதிகளோடு இணைத்து பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் தேதி வெளியிடப்படுகிறது.

- மொத்தம் 27 தொகுதிகள்!
- ஒவ்வொரு தொகுதியும் சுமார் 400 பக்கங்கள்!
- உயர்தர நேச்சுரல் ஷேட் புக் பிரிண்ட் தான்!
- நூலின் அடக்கவிலைக்கே பெற்றிட அரிய வாய்ப்பு!
- ரூ.5400 விலையுள்ள இத்தொகுதிகள் முன்பதிவுத் திட்டத்தின் கீழ்
- ரூ.3500-க்கே உங்களுக்குக் கிடைக்கும்.
- ரூ.3500 முன் பதிவு செய்து கொள்ள வேண்டிய கடைசி நாள் ஆகஸ்ட் 31 (31.08.2008)

**மற்றொரு மகிழ்ச்சியான அறிவிப்பு!**

1928 முதல் 1930 வரை பெரியார் நடத்திய 'ரிவோல்ட்' வார ஏட்டின் முக்கிய கட்டுரைத் தொகுப்பு நூலும் (சுமார் 800 பக்கங்கள் - தோழர்கள் எஸ்.வி. இராஜதுரை - வ.கீதா தொகுத்தது), செப்.17 இல் வெளிவருகிறது. ரூ.400 விலையுள்ள இந்த நூலுக்கு முன் பதிவுக் கட்டணம் ரூ.250 மட்டுமே.

**குடிஅரசு முன் பதிவு செய்வோருக்கு கட்டணமின்றி 'ரிவோல்ட்' இலவச பரிசாக வழங்கப்படும்.**

இந்தத் தொகுதிகளை நீங்கள் விரும்பும் நூலகத்துக்கும், பள்ளி கல்லூரிகளுக்கும், ஆய்வு மய்யங்களுக்கும் நினைவுப் பரிசுகளாக வழங்கி, என்றென்றும் நிலைக்கும் புகழுக்குரிய கடமையை ஆற்றலாம். தமிழின உணர்வாளர்களே! பெரியாரியலாளர்களே! சமூக மாற்றத்துக்கு உழைக்கும் தோழர்களே! முன்பணம் செலுத்தி, உங்கள் தொகுதிகளை உறுதி செய்து கொள்ளுங்கள்!

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தா.செ.மணி**, பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை-1, சேலம் மாவட்டம்-636 401.
வரைவோலையாகவோ (D.D.), பணவிடையாகவோ (எம்.ஓ.) அனுப்பலாம்.
**'T.S. MANI'** என்ற பெயரில் வரைவோலை எடுக்க வேண்டும்.
மேட்டூர் அணையில் மாற்றத்தக்க வங்கி வரைவோலைகளாக இருத்தல் வேண்டும்.
காசோலை (Cheque) ஏற்க இயலாது.

**— பெரியார் திராவிடர் கழகம்**

## தொலைபேசி ஒட்டு கேட்பு

## அரசின் பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரிபாதி - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் இயக்குனராக இருந்த உபத்தியாயாவிடம் ஜெயலலிதாவின் கொட நாடு எஸ்டேட் வழக்கு தொடர்பாக தொலைபேசியில் பேசிய உரையாடலை ஆங்கில நாளேடு ஒன்று வெளியிட்டது. தொடர்ந்து சமூக நலத் துறை அமைச்சர் பூங்கோதை, தனது உறவினர் ஒருவரை லஞ்ச ஊழல் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு - அதே அதிகாரி திரிபாதியிடம் தொலைபேசியில் பேசியதும் அம்பலமானது. இந்த நிலையில் தமிழக அரசு இது பற்றி ஆராய நீதிபதி சண்முகம் தலைமையில் விசாரணைக் குழு அமைத்தது. அந்தக் குழுவும், தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துவிட்டது.

அறிக்கையைத் தந்தப் பிறகு உள்துறை செயலாளர் மாலதி, ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் ஊழியராக பணியாற்றும் சங்கர் பெயரைக் குறிப்பிட்டு, ரகசியக் கடிதம் ஒன்றை சி.பி.சி.அய்.டி. எனும் புலன் விசாரணைக் குழு தலைவருக்கு எழுதியுள்ளார். அதனடிப்படையில் சங்கர் கைது செய்யப்பட்டு, அவரது வீட்டிலும், சி.பி.சி.அய்.டி. அலுவலகத்திலும் நிர்வாணமாக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, அவரிடம் ஒப்புதல் வாக்கு மூலம் கோரப்பட்டது. நேர்மையான அரசு ஊழியரான சங்கர், தகவல் உரிமை பெறும் சட்டத்தின் கீழ் பல உண்மைகளை வெளிக் கொண்டு வருகிறார். ஜெயலலிதா ஆட்சியில் நடந்த முறைகேடுகளையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

நேர்மையான மக்கள் பணியில் ஆர்வம் காட்டி செயல்படும் சங்கரைப் பழிவாங்கும் நோக்கத்தோடு நடந்துள்ள கைது சித்திரவதைக் கண்டித்து, சென்னையில் 28.7.2001 அன்று மெமோரியல் ஆல் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது. மனித உரிமைகள் மற்றும் நலங்களுக்கான வழக்கறிஞர்கள் மய்யம். தமிழக மக்கள் உரிமைக் கழகம், கல்வி மேம்பாட்டு இயக்கம் சார்பில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேராசிரியர் கல்யாணி, பழ. நெடுமாறன், தியாகு, பேராசிரியர் மு.திருவளவன், பேராசிரியர் சிவகுமார் உள்ளிட்ட பலரும் உரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 1st August 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.